உ

சிவமயம்.

பக்தசந்த்ரிகா

Ge. 55328 / 2002

இஃது

தெய்வபக்தி ஈகை தயை பொருமை சத்தியம் முதலான மேலான உத்தம குணங்கள் ஜனங் களுக்கு விருத்தியாகும் பொருட்டு

பல விதவான்களால் எழுதுவித்து

(*)

ம - ள - ள - ஸ்ரீ

ஆர். சுப்பிரமணிய அய்யர் அவர்களால்.

பிரசுரஞ் செய்யப்பட்டது.

MADRAS

1901

F M Press

Copyright Reserved.

இதன் விலை அணை. 12

விஷய சூசிகை

ச ர பா.		பக்கம்
1	தெய்வ வணக்கம்	1
2	தெய்வ வழிபாட்டின் பலன்	,,
3	கல்யாண சரித்திரம்	2
4	இந்திரனுக்கு மாயத்தால் ஏற்பட்டது	20
5	ஜயதேவோபாக்கியானம்	32
6	துளசீதாசோபாக்கியானம்	40
7	கங்காபுரி ராஜாவின் அரசாட்சி	53
8	நாகானந்தம்	59
9	பத்மாசுர ஸம்ஹாரம்	71
10	கூர்மஸம்ஹாரம்	72
11	மச்சஸம்ஹாரம்	76
12	வராகஸம்ஹாரம்	77
13	நரஸிம்மஸம்ஹாரம்	79
14	சண்டேசோபாக்கியானம்	84
15	உஷாகல்யாணம்	89
16	இராமாயண படன மகிமை	95
17	இரண்டு பக்தர்களின் சரித்திரம்	99
18	சிபிச்சக்கரவர்த்திசரித்திரம்	103
19	பூலோகபிரமாவின் கதை	113

உ

சுபமஸ்து

பக்தசந்த்ரிகா.

தெய்வவணக்கம்.

"தெய்வந் தொழுவோர்க்கு உய்வுண்டாகும்" என்பதோர் சிறந்த வாசகம். எங்கும் பிரகாசமாய், ஆநந்தஸ்வரூபமாய், சர்வசாக்ஷியாய், எள்ளில் எண்ணெய்போலும், பூவில் மணம்போலும், பரிபூர்ண ஸ்வயம்பிரகாசமாய், பரமதயாளுவாய் விளங்கும் ஸாக்ஷாத் பரப்ரம்மத்தை நாம் ஸர்வதாகாலமும் துதித்து வணங்கி இன்பமடையவேண்டும். ஈசுவரனை எந்தவிதமாக ஆராதித்தாலும் கருணாநிதியாகிய அவர் நமக்குக் கிருபைசெய்யக் காத்திருக்கிறார். பரப்ரம்மத்தைச் சிவபெருமானாகவும், ஸ்ரீமந் நாராயணனாகவும், கணேசனாகவும், சுப்பிரமண்ணியனாகவும் இன்னும் பற்பலவாறாகவும் அநேகர் பாவித்து வழிபடுகிறார்கள். உலகத்தில் ஏற்பட்டிருக்கிற ஸர்வமதங்களும் ஈஸ்வரனை யறியும்பொருட்டேயன்றி வேறல்ல; ஆதலால், புத்திமான்கள் எந்த தெய்வத்தையும், எந்த மதத்தையும் இகழமாட்டார்கள். எந்த ஜாதியிற் பிறந்தாலும் தன்னிடத்தில் மெய்யன்போடு பக்தி செய்பவர்களிடமே ஈஸ்வரன் விசுவாசங்கொண்டு அநுக்கிரகிக்கிறார் என்று வேதாகமங்கள் கோஷிக்கின்றன. நாம் செய்த தீவினை யொழிந்து சுகாதமடையவேண்டுமானால், நாம் யாவராலும் கொண்டாடப்படவேண்டுமானால், துக்கரூபமாகிய இப் பிரபஞ்ச வாழ்க்கை நம்மைத் தொடராதிருக்கவேண்டுமானால் நாம் எப்போதும் ஈஸ்வர தியானம் செய்யவேண்டுவதவஸ்யம். அப்படிச் செய்தால் நாம் விரைவாக தெய்வ அருட்குப் பாத்திரராகிப் பேராநந்த மடைந்துய்வோமென்க.—சுபம்.

தெய்வவழிபாட்டின் பலன்.

இவ் வுலகத்தில் நாம் பிறந்தநாள்முதல் இதுகாறும் அநுபவித்த சுகதுக்கங்களுக்கு அளவில்லை. அது சமுத்திரத்திற் றோன்

ளோடு விளையாடினன். அப்போது அங்கிருந்த ஒரு செங்கல்லை யெடுத்து, அதற்குப் பிள்ளையாரென்று பேரிட்டு அதனை ஓரிடத்தில் வைத்துப் பூசித்து மகிழ்ந்து தன் வீட்டிற்குப் போயினன். மற்றப் பிள்ளைகளும் அவரவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். வல்லாளனென்னுங் குழந்தை இரவெல்லாம் தோப்பிலெழுந்தருளி யிருக்கும் கணபதி ஞாபகம் மாறாமல் தூக்கமின்றி எப்போது பொழுது புலரப் போகின்றது, எப்போது நமது சுவாமியைச் சென்று பார்க்கப்போகின்றோமென்று எண்ணிக்கொண்டேயிருந்து விடிந்தமாத்திரத்தில் எழுந்து தோப்பிற்சென்று அங்கு வந்து கூடிய பிள்ளைகளைக் கூட்டிவைத்துக்கொண்டு ஒருவன் பூப பறித்திடவும், ஒருவன் திருமஞ்சனத்திற்குப் பால் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் தயிர் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் தேன் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் பழம் தேங்காய் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் தாம்பூலம், ஒருவன் சந்தனம், ஒருவன் பன்னீர், ஒருவன் புஷ்பம், ஒருவன் சுத்த ஜலங் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் அபிஷேக திரவியம் கொண்டுவந்து கொடுக்கவும், ஒருவன் தீபங்கொண்டுவந்து ஏற்றவும், ஒருவன் தூபங் கொண்டுவந்து போடவும், ஒருவன் வாத்தியங் கொண்டுவந்து முழக்கவும், ஒருவன் நிவேதனங்கொண்டுவந்து படைக்கவும், இவ்வாறு பலர் பலவிதமான தொண்டுகள் புரியவும் ஸ்ரீவிநாயக பூசையை முறையாக முடித்து மகிழ்ந்து வீட்டுக்குப் போயினன் இப்படியே தினந்தோறும் செய்து கொண்டு வருவான். இந்த விளையாட்டு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தமையால், பிள்ளைகள் தத்தம் வீடுபோய்ச் சேருவதற்குக் காலதாமதமாய்க்கொண் டிருந்தது. இவ்வாறு பலநாள் கழியவும், ஒருநாள் பிள்ளைகள் வீட்டு ஞாபகமே விட்டு விளையாட்டயர்ச்சியிற்றிளைத்து இன்புற்றிருந்தார்கள். அன்று பகலிரவெல்லாம் கழிந்தும் பிள்ளைகள் வீடுவந்து சேராமையால் அவரவர்களது தாய்தந்தையர்கள் பிள்ளைகளைத் தேடிச் சென்று பெருந்துயருழந்து திரிந்தார்கள். எங்கும் பிள்ளைகளைத் தேடிக்காணாமையால் மனந்தளர்ந்து பெருமூச்சு செறிந்து தெய்வகதியாகத் தோப்பிருந்த மூலையைநோக்கிச் சென்றபோது அங்குச் சிவகணங்களோ இவர்களென்று சொல்லும்படி விபூதியினால் உடம்பெல்லாம் வெளுத்து ஹரஹர சிவசிவ என்று உச்சரித்து விளை

யாடிக்கொண்டிருந்த குழந்தைகளைப் பார்த்து அவரவர்களுங் கட்டியணைத்து முத்தமிட்டு மகிழ்ந்து பரவசரானார்கள். அப்போது கல்யாணசெட்டியுந் தனது காதலனை யழைத்துக்கொண்டு போக அங்கு வந்தான். அவனைக்கண்டமாத்திரத்தில் மற்றவர்கள் ஓவென்றலறி, "உன்னுடைய மகன் வல்லாளன் எங்கள் பிள்ளைகளை யெல்லாங் கெடுக்கின்றான். இன்று எங்களை யெல்லாம் அலையும்படிச் செய்தான். இனி இவ்வாறு செய்யாமலிருக்க அவனுக்குத் திட்டம்பண்ணி எங்களுக்கு நீ துன்ப நிவர்த்தியைத் தேடவேண்டியது" என்று குறைகூறி வெறுத்துக்கொண்டார்கள்.

அதனைக்கேட்ட கல்யாணன் மனங்கலங்கிப் பிள்ளையின்மேல் வெறுப்புண்டாகி அவனைத் தேடினான். அப்போது அச்சிறுவன் பூப்பந்தரின் கீழ் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாருக்கு முன்னின்று இரண்டு கரங்களையுஞ் சிரமேற்குவித்து ஆநந்தக் கண்ணீர்ததும்பப் பரவசனாய்ப் பலதுதிகள் கூறிவாழ்த்தி வழிபட்டுக்கொண்டிருந்தான். அவ்விஷயத்தைக் கண்ணுற்று, இது என்ன விந்தை! இப்படியும் நமது சிறுவன் கெடுவானோ? இதுவரையில் இது நமக்குத்தெரியாமற் போயிற்றே! இவன் கெட்டதுமன்றி ஊரிலுள்ள பிள்ளைகளையும் கெடுத்தானே! நாம் வயிறெரிவது போலவே அவர்களும் வயிறெரிந்து வருந்துவது சகசந்தானே! அவர்கள் நம்மை வெறுத்துக்கொள்வதை நாம் குற்றமாகக்கொள்வது எங்ஙனம்? நமது சிறுவனை நாம் தண்டிப்பதுவே தக்கது என்று துணிந்து தன் மகனாகிய வல்லாளனருகிற்சென்று அடா பையா, என்று அழைத்தான். அக்குழந்தை ஸ்ரீகணபதியினது திருவடித் தியானத்திலிருந்தமையால், அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. அதனாலவனுக்குக் கோபமதிகரித்து அங்கு ஸ்ரீவிநாயகப் பெருமானுக்குப் போட்டிருந்த பூப்பந்தைப் பியத்தெறிந்து அதன் கீழிருந்த விநாயகரை எடுத்து அப்புறம் விட்டெறிந்து, அங்குள்ள சகல பூசாதிரவியங்களையும் வாரியெறிந்து அம்மட்டிற் கோபந்தணியாமல் தன் குமாரனது குடுமியைப்பற்றி யிழுத்துவந்து அங்குள்ள வோர் மரத்தி லவனைச் சேர்த்துக்கட்டி, அவனது உடம்பு முழுதும் உதிரந் தோயும்படிப் பிரம்பாலடித்தான். அதைப் பொறுக்கமுடியாத அக்குழந்தை எளியமுகங் காட்டிக் கண்களில் நீர் வடியத் தேம்பித் தேம்பி

யழுது ப்ராரம்பித்தான். அதற்குச் சற்று மிரங்காமல் கொடும்பாபியாகிய அந்தப் பிதா அக்குழந்தையைப் பார்த்து "நீ எல்லாங் களைக்கண்டவனைப்போல விநாயக பூசைசெய்ய வெளிப்பட்டாயாகையால், அந்த விநாயகரே வந்து உன்னுடைய கட்டையவிழ்த்து உபகாரஞ்செய்யட்டும் பார்ப்போமென்று உல்லங்கன வார்த்தை பேசி உதாசீனமாய்த் திரும்பியும் பாராமல் வீடுபோய்ச் சேர்ந்தான். இந்தப் பெரும்பாபியின் கதியைப் பின்பு சொல்வோம். இவனால் கட்டுண்டு தோப்பில் துணையின்றித் தனியேயிருந்த வல்லாளன் தனது தெய்வமாகிய ஸ்ரீவிநாயகப் பெருமானது திருவடிகளை மனத்திற் சிந்தித்துப் பின்வருமாறு புலம்பித் துதிக்கலாயினன்.

"எந்தைசினக் காமென்றே யெண்ணிப் பெருங்கோயில்
இந்த நிலம் போற்ற விழைத்துப் பலதோழா
வந்து கொடுத்தபொருள் வாங்கியான் செய்பூசை
சிந்தியதே யென்செய்வேன் சிந்தைகுடி கொண்டவனே

அன்பு சிறிதுமிலா னந்தோசின் கோயிலழித்
தென்பட்டோ சென்றா னிரக்கமோ சற்றுமிலான்
பின்புவருங் கேட்டினைப் பெருக்கித் தெனவுணரான்
றுனைப்ருபோ ழுந்து துயருழப்பன் பெருமலோனே.

உன்றுட் டுணைபற்றி யுள்குமடி யேனகலங்கி
யன்றேழை போலிருந்த லெந்தாய் தகுமோதான்
மின்றாழ் சடைமௌலி வேதியனே யானைமுகத்
தென்றாதை யேவந் திடாகளையா யெம்மானே.

வினையேயென் றுதையென வேடமெடுத்தினெறென
றினைநன் றனக்கன்பு தான்செய் திடற்கைந்தே
யுனையும் பணைத்தற் குடையானே யென்செய்வேன்
அனையேயென் றனைப மறியாயோ வந்தணனே.

சற்றுமிரங் கானபாவி தாதையெனப் பேர்கொண்டான்
சொற்றுணையே யென்றனை றுயரஞ் சிறிதுமுளத்
தற்றிலனு கெட்டே னுயிர்த்துணையே மாதுமையாள்
பெற்றசிவ கனேநான் பெற்றதுநின் பேரருளே."

என்று சிந்தித்து ஸ்ரீ விநாயகரது திருவடித்தாமரைகளை வல்லாளன் வாழ்த்தி வழிபட்டான். அதற்கு அப்பெருங்கருணைவள்ளலிரங்கி ஒரு பிராமணப்பிள்ளையாகத் திருவுருக்கொண்டு அங்கெழு

ந்தருளி, பாபியாகிய கல்யாணன் கட்டிவிட்டுப்போன கட்டையவிழ்த்து வல்லாளனைத் தழுவி, அவனுடம்பிலிருந்த தழும்புகளையெல்லாம் தமது கைகளால் பிடித்து ஒழுங்குசெய்து அவனுக்கு நோய்நீங்குமாறு தக்க வுபசாரங்கள் செய்து இனிய வார்த்தைகள் கூறி மகிழ்ந்தனர். அப்போது வல்லாளன் இந்தப்பிராமணப்பிள்ளை ஸ்ரீவிநாயகக்கடவுளே யென்று மனதில் நினைந்து, அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ஐயனே! இன்று அடியேன் தேவரீரது பெருங்கருணை வெள்ளத்திற் படிந்தேன். இனி அடியேனுக்கொருகுறைவுமில்லை. என்னுடைய பூர்வவினையெல்லாந் திரண்டு ஓருருவாய்வந்து தந்தை யென்று பேர்தாங்கிப் பேரிடும்பைகள் செய்துநின்ற அவதி இன்றோடே தொலைந்தது. ஓ கிருபாவெள்ளமே! எனது பாக்கியமே! பாக்கியம்!! என்று துதித்து நிற்கையில், அவனை நோக்கி குழந்தாய்! நீ சிறுபிள்ளை, இவ் விளம்பருவத்தில் உனக்கு வேறுவிளையாட்டில் புத்தி செல்லாமல் என்னைப் பூசித்து மகிழ்வதாகிய விளையாட்டில் புத்திசென்றதன்றோ! உன்னைப்போல நானுங் குழந்தை, உனக்குத் தோழர்களாகச்சேர்ந்து நீ செய்த பூசைக்குச் சகாயமாயிருந்தவர்களுங் குழந்தைகள். குழந்தைகளெல்லாம் ஒன்றுகூடி விளையாடுதல் பெருமகிழ்ச்சியைத் தருமாகையால், நானும் உங்கள் கூட்டத்திலிருந்து விளையாடினவனாகவே மகிழ்ந்தேன். நமது விளையாட்டுக்குக் கெடுதியைத் தேடிய பாபிக்குப்பரிசு கிடைக்காமற் போகாது. உன்னோடுகூடி விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளுக்கு எம்முடைய பிரசாதமுண்டாகாமலும் போகாது. நீ ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம். எமக்கு ஒருவன் தீங்கு செய்வதை நாம் பெரிதாகமதிப்பதில்லை. எமதடியார்களுக்குச் செய்யுந் தீங்கினை அப்போதே யறிந்து தண்டிப்போம். நீ எமது பாதவூழியத்திற் சிறந்து உன்னை யறவே மறந்து உலகவாசனை யிறந்து சிவசாட்சாத்கார நிலையிலிருந்த அமைதியை யறியாது உனக்குத்தீங்கிழைத்த பாதகனுக்கு முன்னமேயே நாம் பரிசளித்துவிட்டோம். அதாவது:—உன்னை யுறுமிப் பார்த்த அவனுடைய கண்கள் ஒளியிழந்து குருடாயின. உன்னுடைய முறைகளைக் கேளாமலிருந்த செவிகள் செவிடாயின. உன்னைப் பலவாறு வைது காறியுமிழ்ந்த வாய் அடைபட்டு ஊமையாகியது. உன்னுடைய தேகம் வருந்திப் புண்பட மரத்தோடு பிணித்த கொடுமையால், அவனுடம்பெல்லாம் இரணகொதிப்பதிகரித்துக் குவட்டம

வரந்து முடிக்கொண்டது என்று திருவாய்மலர்ந்தருளி அவனுக்குத் தமது நிஜவடிவந் தோன்றத் தரிசனந்தந்து, ஓ குழந்தாய்! நீ விரும்பிய வரங்களைக் கேள்: தருகின்றோம் என்று அருளிச்செய்தனர். அதற்குச்சிறுவன் மீண்டும் எம்பெருமானது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, எனது அப்பனே! யான் விரும்பத்தக்கது உனது திருவடி யாராதனையைத் தவிர வேறு யாதிருக்கிறது? எப்போதும் உனது பாதபத்மங்களை வழிபட்டு வாழ்த்தும் பேறொன்றே யான் அடையத்தக்கது. ஆகையால் அதனையே அடியேனுக்குத் தேவரீர் அநுக்கிரகிக்கவேண்டியது. அன்றியும், இவ்விடத்தில் எக்காலமும் இப்படியே தேவரீர் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருந்து, இங்குவந்து வழிபடும் மெய்யடியார்கள் விரும்பிய வரங்களையெல்லாம் பிரஸாதித்து அநுக்கிரகிக்கவேண்டியது. என்று பிரார்த்தித்தான். அவன் விரும்பியபடியே அநுக்கிரகித்து, அவனை நோக்கி விநாயகக்கடவுள் ஒன்று சொல்லுகிறார்.

ஓ குழந்தாய்! வல்லாளனென்னும் உனது பெயரை முன்னும், கணபதியென்னும் எமது பெயரைப் பின்னுமாக வைத்து வல்லாளகணபதி யென்று வாழ்த்தி இனி யாவரும் எம்மை வழிபடுவார்கள். இவ்விடத்தில் தேவர்களெல்லாம் வந்து எம்மை வந்திப்பார்கள். வேறு இடங்களில் எம்மை வழிபடுவதைக்காட்டிலும் இவ்விடத்தில் வழிபடுவது சிரேஷ்டமென்றே யாவருங்கொள்வார்கள். ஏனை யிடங்களில் அதிககாலத்திற் செய்யும் ஆராதனத்தின் பயன் இவ்விடத்தில் அற்பகாலத்திற் செய்யும் ஆராதனத்தின் பயனிற் கோடியி லொருகூறு மாகாது. இங்கே நமக்கு நித்தியோத்ஸவம்-பட்சோத்ஸவம்-மாஸோத்ஸவம்-வருஷோத்ஸவ முதலிய விபவங்கள் குறைவற நடக்குமென்று திருவாய்மலர்ந்தருளித் தமது தெய்வவுருவை மறைத்தருளி அவ்விடத்திற்றானே விக்கிரக வடிவமாக அவனுக்குத் தரிசனங் கொடுத்தருளினார். அந்தமூர்த்தத்தை வல்லாளன் தரிசித்து மகிழ்வெய்தி முன்போலவே பூப்பந்தரிட்டு ஆலயமாக்கி, அதி லெழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுளைப் பேரன்போடு பணிந்து சோடசோபசாரங்கள் புரிந்து பூசையை நிறைவேற்றினான். இப்படியே காலந்தோறும் பூசை குன்றாமல் நியதியாக நாடோறும் ஸ்ரீ விநாயகக்கடவுளை யாராதித்துக்கொண்டுவருகையில், இவனுடைய பிதாவாகிய கலியாணனடைந்த கதியைச் சிறிதெடுத்துச் சொல்வாம்.

கலியாணன் தன்னுடைய மகனாகிய வல்லாளனை கட்டிவைத்த கோயிலை யழித்தது, அவனுடம்பெல்லாஞ் செந்நீர் தோயவடித்துப் பல துன்மார்க்கஞ்செய்து சென்றனையால், அவன் வீடு போய்ச்சேருவதற்குள் அவனுக்குக் கண் குருடும், காது செவிடும், வாயூமையும், உடல் குஷ்டமுமாக நொந்து வினைவந்து மூடிக்கொண்டது. இவ் வவதிக்கோலத்துடன் வீடுபோய்ச்சேர்ந்த கலியாணனை அவனுடைய காதலியாகிய இந்துமதிநோக்கி வயிறெரிந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு இது என்னகாலக்கேடு? இப்படியும் ஒரு வினை யிருக்குமா? சற்றுநேரத்திற்குமுன் ஒரு குறைவுமின்றித் திடதேகந் தாங்கியிருந்தவருக்கு இவ்வித இடுக்கண் உண்டாகிய காரணம் யாதோ? இத்தீங்கினை இவர்க்குச் செய்தவர்கள் மானிடராகார். இது தெய்வத்தா லுண்டாகிய தீங்காயிருக்கின்றது. இப் பெருந்தீங்கு நேரிடத்தக்க யாது அபராதத்தை இவர் தெய்வத்துக்குச்செய்தாரோ தெரியவில்லை. தெய்வமே! என்னை இப்படியுங் கைவிடலாமா? என்று வாய்விட்டலறி யழுது நொந்துகொண்டிருக்கையில் சில பிள்ளைக ளோடிவந்து இந்துமதியைத் தேடிப் பார்த்து, அம்மா! உன்னுடையமகன் வல்லாளனும் நாங்களும் இவ்வூருக்கு அந்தத் தோப்பில் பிள்ளையாருக்குக் கோயில்கட்டிப்பூசித்துவிளையாடிக்கொண்டிருந்தோம். அங்கு வல்லாளனுடைய பிதாவந்து கோயிலை யழித்துப் பிள்ளையாரையெடுத்து வீசியெறிந்து, அவனை நன்றாக முதுகுபிளக்கவடித்து உடம்பெல்லாம் இரத்த மொழுகும்படிச்செய்து, அவனைக் கடைசியில் ஒருமரத்தில் சேர்த்துக் கட்டிவிட்டுப்போய்விட்டார். அவன் யாருந் திக்கில்லாமல் ஒன்றியாய் மரத்தோடு மரமாயிருந்து அழுதுகொண்டிருக்கின்றான் என்று பரிதாபத்துடன் கூச்சலிட்டுக்கொண்டே சொன்னார்கள். அவைகளைக் கேட்டு ஐயோ மகனே! உனக்கும் இப்படி நேரிட்டதா? என்று பதைபதைத்து அந்தத் திசையை நோக்கி யோடினாள் இந்துமதி. அவள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண் டோடுகையில் அனைவரு மயலாருங் கவலையடைந்து அவளைப் பின்றொடர்ந்து தேடினார்கள். பெருங்கூட்டந்திரண்டு பின்னோடிவர நடந்த பேதையாகிய இந்துமதி தன் மகனிருக்குமிடந்தேடிச்சென்று பார்த்தாள். அவ்விடத்தில் தன்மகனொருகுறைவுமில்லாமல் ஸ்ரீவிநாயகரது வழிபாட்டிலகமகிழ்ந்து சிறந்து விளையாடிக்கொண் டிருந்தான். அவனைப்

பார்த்து ஆச்சரியப்பட்டு நாம் கேள்விப்பட்ட சங்கதி இங்கொன்றுங்காணோம். இது என்ன ஜாலவித்தையோ? நமக்குப் பிள்ளைகளவந்து சொன்னது பொய்யோ? நமக்கே சித்தப்பிரமை யுண்டாகி அவ்வாறு கற்பனை யுண்டாயிற்றோ? என்று பலவாறு யோசித்துத் தன்னோடுவந்த ஸ்திரீஜனங்களிடத்தும் பிரஸ்தாபித்துச் சிறிது நிதானித்தாள். அப்போது தன்னுடைய மகனாகிய வல்லாளன், வந்திருப்பவள் தாயென்றறிந்து நீ எங்குவந்தனை? முன்வந்துபோனவர் உன்னை யனுப்பினரோ? அவர் செய்துபோனதன் சேடம் யாதேனுமிருந்தால் நீ செய்யலாமென்று வந்தனைபோலும்! உனக்கிங் கென்னவேலை? என்னையடித்து வெறுத்து எனது ஐயனாகிய ஸ்ரீ விநாயககடவுளை அப்பால் வீசியெறிந்து மனோதிடங்கொண்டுசென்ற மாபாவியை யறவே மறந்து தவநிலை சேர்ந்து தனிமையிருந்து சுகிக்கும் என்னிடத்தில் நீ வந்தது தாயே! தக்கதன்று. உங்களால் எனக்காகவேண்டிய தொன்றுமில்லை. நீ வந்தவழிபார்த்துக்கொண்டுபோகலாமென்று கூறினன்.

அந்த வார்த்தைகள் அதிக சூடாயிருந்தமையால் பேதையாகிய இந்துமதியானவள், என் செல்வமே! எனது காதன்மணியே! எனது கட்டிக்கரும்பே! உன்னுடைய மனம் இப்படியும் கசந்துபோயிற்றே? நான் பேதை; என்மேல் நீ இப்படி வெறுத்துக்கொள்ளலாமா? என்னைக் கண்டபோதே ஓடிவந்து என்மேல்விழுந்து என்னைக்கட்டியணைத்து முகத்தோடு முகம்வைத்து முத்தந்தந்து அருமையும் அன்பும் பாராட்டத்தக்க செல்வமகனாகிய நீ என்வயிறு குழம்பும் வார்த்தைகள் பேசியதை நான் எப்படி சகிப்பேன்? அடா குழந்தாய்! உன்னுடைய பிதாவானவர் யாதோ தெரியாமல் தப்பான காரியஞ் செய்துவிட்டார். அதை நீ பொறுப்பது உனக்குக் கடமையாமடா என் கண்மணியே! எங்கள் பேரி லிவ்வளவு கோபம் நீ வைப்பது உனக்குத் தருமமல்லவே! ஸ்ரீவிநாயகரது திவ்யப்பிரசாதம் பூரணமாய்க் கிடைக்கப்பெற்ற சுகிர்தசாலியாகிய உனக்குத் தீங்கிழைத்தமையால், உன் தந்தை கண் - காது - வாய் முதலிய இந்திரியங்கள் போய்க் குருடாயும், செவிடாயும், ஊமையாயும் வந்து வீட்டில் விழுந்தார். தேகமுழுதும் குட்டம் மூடிக்கொண்டது. இந்தக் கோபத்தைக்கண்டு வாடிய வென்னைத்தேற்றி நன்மை தேடவேண்டிய காளையாகிய நீ என்னை நாடவொட்டாமல் கடு கடுத்துப் பேசுகின்றனையே.

ணுயின், மூவர்பெருமானுகியும், மெய்யன்பரை யாட்கொள்ளும
முக்கட்பெருமானுகியும், ஒற்றைக்கொம்பேந்திய செல்வப்பெரு
மானுகியு மிருக்கின்ற விநாயகப்பெருமானைப் பூசைசெய்கின்ற
அடியார்களுக்குக் கிடைத்தற்கரிய பெரும்பாக்கியங்கள் இருந்த
விடத்திலேதானேவந் தெய்து மென்பதற் கையமென்னே ?
அப்போது தேவர்கள் அந்தரத்துந்துமி முழக்கினூர்கள்.
ஆகாயத்தில் புஷ்பவருஷம வருஷித்தது. யானையின் பின்னே
வந்த சகல பரிஜனங்களும் அவரவர்கள் மனத்திருந்த கவலைகளை
யொழித்து ஆநந்தங்கொண்டார்கள். அமைச்சர் முதலாயினூர்
இராஜ யோக்கியமான ஆடையாபரணுதிகளை யெடுத்தணிந்தார்
கள். அந்தணர்களெல்லாம் ஆசீர்வாதஞ்செய்து இருபுறத்திலு
மிருந்தார்கள். சேனுதிபதியர் - சாரணர் - முதலாயினூர் வீரகண்
டாமணியைத் தரித்திருக்கின்ற பாதங்களில் வணங்கி ஏவலுக்
கெதிர்பார்த்தார்கள் இவ்வித சம்பிரமங்களோடும் தக்கணை
மூர்ந்து, அங்குத் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற கணேச
மூர்த்தியை சாஷ்டாங்கமாகச் சேவித்து, அருகிருந்த அந்தணர்
கட்கெல்லாம் பற்பல திரவியங்களைத் தானஞ்செய்து, தன்னரு
மைத் தாயை நவரத்தின கசிதமாயுள்ள சொர்ணசிவிகையிலேற்
றித் தான் பட்டத்து யானையின்மேல் உதயபால சூரியன்போல
ஆரோகணித்து அமைச்சராவார் அசுவங்களின்மேலேறி வரவும், தாசி
கள் நாட்டியஞ்செய்து நடக்கவும், சமுத்திர கோஷம்போலப்
பேரிகை - எக்காளம் - சல்லரி - முரசமுதலிய வாத்தியங்கள்
முழங்கவும், இன்னும் பல ஆடம்பரங்கள் சூழவும், மலையினுச்சி
யில் உதயமாகின்ற பூரண சந்திரனைப்போல யானைமேலோங்கி
யிருக்கின்ற வெண்குடை நிழலிலிருந்து, அதனைமெல்ல நடத்திப்
பட்டணத்துள் நுழைந்து பவனிவந்து அரண்மனைசென்று சொர்
ணத்திற செய்து சிரோரத்தினங்களா லிழைத்திருக்கின்ற சிங்
காதனத்திலிருந்து மந்திர தலைவர்களை நோக்கிக் குளிர்ந்த சொற்
களா லருகிலழைத்து, நீங்கள் சென்று என்னை யாட்கொண்டரு
ளிய முற்கல முனிவரை மரியாதையோடு இங்கு அழைத்துவரக்
கடவீர்களென்று கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே விரை
ந்துசென்று, தவசிரேஷ்டராகிய முற்கலரைத் தேரிலேற்றி, ஆட
ல்பாடல் வாத்தியமுதலிய முழக்கங்களுடனே அந்நகரத்துள்ள
யாவரும் ஆநந்தங் கொள்ளுமாறு அரண்மனைக்குள் எழுந்

மே அவர் தேடியிருந்தாராகையாலும், அது அது அவ்வாறு காலத்தில் வந்துகூடி அநுபவ வேத்யமாகியது. நான் யாரையும் வெறுத்துக்கொள்ளமாட்டேன். எல்லாம் வினையின் பெருக்கும், அதனைக்கூட்டி முடிக்குங் கருணாநிதியின் செயலுமாக முடிந்தி திருப்பதால் உன்னைக்கண்டு சந்தோஷிக்கத்தக்க வேளையில் சந்தோஷித்தேன். வெறுக்கத்தக்க வேளையில் வெறுக்கின்றேன். இப்படியே என்னைக்கண்டு நீ சந்தோஷிக்கத்தக்க வேளையில் சந்தோஷித்தாய்; துக்கிக்கத்தக்க வேளை நேர்ந்தமையால் துக்கிக்கின்றாய். இப்போது நான் சொல்லிய தர்மங்களை நீ கூர்ந்து யோசித்தால் உனக்குத் துக்கம் உபசமனமாகும். என வார்த்தைகளை யுறுதியாக நம்பி மனதைத் திடப்படுத்திக்கொண்டு போய்ப் பார்த்தாவினது பணியினின்று நீ உய்யுமார்க்கத்தைத் தேடிக் கொள்ளக்கடவா யென்று கூறிய மகனை இந்துமதியானவள் கட்டியணைத்து அவனது கனிவாயை முத்தமிட்டு, அடா என்னருமைத் துரையே! நீ பேசிய வார்த்தைகள் என் செவிக்கு இன்பத்தையே தந்தன. ஆயினும் அவை நான் அநுசந்திக்கத்தக்கனவா யிருக்கின்றன. இவ்வரிய தத்வார்த்தங்களை நீ எப்படியோ கற்றாய். உனக்கு ஸ்ரீவிநாயகப்பெருமானே தாயுந் தந்தையுமாய் வெளிப்பட்டு அநுக்கிரகித்தாராகையால் உனக்கு யாவுங் கைகூடிவிட்டன. உன்னையே அவராக நான் எண்ணுகிறேன். என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றவேண்டியது நீ என்னை மறந்திடுவது உனக்குத் தருமமன்று. உனக்குத் தெரியாததை நான் என்னசொல்லப் போகிறேன்? நான் கோரிய வரத்தைத் தருவதாக நீ முன்பு வாக்குக்கொடுத்தால் அதனைப் பின்பு சொல்லுகிறேனென்று வேண்டினள்.

அதற்கு வல்லாளனிசைந்து நீ விரும்பியதைக் கேட்கலா மென்றான். அவ்வுறுதி வார்த்தையைக் கேட்ட தாயானவள் அடா என்செல்வமே! நீ மீண்டு மெழுந்து வரவேண்டும். உன்னுடைய விநாயகபூசையை நீ வீட்டிலிருந்தே செய்து என்னுடைய ஏவலையும் அவ்விநாயகர் கொள்ளுமாறு செய்தல்வேண்டும். உன்னுடைய பிதாவிற்கு நேரிட்டிருக்கும் அரிஷ்டங்களையும் அவரது திருவருளால் தீர்த்திடல்வேண்டும். இவை கைகூடும்படிச் செய்தாலன்றி என் கவலைகளொழியமாட்டா. ஆகையால், நீ கடைக்கண் பார்த்தருளவேண்டுமடா அப்பனே! என்று பன்முறை

வேண்டினாள். அதனைக்கேட்ட குழந்தை தாயினது எளியமுகம
பார்த்துச் சொல்லுகிறான். எனது அன்னையே! நீ விரும்பியது
கைகூடத்தக்கதுதான். ஆனால், அது ஸ்ரீவிநாயகரது திருவரு
ளால் முடியத்தக்கது. அத்திருவருளிப்போது உங்களுக்கு உண்
டாகமாட்டாது. ஏனெனில், எந்த அபராதத்திற்கும் ஒரு தீர்
வுண்டு, ஸ்ரீவிநாயகரது திருவடிக்கட் செய்த அபராதத்திற்கொரு
தீர்வுமில்லை. அவ்வபராதத்தின் பயனை அநுபவித்தே தீரவேண்
டும். இப்போது அநுபவிப்பதனன்று உனக்குக் கஷ்டமாயிருக்கி
றது. இவ்வளவிலொழிந்தால நீ பாக்யசாலிதான். அவ்வபரா
தம் இம்மட்டி லொழியமாட்டாது. இப்போதநுபவிப்பது மல்
லாமல் ஜென்ம ஜென்மமுந் தொடர்ந்து துக்காநுபவத்தைத் தந்து
வருத்தா நிற்கும். ஆயினும் ஒன்று சொல்லுகிறேன். கலயாண
னைப்போல நீயுங் கடுஞ்சித்தங்கொண்டு ஸ்ரீகணநாதரது பூசையை
நிந்தித்துப்பேசாமல கலந்த வனபோடு கனிந்துரையாடினமை
யால், உன்னிடங் கருணைசெய்து எனது சுவாமி திருக்கடைநோக்
கம வைத்துப பாலிப்பார். நீ அவனிடம அன்புபாராட்டி வருந
தன்மையாலும், அவனுடைய புத்திரன எனனுஞ்சம்பந்த மெய்
திய நான விநாயகனைப் பூசித்துவருந் தனமையாலும அவனு
டைய சிவத்துரோகங் குறைந்து வருகிற சந்மத்தோ டொழியும்.
அவனுக்கு இந்த ஜநமமொழிந்த பிறகு மறுஜநமமுண்டாம். அப்
போது அவன் ஒரு ராஜகுமாரனைப் பிறப்பான். நீ இராஜ ஸ்தி
ரீயாய்வந்து அவனுக்குத் தாயாவாய். அந்த ஜநமத்திலும இந்தக்
குருடு செவிடூமை குட்டங்கள அவனை வந்து பிடித்துழக்கும்.
நோயாளியாய்ப் பிறக்குமிவனை வெறுத்து இவன் றந்தை இவ
னைத் தன்னிடத்தினின்றும அப்புறப்படுத்தி விடுவான். பிள்ளை
யாகிய என்னை இப்போதிவன வெறுத்த பாவத்தின பயனே அப்
போதிவனை வந்து பிடிக்கும். நீ மாத்திரம் மனந்தளராமல அவ
னிடமன்புபாராட்டி அவனைத் தனியே காட்டிற் புகச்செய்ய
விசையாமல் நீயு மவன்பின்சென்று காடேகதியாகத்திரிந்து உபா
தானமெடுத்து அவனைக் காப்பாற்றிக்கொண்டு வருவாய். அப்
போது ஒருநாளவனை நீ யழைத்துக்கொண்டு வெளியே போகை
யில் அவ்வழியே முற்கலமுனிவர் உங்கள் கண்ணெதிரப்பட்டு
அவர்மீதுபட்டு வீசியகாற்று இவனமேலவந்துதாக்கும். உடனே
சர்வபீடைகளுந் தொலைந்து குருடுமுதலிய நீங்கிச் சுகமுண்டா

கும். அம்முனிவர் ஸ்ரீகணபதிபூசையிற் சிறந்த காணபதய சிரே
ஷ்டராகையால, அவராலிவனும கணபதிபூசைக்குப பாத்திரவானு
கித தககனென்னுந தனிநாமநதாங்கிப் பிரசித்தியடைந தின்புறு
வான். இது தேவரஹசியமாயுள்ள தாகையால், இவசியம் நடந்
தேமுடியத்தககது. இதிலேலாரற்பமும் பிசகமாடடாது. ஆகை
யால் நீ யொன்றுக்கும கவலைப்படாதே! இஙகே காலதாமதஞ்
செய்யாமல் சென்று உன்னுடைய பதிபக்தியைவிடாது செயது
நீ சுகிக்குமவழி தேடக்கடவாயென்று கூறிமுடித்தான். அவன்
முக்காலமுணாநது கூறிய மூதுரைகளை இநதுமதியானவள் ஈசுவர
வாக்கியமாக மதித்து ஒன்றும பேசாம லவனை வாழ்த்திவிடை
பெறறுககொண்டு சென்று தனது பதிபகதியிற சிறநது ஸ்ரீவிநாய
கரது திருவருளையும, தனது செல்வபபுதலவனது அருநதவத்தை
யுஞ் சிந்தித்து அனுபபாராட்டி வநதாள்.

இப்பால், வலலாளன தனது விநாயகபூசையைக குறைவற
முடிதது அவ் வருணாஞானககொணடலே இடைவிடாது சிநதித
துத தியானயோகததிலிருநதான. அவனது தவத்தை மகிழ்நது
ஸ்ரீவிநாயகக்கடவுள தமது பிரமத கணங்களைககூவி நீங்கள திவ்ய
விமானஙகொண்டுபோய நமது அனபனுகிய வலலாளனை நமது
லோகத்துக்கு அழைததுககொண்டு வாருங்கோளென்று கட்டளை
யிட்டருளினா. அவவாறே அவாகள விமானங்கொண்டுபோய்
அவனை யழைததாாகள். அவன அதிக சநதோஷத்துடன் தன்னை
யழைத்த பிரமத கணஙகளை வணஙகித துதித்து, எனது அப்ப
னுகிய ஸ்ரீவிநாயககக்கடவுள எனனை யொருபொருளாகத் தமது
திருவுளளத்தடைதது விமானங கொடுத்தனுப்பினாரன்றோ? அவ
ரது திருவருள விலாசத்தை நான கணிக்குநதரமோ என்று பல
வாறு துதிதது அவரது ஸ்ரீபாதயுகளங்களைச சிந்தித்துக்கொண்
டே அந்தத் திவயவிமானத்திலேறினன். தேவாகள் அந்தரத்
துநதுமி முழககினாாகள். சிததாகள் குடைபிடித்தார்கள். கருடர்
சாமரையிரட்டினாகள். கிநநரா ஆலவட்டமெடுத்தாாகள். கந்
தருவர்கள் புஷ்பமிறைத்தார்கள். வித்தியாதரர்கள் வீணுகானம்
பண்ணினாகள். அரமபையர்களாடினர்கள், முனிவர்கள் முன்
னும் பினனும் நெருஙகினாகள். அநதணர்கள் இருமருங்குஞ்
சூழ்நது ஆரணமோதினர்கள். அருநதவாகள் ஆகமங்களாற் றுதி
த்து வாழ்ததினாகள. இவ்வாறு சகல சம்பிரமங்களு நிறைந்

ஓரரசனை யேற்படுத்தக் கடவீர்களென்று ஆஞ்ஞாபித்தனள். அதை அவ்வமைச்சர் முதலாயினோர் ஆலோசித்திருக்கின்ற சமயத்தில் முற்கலமுனிவர் அவ்விடத்தில் வந்து அச்சபையிலிருக்கிறவர்களை நோக்கிப் பட்டத்து யானையை அலங்கரித்து அதன் றுதிக்கையிற் பூமாலை தந்து அதனை யனுப்புங்கள். அஃது எவனை மாலையிட்டெடுத்துக்கொண்டு வருகின்றதோ அவனையே இவ்வுலகாள்வதற்கான அரசனாக்கிக் கொள்வீரென்று கிருபையோடுந் திருவாய் மலர்ந்தெழுந்தருளினார். அதனைச் செவியுற்ற யாவரும் வியப்படைந்து, கனமென்கிற பட்டத்து யானையை அலங்கரித்துச் சுலபைக் கெதிராக நடத்தி வந்து நிறுத்த, அவள் தனது கணவன் மார்பிற்றரித்திருந்த பொற்றாமரை மாலையை யெடுத்துவந்து அந்த யானையின் றுதிக்கையிற் றந்து, இவ்விராச்சியத்தை யாளத் தக்க ஓரரசனைக் கொண்டுவரக்கடவாயென்று ஆஞ்ஞாபித்தனள். அதனையம்மதயானை செவியுற்று மலைநடந்து செல்வதுபோல முன்னதாக நடந்தது. அதன்பின்னர் அமைச்சன்முதலான சகல ஜனங்களுந் தம்மை யாளுதற்குரிய வோரரசனைக் காணுமாறு அதிக ஆசையோடும் தொடர்ந்துசென்றார்கள். தங்கள் கணவனேயன்றி மற்றைய வெவ்வகைய பேரழகுடையவர்களா யெதிர்வரினும் அவர்களைச் சிறிதும் கண்ணோக்கஞ்செய திரசியாத கற்பின் மாதர்களைப்போல, அந்த யானையும் அரசாள்வதை விழைந்து பற்பலர் தனதெதிரில் வந்து நிற்கினும் அவர்களை யெல்லாஞ் சர்ப்பத்தை யொத்துச் சீறி விலக்கிக்கொண்டு நடந்தது. அவ்வற்புதத்தை யாவருங் கண்டதிசயித்து, இந்த யானை மஹா பராக்கிரம சாலியாகிய மன்னவனையே தேடிக்கொண்டு வருமென்று நிச்சயித்து சந்தோஷங்கொண்டு, வீதிகடோறும் தண்ணீர் தெளித்துத் துகளடக்கிப், பரிமளமிகுந்த புட்பங்களாற் றோரணமுதலியவைகளைக் கட்டி அலங்கரித்தார்கள். இப்பாலந்த யானையானது கோட்டைவாயிலை விட்டகன்று வீதிகளைக் கடந்து பட்டணத்திற்கு வெளியிற்சென்று வனத்திற்புகுந்து முற்கலமுனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சமீபமாக வசித்திருக்கின்ற தக்கனருகிற் சென்று, அவன் கழுத்திற் பொற்றாமரை மாலையைத் தரித்தது.

ஏ பக்ஷிசிரோமணிகளே! இந்தத் தக்கன்றானிருந்த விடத்திற்றானே யிருந்து இத்தன்மைத்தாகிய அரசுரிமையைப் பெற்று

றுபின், மூவர்பெருமானுகியும், மெய்யன்புடை யாட்கொள்ளும
முக்கட்பெருமானுகியும், ஒற்றைக்கொம்பேந்திய செல்வப்பெரு
மானுகியு மிருக்கின்ற விநாயகப்பெருமானைப் பூசைசெய்கின்ற
அடியார்களுக்குக் கிடைத்தற்கரிய பெரும்பாக்கியங்கள் இருந்த
விடத்திலேதானேவந் தெய்து மென்பதற் கையமென்னே?
அப்போது தேவர்கள் அந்தரத்துந்துமி முழக்கினார்கள்.
ஆகாயத்தில் புஷ்பவருஷம வருஷித்தது. யானையின் பின்னே
வந்த சகல பரிஜனங்களும் அவரவர்கள் மனத்திருந்த கவலைகளை
யொழித்து ஆநந்தங்கொண்டார்கள். அமைச்சர் முதலாயினுேர்
இராஜ யோக்கியமான ஆடையாபரணுதிகளை யெடுத்தணிந்தார்
கள். அந்தணர்களெல்லாம் ஆசீர்வாதஞ்செய்து இருபுறத்திலு
மிருந்தார்கள். சேனுபதியர் - சாரணர் - முதலாயினுேர் வீரகண்
டாமணியைத் தரித்திருக்கின்ற பாதங்களில் வணங்கி ஏவலுக்
கெதிர்பார்த்தார்கள். இவ்வித சம்பிரமங்களோடும் தக்கனை
யூர்ந்து, அங்குத் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற கணேச
மூர்த்தியை சாஷ்டாங்கமாகச் சேவித்து, அருகிருந்த அந்தணர்
கட்கெல்லாம் பற்பல திரவியங்களைத் தானஞ்செய்து, தன்னரு
மைத் தாயை நவரத்தின கசிதமாயுள்ள சொர்ணசிவிகையிலேற்
றித் தான் பட்டத்து யானையின்மேல் உதயபால சூரியன்போல
ஆரோகணித்து அமைச்சராவார் அசுவங்களின்மேலேறி வரவும், தாசி
கள் நாட்டியஞ்செய்து நடக்கவும், சமுத்திர கோஷம்போலப்
பேரிகை - எக்காளம் - சல்லரி - முரசமுதலிய வாத்தியங்கள்
முழங்கவும், இன்னும் பல ஆடம்பரங்கள் சூழவும், மலையினுச்சி
யில் உதயமாகின்ற பூர்ண சந்திரனைப்போல யானைமேலோங்கி
யிருக்கின்ற வெண்குடை நிழலிலிருந்து, அதனைமெல்ல நடத்திப்
பட்டணத்துள் நுழைந்து பவனிவந்து அரண்மனைசென்று சொர்
ணத்திற் செய்து சிரேரத்தினங்களா விழைத்திருக்கின்ற சிங்
காதனத்திலிருந்து, மந்திரத் தலைவர்களை நோக்கிக் குளிர்ந்த சொற்
களா லருகிலழைத்து, நீங்கள் சென்று என்னை யாட்கொண்டரு
ளிய முற்கல முனிவரை மரியாதையோடு இங்கு அழைத்துவரக்
கடவீர்களென்று கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே விரை
ந்துசென்று, தவசிரேஷ்டராகிய முற்கலரைத் தேரிலேற்றி, ஆட
ல்பாடல் வாத்தியமுதலிய முழக்கங்களுடனே அந்நகரத்துள்ள
யாவரும் ஆநந்தங் கொள்ளுமாறு அரண்மனைக்குள் எழுந்

தருளச் செய்தார்கள். உடனே தக்க னெதிர்சென் றழைத்து, அளவளாவிய அன்போடு சிறந்த ஆசனத்தின்மீ திருத்திச் சந்தனம் பூசி - அக்ஷதை சாத்தி, மந்திர புஷ்பத்தா லருச்சித்துத் தூப தீப நைவேத்திய முதலிய சோடசோபசாரங்களைச் செய்து, நவரத்நங்களிழைத்த பொற்றட்டில் ஆடையாபரணங்களை நிறைத்துக் கனிவர்க்கங்களைப் பரப்பி முனிபுங்கவர்கெதிரில் வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பல பரிசனங்கள் தன்னைப் புடைசூழ நின்று முற்கலமுனிவரைப் பார்த்து எமது பெருமானே! தேவரீருடைய கடாக்ஷத்தினால் அடியேன் இவ்விராஜபதத்தினைப் பெற்றேன். அடியேனுக்குத் தேவரீரே விநாயகக் கடவுளன்றி வேறில்லை. தேவரீருடைய திருக்கரத்தை அடியேன சிரமீதுவைத்து ஆசீர்வதிக்கவேண்டுமென்று மிகுந்த கனிவோடு இருகரங்களையுங் கூப்பிச் சிரங்கவிழ்த்து நின்றனன். கிருபா மூர்த்தியாகிய முற்கலமுனிவர் சந்தோஷித்து அவ்வாறே தமது ஹஸ்தத்தை அவன் முடிமீது வைத்து உனது நற்குணத்திற்கு உன்னை யொருவரும் விரோதியாகக்கொள்ளாரென்று திருவாய்மலர்ந்து, சகல பாக்கியங்களும் உன் கைவசத்தனவாகி நீ அளவற்ற சந்தோஷத்தோடு வாழ்ந்திருக்கக்கடவா யென்று ஆசீர்வதித்துப் பின்னரவனை யோராசனத்திலிருத்திப் பேருவகையோடும் இன்றியமையாதனவாகிய சில நீதிகளைப் போதிப்பாராயினார்.

அன்பனே! கடல்புடை சூழ்ந்த இவ்வுலகத்துள்ள மனுஷ யிர்க்குணர்த்தியிருக்கின்ற வருணாச்சிரம தருமங்கள் பலவாயிருக்கின்றன. அவற்றுள் உனக்கு முக்கியமாயுணர்த்தவேண்டுவனவாகிய சில நீதிகளைச் சொல்லுவோங் கேட்பாயாக. அருணோதயத்திற்கு ஐந்து நாழிகைக்கு முன்பே துயிலெழுந்து, பஞ்சணையை விட்டுநீங்கி மறைவிடத்திலிருந்து சரீரத்தைச் சுத்தி செய்து, கொடிதாகிய வல்வினைக்கூட்டங்களைப் பொடிபடுத்தவல்ல அழகிய திருவெண்ணீறு தரித்து, குருமூர்த்தியையும் வழிபடு கடவுளையும் மனத்திற் றியானித்து, பூமிதேவியைப் பார்த்து, என் தாயே! யான் உலாவுகின்றபோதெல்லாம் உனது திருமேனியினைத் துபாதம் படுகின்ற பிழைகளைப் பொறுத்தருளவேண்டுமென்று இரந்து துதிசெய்து, பின்னர் விநாயகமூர்த்தியைத் தியானித்து, அளவற்ற வேதாகமங்கட்கெல்லாம் முடிவாய் விளங்கும் இறைவனே! நமன் அயன் முதலிய தேவர்களாய்ச் சகளீகரித்திருக்குங்கனே

சப் பிரபுவே! மனோவாக்குக் காயங்கட்கு எட்டாதவனே! உனது திருவடித்தாமரைகட்கு உதயகால வந்தனஞ்செய்கின்றேனென்றும், அரவாபரணனே! சந்திரசேகரனே! திரிபுரதகனனே! உமையம்மைகேள்வனே! உனது பாதாம்புயங்கட்கு உதயகாலவந்தனஞ்செய்கின்றேனென்றும், திரிநேத்திரதாரியே! சகல தத்துவங்கட்கும் ஆதிகாரணியே! புத்திமுத்தியாகிய விரண்டினையும் விளங்கவைத்திருக்கின்ற பார்வதிதேவியே! உனது சரணாரவிந்தங்கட்கு உதயகாலவந்தனஞ் செய்கின்றேனென்றும், இலக்குமிமணாளனே! திருப்பாற்கடலின்கண் யோகநித்திரைசெய்பவனே! தேவேந்திரனுக்குச் சகோதரனாகிய உபேந்திரனே! உனது சரோருகத்தாள்களுக்கு உதயகாலவந்தனஞ் செய்கின்றேனென்றும், சகலகருமங்களையும் வழுவின்றி முடிப்பதற்குக் காரணமாயிருக்கின்றவனே! உலகவிருளினையுந் தானவர்செய்கின்ற மாயையினையும் நாசஞ்செயவல்லவனே! யாவருங்கண்டு தொழும்படியான சூரியபகவானே! உனது உபயபாதகமலங்களுக்கு உதயகால வந்தனஞ் செய்கின்றேனென்றும் வழிபட்டு, மற்றைத்தேவர்களையும் முனிவர்களையும் மிகுந்த அன்போடுதுதித்து, பின்னர் நாடோறுஞ்செய்து வருகின்ற நித்திய கருமங்களை விதிப்படிமுடித்து, அமைச்சர் வேதியர் முதலானவர்களோடிருந்து அரசாட்சிசெய்து வரக்கடவாய் என்று போதித்தலும், தக்கன் அவையனைத்தையுஞ் செவிக்கமுதாகக்கேட்டு, வாசனையூட்டிய தாம்பூலாதிகளை வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, பிராமணர்முதலான பெரியோர்கட்கு அளவற்றதானங்களை நடத்தி ஆதுலர்க்குச்சாலை-ஓதுவார்க்குணவு-அறுசமயத்தார்க்குண்டி முதலிய முப்பத்திரண்டறங்களையும் நடத்தி, அளவற்ற தேவாலயங்கட்குத் திருப்பணி முதலியவைகளை நடப்பித்து, உமாதேவி - சரஸ்வதி - இலக்குமி முதலிய சத்தியாலயங்களுக்கு மாங்கிலியம் - ஆடையாபரணாதி முதலியவைகளை வரிசைதந்து, ஆதிசைவப் பிராமணர்களுக்கெல்லாம் ஆகமவிதிப்படி பூசனைபுரிந்து, அமைச்சர்முதலாயினார்க்குத் தேர்-பதாதிகள்-நிலம் முதலியவைகளை வெகுமதிசெய்து, சிவாலயங்களுக்கெல்லாம் திருவிழாக்கள் நடப்பித்து, ஆகாயமுகட்டையளாவத்தக்க கோபுரங்கள் சூழ வோராலயமெழுப்பி, அதிற் கணேசமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து, முற்கலமுனிவரால் விதித்த விதியின்படித் தினந்தோறும் பூசைகளை நடத்தி, [illegible]

பூர்வ ஜன்மத்தின் பாதத்தை இடைவிடாது பணிந்து எத்திக்கிலுஞ்
சத்துருக்களில்லாதபடி இவ்வுலகத்தை யெல்லாம் தனதொரு
குடைநிழலிலிருத்தி, நீதிநெறி தவறாமல் தேவேந்திரனைப்போல
சகலபோகங்களையும் அநுபவித்து அரசாக்ஷிசெய்து எல்லாவுயி
ர்களையும் ஆதரித்துவந்தான். பக்தசிரோமணிகளே! தெய்வவழி
பாட்டின் மகிமையைக் கண்டீர்களா! இத்திவ்யசரிதத்தால், தெய்வ
வழிபாட்டிற் சதாமனதைச்செலுத்தி ஆநந்திப்போர்க்கு எய்து
வது நீங்காத இன்பமென்றும, தெய்வத்துக்கேனும, அவனடியார்க்
கேனும் இன்னல்செய்ய நினைப்பினும் செய்யினும அதனால்வருவது
துன்பமென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குவதால் ஒவ்வொரு மாநுட
ரும் தெய்வவழிபாட்டில ஒழுகுவதே இம்மை மறுமைப் பயன்
கட்கேற்ற சிறப்பாம்.

இந்திர ருக்குமாங்கத சரித்திரம்.

உருக்குமாங்கத ராஜனானவன தனக்குத் தன் தந்தையுபதே
சித்த ஏகாக்ஷரமந்திரத்தை இடைவிடாது ஜெபித்துக்கொண்டு
கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில பேரன்புடையவனாகிச
சதாகாலமும அவரைப்பூசைசெய்துகொண்டு சத்துருக்களையெல்
லாம்வென்று இலக்குமி-சரஸ்வதி-பூதேவி-என்னு மிவர்கள களிக்
கும்படியாகத் தன்னாணையை பலதிக்குகளிலுஞ்செலுத்தி, வேதி
யர்கள், நீதியையுடைய அநேகநிருபர்கள், சகலகலைகளிலும்வல்ல
பெரியோர்கள் இவர்களெல்லாம இருமருங்கிலுஞ் சூழ்ந்திருக்
கவும், அதிதிகள் முனிவர்கள், தபோதனர்கள், பெரியோர்கள்
முதலாயினோர் ஆசீர்வதிக்கவும், மந்திரியர், புரோகிதர், சேனாபதி
யர், தூதர், சாரணர்முதலான துணைவர்கள் பக்கங்களில் நெருங்கி
யிருக்கவும், குற்றமற்ற சேனைகள் கூட்டங்கூட்டமாக வளைதடி-
வாள்முதலிய படைகளைக்கொண்டு சூழ்ந்து தலைவாயிலிலுலாவ
வும் அதிகசந்தோஷத்துடன் சிங்காதனத்தில் வீற்றிருந்து செங்
கோன்முறை வழுவாமல் இராஜ்யபரிபாலனஞ் செய்து வருகின்ற
காலத்தில், சில பிரஜைகள் அவ்வுருக்குமாங்கதராஜன் சமுகத்தில்
வந்துபணிந்து, ஓ சர்வஜனோபகாரசக்கிரேசுவரா! காட்டுமிருகங்
கள் கூட்டமாய் வந்து காட்டுப்பயிர்களை வீட்டியழிக்கின்றனவெ
ன்று முறையிட்டார்கள். அதையவ்வரசன் கேட்டு மனமிரங்கி
வேட்டையாடி வருவோமென்றெழுந்து பலபடைக்கூட்டங்களை
அழைத்துக்கொண்டு சகலபரிஜனங்களோடும் காட்டிற்சென்று,

சிங்கம்-புலி-யானை-கரடி முதலிய மிருகங்களைக்கொன்று, பின்பு தான் தனிமையிற்சென்று தனக்கெதிர்ப்பட்டுவருகின்ற செந்நாய்-கலைமான்-புள்ளிமான் முதலியவைகளை அதஞ்செய்து வருகையில், அதிக தாகங்கொண்டவனாகி இளைப்புற்று ஒருகானகத்துள் நுழைந்தான். அது கபிலமஹாமுனிவர் வாசஞ்செய்கின்ற ஆசிரமமாயிருந்தது. அவ்விடத்தில் அவர்பத்தினியாகிய முருக்தை யென்பவள் உல்லாசமாய்த் தனிமையே உலாவல்செய்திருக்கக்கண்டு அவளருகிற் சென்று, அன்னையே! அடியேன தாகந்தீருமாறு நீர்தரல்வேண்டுமென்று மிகுந்த வணக்கத்தோடு பிரார்த்தித்தான். அரசனை அம்முருகதைகண்டவுடன் அவன் வடிவத்தின் பேரழகினுக்காளாயுற்று அதிக விரகதாபங்கொண்டு மிகவிளைப்போடு நீர் தேடி வந்த மெலிவையுங்கருதாது இதனைச்சொல்லுகிறாள்.

மஹாராஜனே! உன்னைப்போல அழகினமிருந்தவர்கள் தேவர் கூட்டத்துங் காணக்கிடையார்கள் உன்திருமேனியில் சகல லக்ஷணங்களு நிறைந்திருக்கின்றமையால், உன்னைக்கண்ட பாவையர்களில் யாவர்தான் மோகத்தாற்சோர்வுறார்கள்? ஒருகாரிகையானவள் மற்றொருவனை புருடனைக்கண்டு ஆவல்கொள்ளுவளாயின், உடனே அவனோடு கூடினல்லது அவள் விரகமொழியுமோ? முன்னர் யாவரையும் வதைக்கும்படி ஆலாகலவிடத்தைத் தன்னிடத்திலுடைத்தாகிய திருப்பாற்கடலானது மீட்டும் நல்லவமுதத்தையீந்து யாவரையும் பிழைப்பித்ததுபோல உனது பேரழகினாலுண்டாகிய விரகத்தீயானது எனது தனங்கள் குழையும்படி உன்றோள்களோடு கூடிச் சுகித்தாலல்லது தணியாதென்று சொல்லித் தன்றுகில் சோரவும், கூந்தலவிழவும், முத்தாரங்கள் பொறியவும், கைவளைகள் நழுவவுமான அலங்கோலத்தோடு அவ்வரசனுக்கெதிரில் நின்றாள்.

இவ்வாறு அம்முருகதையானவள் தானேவலிந்துகூடவேண்டுமென்றிரந்தும், உருக்குமாங்கதன் மனங்கலங்காதவனாகி அவளை நோக்கி, தாயே! நீ அந்தணர்குலத்திற்பிறந்து ஓரருந்தவருக்குக் குலபத்தினியாயினை. யானோ அரசகுலத்திற்பிறந்து இவ்வுலகத்தை அரசாட்சிசெய்துவருகின்றேன். அன்றியும், நான் வேண்டிய வேண்டியாங்குதரவல்ல அன்பர்க்கருள்சுரக்கும் பரமதயாநிதியாகிய விநாயகப்பெருமானை சதாகாலமும் வழிபடுகின்ற அடிமையாயுள்ளவன். என்மனது எக்காலத்திலும் பரஸ்திரீகமனஞ்செய்வதில்லை,

பெண்களாயினோர், தங்கள் கணவரோடு கூடியிருப்பது மும்மை லானசுகத்தைக்கொடுக்கும். அவ்வாறின்றி அன்னியபுருஷரோடு கூடுவாராயின், அஃது உடனே துக்கத்தையேயுண்டாக்கும். மறுமையில் அளவற்ற நரகவேதனையி லழுந்தி வருந்தவுஞ்செய்யும். இறந்தபின்பன்றோ நரகவேதனை காண்பதெனின், நீ கொண்ட நெறிதப்பியகாரியத்தால் இப்போதே எங்கும அவதூறுசொற்களுண்டாவதன்றி, உன்கணவனுக்குரிய பெருமிதத்திறகுங் குறைவு வருமாதலால், இனியுன்மனதை யடக்கி உனக்குண்டாயிருக்கின்ற விரகதாபத்தை யொழித்துவிடக் கடவாயென்று பரிவாயுரைத்தான்.

அவையனைத்தையும் முருநதைகேட்டு, இவ்வரசன்மனமானது சிறிதுங் கலங்குதலில்லாமல கல்லுக்கொப்பாக விருப்பதன்றி, கண்டிப்பானசொற்களையுமபேசுகின்றானென்று மனம்வருந்திச் சரேலென்று அவ்வரசன் கையைப்பிடித்து, அன்பனே! ஸ்திரீகளாயினோர்க்கு இநதக்கிரேதாயுகத்திலுந் திரேதாயுகத்திலுந் தாங்களே வலிந்துசென்று புருஷர்களைக்கூடுதற்கான சுதந்தரத்தைப் பிரமதேவன் கொடுக்கின்றானதலால், நான உன்னைவலிந்து புணரலாம். நீயே என்னைவலிநது என்னைக் கூடவருவையாயின், பழிபாதகங்களை நினைக்கவேண்டியதுதான். அவ்வாறின்றிக் கிரமப்படி நானேயுன்னைக்கூடவேண்டுமென் றிச்சையுற்றால், அதனுலுனக்கென்ன பழிபாதகங்கள்நேரும? அரசே! இனிமேலுந் தடைசொல்லி என்னைக்கூடாதிருத்தல் சௌரியமுள்ளமன்னவனாகிய உனக்கு அழகன்று. நீ புருஷத்வமுடையவனல்லையோ! அளவுமீறிய என்காமத்தணலைத் தணியாதொழிவையேல் நினக்குப்பாபம் பிராப்தமாம். மன்மதன்போலும் எழில்வாய்ந்த என்மனோரஞ்சகனே! என்னையணையப்பின்னிடாதே! என்சொல்லைத்தடுப்பையேல், உன்னுடல் நீறும்படி எரித்திடுவேன். அன்றி, உன்னழகனைத்துங் குலைந்து நகரத்தைவிட்டுக் காட்டிற்றிரிந்துழலும்படி சபிப்பேன். இதனை உன்மனத்தில் தீர்க்கமா யோசிக்கக்கடவாய் என்றுபலவாறு சொல்லி, அவ்வரசன்மேல்விழுந்து அவனைப்பலாத்காரமாகத் தழுவினாள். உடனே அவ்வரசன் பயந்து நடுங்கி [illegible]சப்பெருமானை யுளத்துன்னி, தன்னை ஆபத்துக்குள்ளாக்[illegible] அருள்செய்யவேண்டுமென்று தியானித்து, அம்மணீ! இம்மாதிரிச்செயல்கொடிதுகொடிதெனக்கூறி, தனது கைகளால்

அவளை நிலத்திலவிழ உதறி, ஹே துர்மார்க்கியே! பெருகிவருகின்ற
வெள்ளமும் ஓரணைக்கடங்கிநிற்கும். அக்கினி, சர்ப்பமுதலிய தீய
ஜெந்துக்களும் ஓர் தடைக்கஞ்சியிருக்கும். அறிவில்லாதவருக்குண்
டான காமவிச்சையானது அவருளடங்காது. அதனைப்பள்ளங்கண்
டோடுகின்ற புனலுக்கொப்பென்று சான்றோர் சொல்லுவர். அது
போலவே நீ இத்துட்டநடத்தைக்கு அஞ்சாது உட்பட்டனை. உன்
செய்கை இத்தகையதென்று முன்னரறிந்திருப்பேனாயின், யானிங்
கொருபோதும் வரத்துணியேன். நீ மகாதவசிரேஷ்டருடைய பத்
தினியென்று என் தாகந்தணியுமாறு தண்ணீர்கேட்டதற்கு, நரக
வேதனைக்குள்ளாக்கும் மஹாபாதகமானகாரியத்தை நடத்தினை.
உன்னை இப்போதே என்வாளுக்கிரையாக்கிவிடுவேன். ஆனால்
இருடிபத்தினியென றஞ்சிவிட்டுவிட்டேனென்று சொல்லி அவ்
விடம் விட்டு நகர்ந்தான். அரசன்கூறியசொற்கள் முகுந்தையி
னுடைய காதில் நாராசங் காய்ச்சியூற்றினது போலாய் கோபங்
கொண்டு, ஏ மன்னவா! நீயே இங்குவந்து, உன்பேரழகையெனக்
குக்காட்டி, மோகத்தையூட்டி என் கற்புநிலைகுலையச்செய்தனையே
யன்றி, என் இச்சையைநிறைவேற்றினாயில்லை. ஆதலால், உன்சரீ
ரத்திற் குட்டநோ யுண்டாகக்கடவது என்று சபித்தாள்.

இவ்வாறு முகுந்தையிட்ட சாபத்தைக்கேட்ட உருக்குமாங்
கதன்வருந்தி, இவள் இச்சித்தது நேராமற்போயினமையாற் கோ
பங்கொண்டிருக்கின்றாள். இவளிட்ட சாபத்திற்குத் தீர்வுகேட்டி
னுஞ் சொல்லாள். சிச்சீ! நிலைகெட்டமனத்தையுடைய இப்பாதகி
முகத்தைமீளவும் நாமபார்க்கலாகாதென்று திரும்பிச்சென்றான்.
உடனே அவளிட்ட சாபத்தினாற் சரீரமெங்கும் வெண்குட்டரோக
முண்டாக, அதனையவ்வரசன்கண்டு மிகுந்த துயரடைந்து, விநாயக
மூர்த்தியை மனதில்நினைந்து, தேவரீரது பணிவிடைகளில் அடி
யேன் மனதறிந்து யாதொரு குற்றமுஞ் செய்ததில்லையே! தேவ
ரீரது பாதபதுமங்களையடைந்த அடியார்களிடத்திற் கணப்பொ
தேனுந் திருவருள் நீங்குவதுண்டோ? தேவரீரது கிருபை அடியே
னிடத்துண்டாயிருக்குமாயின், இப்பொல்லாங்கு என்னை
வந்துசேருமோ? அடியேன் அறியாமையாற்செய்தவினை யாதே
னுமிருந்தால் அதனைத் தேவரீர் பொறுத்தருளல் கடனன்றோ?
யனீ முகுந்தையொண்டு [illegible] தைத் ஙிராகரித் [illegible]
மாயிருக்கும் அப்பாதகியிட்ட பொல்லாச்சாப [illegible]

இந்த வியாதியுண்டாகலாமா? தேவர்களுங்கண்டு நாணத்தக்க பேரொளிவாய்ந்த எனது சரீரமானது, பெற்றவளு மிகழத்தக்க வெண்குட்ட நோய்கொண்டதே! இனி இவ்வுடலை இக்காட்டிற்றானே மாய்த்துவிடுவதல்லது வியாதியோடு மெனது நகரத்திற் சென்று எவ்வாறு அரசாட்சி செய்வேன்? ஐயோ! இதென்ன கொடுமை? என்று துயரப்பட்டு அவ்வனத்திற்றானே ஓராலமரத்தினீழலிலிருந்தான் இஃது இங்ஙனமிருக்க.

அரசனோடு வேட்டைக்கு வந்த பரிசனங்களெல்லாந் தங்களரசனைத்தேடி, எங்குங் காணாதவர்களாய் மதிமயங்கி நகரத்திற் போய்ச் சேர்ந்தார்கள். உடனே சூரியன் அஸ்தமித்தான். அவ்விரவெல்லாங் காட்டிற்றானே அரசன் இளைப்பாலும் பசியாலும் வருந்தி நித்திரையின்றி விதியை நொந்துகொண்டு கவலுற்றிருந்தான். பொழுதுவிடிந்தது அரசன் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு ஸ்ரீவிநாயகக்கடவுளை மனதிற் றியானித்துக்கொண்டிருந்தான். அப்போது ஆகாயமார்க்கமாக நாரதமுனிவர் செல்லக்கண்டு, ஹே சுவாமின்! தேவரீரது திருவடிகட்கு அடியேன் அடைக்கலம்! அடைக்கலம்!! ஓ கிருபாமூர்த்தியே! அடியேன் வீமராஜனுடைய புத்திரன் என் பெயர் உருக்குமாங்கதன். தேவரீர் இங்கெழுந்தருளியும் அடியேன் துன்பப்படுதலழகோ? அடியேனை இரக்ஷித்தருளல் வேண்டுமென்று பன்முறை துதித்து ஓலமிடலும் தமது ஞானநோக்கத்தினுற் சகலமுமறிந்த நாரதமுனிவரானவர் தாம் கருதிச்செல்கின்ற காரியத்தை விடுத்துக் கனைக்கின்ற கன்றைநோக்கிக் கதறிவருகின்ற பசுவைப்போல் விரைந்து நிலத்திலிறங்கி அரசனெதிரில் நின்றருளினார். அவ்வரசனவரைச் சாஷ்டாங்கமாக வணங்கி, சுவாமி! அடியேன் இக்கானகத்தை நோக்கி வேட்டையாட வந்த விடத்தில் மிக்க தாகமுண்டாகியது. அதனால் இளைப்பாகி நீரிருக்குமிடத்தைத் தேடிச் செல்லுகையில் அங்கோராச்சிரமத்தில் இருடிபத்தினியாகிய முகுந்தையென்பவள் எனக்கெதிர்ப்பட, அவளை நீர் தரக்கேட்டேன். அவள் விரகநோய் கொண்டு என்னை வலிந்து பற்றினாள். யானதற்கிணங்காமையால் என்னைச் சபித்து இக்கொடிய நோயை யடையும்படிச் செய்தாள். யான் இந்த நோயோடு எனது நகரத்திற்குச் செல்ல மனமில்லாமல் உயிரைவிட நினைந்தேன். அரிய தவங்களைச்செய்து அடியேனைப் பெற்ற தாய் தந்தையர் நிமித்தம் இவ்வுயிரை வைத்துக்

கொண்டிருக்கின்றேன். யானாராதித்து வந்த கணேசமூர்த்தியினுடைய கிருபையினாலே இத்தருணத்தில் தேவரீரெனது கண்ணெதிரில் வரப்பெற்றேன். இனி யடியேனுக்கு இவ்வியாதி நீங்குமாறு ரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்த வரசனைப் பார்த்து, "அப்பனே! உனதாட்சிக்குட்பட்ட விதர்ப்பதேசத்தில் கந்தாப்பமென்னு நகரத்தில் விநாயகமூர்த்தி ஆலயமொன்றிருக்கிறது; அவ்வாலயத்தில் மூர்த்திகரித்திருக்கின்ற சிந்தாமணி விநாயகரைப் பூசைசெய்து, அவ்வாலயத்தெதிரில் கணேசகுண்டமென்னும் தேவர்களாலாய புகழ்த்தக்க தடாகத்தில் ஸ்நானஞ்செய்து, அவ்வவர்களிஷ்டகாமியார்த்தங்களைப் பெறுகின்றார்கள். ஒருசூத்திரன் குட்டநோயினாற்றுன்புற்றுத் தீர்த்த யாத்திரையாகச் செல்லுகையில், அத்தடாகத்தையடைந்து ஸ்நானஞ்செய்தெழுந்தவுடன் அவனுடைய குட்டநோய் நீங்கியதன்றிச் சகல வினைகளும் நீங்கப்பெற்று, விநாயகமூர்த்தியினுடைய சாரூபத்தையடைந்து, அவரருளாற்றேவகணங்கள் கொண்டுவந்த விமானத்திலேறிக், கணேசலோகம் போய்ச்சேர்ந்தான். நீயுமவ்விடஞ்சென்று ஸ்நானஞ்செய்து அங்கெழுந்தருளி யிருக்கின்ற விநாயகமூர்த்தியைப் பூசித்தால், இக்குட்ட வியாதியுனை விட்டொழிந்து போகுமென்று" நாரதமுனிவர் சொன்னார்.

இவ்வாறு நாரதமுனிவர் சொன்னதையெல்லாம் உருக்குமாங்கதராசன் செவிகுளிரக்கேட்டு, ஆனந்தங்கொண்டு, மீளவும் பணிந்தெழுந்து, சுவாமி, கதம்பவனத்தில் விநாயகமூர்த்தியை யாவர் பிரதிட்டைசெய்து பூசித்தவர்கள், அந்த விவரத்தை அடியேன்மீது கிருபைசெய்து திருவாய்மலர்ந்தருள வேணுமென்று கேட்க, நாரதமுனிவர் இந்த இதிஹாஸத்தைச் சொல்லத்தொடங்கினார்.

கேளும் அரசனே! முன்னொருகாலத்தில் தேவர்களெல்லாந், தொழும்படியாக ரத்நசிங்காதனத்திலிருந்து இந்திரன் அரசுசெலுத்துகின்ற சமயத்தில், நாம் அங்கு சென்றோம். நம்மை யவ்விந்திரன் பற்பல உபசாரங்களைச்செய்து, ஓராசனத்திலிருத்தி, சுவாமி தேவரீர் சகல புவனசஞ்சாரியானதால் ஏதாவது அதிசயமுண்டோவென்று கேட்டான். இதற்கு யாம் சொன்னதாவது, இந்திரனே, யாம் பூலோகத்திற்குப் போயிருந்தோம்
விடத்தில் கௌதமர்பத்தினியைக் கண்டோம். அவளமகிம்

பாக இத்தேவலோகத்திலாவது மற்றெந்த லோகத்திலாவது காணேன், திரிபுர சங்காரமூர்த்தியாகிய சிவபெருமானுடைய சரணாரவிந்தங்களையே இடைவிடாது தியானிக்கின்ற என்மனமும், அவளைக்கண்டவுடன் விருப்பங்கொள்ளுவாயின், இப்பிரபஞ்சத்தில் அவளைக்கண்டு விரும்பாதவர்கள் ஒருவருமிருக்கமாட்டார்களென்று சொல்லி, அவ்விடத்தினின்றும் நீங்கினேம்.

பின்னரவ்விந்திரனுக்கு அகலிகையின்மீது விரகமுண்டாகி, உடனே அவன் கணவராகிய கௌதமமுனிவர் வடிவங்கொண்டு, அவளிடம்சென்று, "என்பிராணநாயகியே! யான்காலையில் நீராடச் செல்லுகையில் அங்கோர்மாது நிர்வாணமாக ஸ்நானஞ்செய்து கொண்டிருந்தனள், அவளழகைப்பார்த்த எனது மனம்பேதித்து, விரகதாபங்கொண்டு செய்யவேண்டிய காரியங்களில் மனதைச்செலுத்தச் சக்தியில்லாமல் வந்துவிட்டேன். விரைவில் என்னுடன் கலவிசெய்து சுகந்தருவாயென்று, வெருசவடிவங்கொண்ட இந்திரன் சொன்னான். இவையனைத்தையும் கேட்ட அகலிகை மாறுவடிவங்கொண்ட பகாபாதகனைத் தன்கணவனென்றே நினைத்து, காதலன் கருத்தெவ்வாறோ, அவ்வாறே நடந்துகொள்வது பெண்களுக்குரிய கடமையாதலால், அத்தருமத்தின்படி அவளிசைந்து அவனுடன் கூடினாள். உடனே சந்தேகம் பிறந்து, இவன்வடிவம் நம்முனிவரைப்போலிருந்தாலும், இவன் சரீரத்துண்டான வாசனையும், பேசுகின்ற பேச்சுகளும், செய்த கலவித்தொழில்களும், வேறுபட்டிருப்பதால், கள்ளவேடங்கொண்டு வந்தவன் தேவேந்திரனென்றறிந்து, அவனைவிட்டுவிலகி, எனது முனிபுங்கவரைப்போல மாறுவேடத்தோடு வந்த நீயார், உள்ளதை மறைத்தால் சபித்துவிடுவேனென்று சொன்னாள். உடனே இந்திரன் நடுங்கி தன் சுயரூபத்தைக்காட்டி, விரகதாபத்தால் "நான் உன்னைக்கள்ளவேடங்கொண்டு புணர்ந்துவிட்டேன், என்னைப்பாதுகாக்கவேண்டுமென்று" இரந்தான். இதைக்கேட்ட அகலிகை கோபங்கொண்டு, அடாபாவி! சந்திரனுக்குற்ற களங்கம்போல் எனமரபுக்கு எக்காலமுமமாளாத களங்கத்தையுண்டாக்கி, எனது கற்பையுமழித்து, எனது கணவருடைய உள்ளத்தையும் கொதிக்கச்செய்து,என்னையும் பதிவிரதத்தினுங்கெடுத்தாயேயென்று சொல்லிப்பயந்துப்பரிதபிக்கிற சமயத்தில்,ஸ்நானஞ் செய்யப்போயிருந்த கௌதமமுனிவர், சகல நியமாதிகளையுமு

டித்துக்கொண்டு மீளவுந் தமதாச்சிரமத்தில் வந்து, மனைவியைக் கூவியழைத்தபோது, அவள் உள்ளங்கலங்கி, உடலம் நடுங்கி முனிவரை நமஸ்கரித்து, மதிமயங்கி, உரைகுளறி, அவர் ஸ்நானத்திற்குப்போயிருந்த சமயத்தில், கள்ளவேடத்தோடுவந்த இந்திரனைத் தன்கணவரென்று நம்பிக் கலவிசெய்துவிட்டேனென்றனள். அம்மொழியைக்கேட்ட கௌதமர், மகாகோபங்கொண்டு, உனக்கு நமதுடலின் தன்மையும், வார்த்தைகளின் மாதிரியும் தெரியாமற்போயதா, நீ சிறிது மச்சமின்றிப் பரபுருடனைச் சேர்ந்ததால், நீ சிலையுருவாகப் போகக்கடவாயென்று சபித்தனர். இச்சமயத்தில் இந்திரன் பூனையுருவங்கொண்டு வெளியே யொளித்தோடப்புறப்பட்டதும், அதைக்கண்டுணர்ந்த முனிவர் "அடா துராத்மா! உன்னை இப்போதே நிக்கிரகிக்கிறேன், தேவராசனுக்காக உன்னுயிரைப் போக்காவிடினும், நீ இந்தப் பெண்குறிக்காசைப்பட்டு உன்னுடைய பதவியைமறந்து அக்கிரமஞ் செய்ததால், உன்னுடைய உடல்முழுவதும் பெண்குறியாகக் கடவதென்று சபித்தனர். அவர் சொல்லிவாய்மூடுமுன்னமே இந்திரனுடைய உடல்முழுதும் பெண்குறிகளுண்டாயின. உடனே இந்திரன் துக்கசாகரத்தில் மூழ்கி, தேவலோகத்துக்குப் போகவெட்கப்பட்டுக் கொண்டு, எவரும் தன்னைப் பார்க்காதபடி ஒளிந்துகொள்ளவேண்டுமென்று, ஓர் மடுவிற் புகுந்து, அங்கிருந்தும் தாமரை நாளத்தில் ஒளித்துக்கொண்டனன். இந்திரன் செயலிவ்வாறிருக்க, தேவர்களெல்லாம் வழக்கப்படி அவன் கொலுச்சபையிற்சென்றார்கள். அங்கு அவர்கள் நெடுநேரங் காத்திருந்தும், அவன் வராமையால், அந்தப்புரத்தில் இந்திராணியைக் கேட்க அவளும் இந்திரனைப் பார்க்கவில்லையென்று சொல்ல, பிறகு தேவர்கள் தேவலோக முழுவதும் தேடிக்காணாததால் அச்சமுற்று, பூவுலகத்திற் சென்று, கடல், மலை, காடு, நாடு, முதலியவிடங்களிலும், சத்தியலோகம் பாதாளம் முதலான 14 லோகங்களிலும் தேடிக்காணாதவர்களாகி, பிருகஸ்பதி பகவான் தேவர்களுடன் நம்மிடம் வந்து, நமக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து இந்திரனிருக்குமிடத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தபோது, யாம் தேவேந்திரன் படுகின்ற துன்பங்களனைத்தையும் விவரமாகச்சொன்னோம். இதைக்கேட்ட தேவர்கள் மனமநொந்து, இனியென்ன செய்வோமென்று சிந்தித்து, யாவர் சாபங்கொடுத்தவரோ அவரே அச்சாபத்தைக் கிருபைகூர்ந்து தீர்க்கவேண்டியதல்லது, மற்றவர் ஏதே

செய்யினும் தீர்க்கலாமென்று நிச்சயித்து, அம்முனிபுங்கவரிடம போய்ப் பிரார்த்திப்போம் வாருங்களென்று,நம்மையுமழைத்தார்கள். யாமும்பிரகஸ்பதிதேவரும், அவர்களோடுசென்றோம். பிறகு தேவர்கள் கௌதமமுனிவரைக்கண்டு அவர்பாதங்களில் நமஸ்கரித்து,அவருள்ளமுருகும்படியாய் ஸ்தோத்திரஞ்செய்தார்கள். அந்த தேவர்களை கௌதமமுனிவர் பார்த்து, ஞானநோக்கிற் சகல காரியங்களையுமறிய வல்ல தேவசமூகங்களே! மனவாட்டத்துடனிங்குவந்த காரணம் யாது? உங்கட்கு நம்மாலாகத்தக்க காரியங்களேதேனுமுண்டாயிருக்குமாயிற் சொல்லுங்களென்று கேட்க, தேவர்கள், சுவாமி உங்கள் திருமுகவிலாசத்தைக் கண்டு களிப்புற்ற எங்கட்கு இனியொரு குறைவுண்டோ, எங்கள்மீது கிருபைசெய்து இந்திரன் ஏற்றிருக்கின்ற சாபத்தை நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதைக்கேட்ட முனிவர், ஓ தேவர்களே! அறிவில்லாதவன், வஞ்சகன், துஷ்டன், ஆசாரஹீனன், தன்னுயிரைப்போல மன்னுயிரை யாதரிக்காதவன், கொடியநெஞ்சையுடையவன், இவர்கள் முதலான மகாபாவிகளை நினைக்கவேகூடாது. ஆயினும், ஒருபாதகன்மீதுப் பலர்கூடித் தயவுவைத்தாராயின், அவனுடனே புனிதனாவன் அதுபோல, பாதகனாகிய தேவேந்திரன்மீது, நீங்களெல்லோரும் கிருபை வைத்திருப்பதால், அவனினிமேல் புனிதனாவனென்று சொல்லி, பிரகஸ்பதிதேவரைப்பார்த்து, ஓ தெய்வகுருவே! முத்தொழில்களையும் மும்மூர்த்தி சொரூபமாயிருந்து நடத்துகின்ற விநாயகமூர்த்தியினுடைய சடாக்ஷரமந்திரத்தை உமது வல்வினைகளை வாட்டுமாறு உபதேசிக்கின்றோம். நீர் அம்மந்திரத்தை தேவேந்திரனுக்கு உபதேசஞ்செய்யும், அதனால் அவன் சரீரத்திலுண்டாயிருக்கின்ற பெண்குறிகள் மாறிக்கண்களாகும். பின்னும் அவன் செய்திருக்கின்ற சகலபாதகங்களும் நீங்குமென்று, அந்த மந்திரத்தைத் தீட்சைமுறையோடு முபதேசித்து, அதை யனுஷ்டிக்கு முறையையுமருளிச் செய்தார். பின்னர் பிரகஸ்பதி முதலான தேவர்களனந்தங்கொண்டு, கௌதமமுனிவரை நமஸ்கரித்து விடைபெற்று, யாமும் சகலமான தேவர்களோடு இந்திரன் ஒளித்திருக்கின்ற மடுக்கரையிற் சென்றோம், "ஓ தேவேந்திரரே! வெளியில் வாரும், வெளியில் வாரும், உம்முடைய சாபந்தீரும்படியாய் நாங்கள் கௌதமமுனிவரை வணங்கிக்கேட்டு, உமக்கவர் கருணைபெற்று வந்தோம் நாரதமுனிவரும், பிரகஸ்பதி

பகவானும் இவ்விடம் விஜயஞ்செய்திருக்கிறார்கள்" என்று தேவர்கள் சொன்னவார்த்தையை இந்திரன் கேட்டு தாமரைநாளத்திலிருந்து வெளியே வந்தான். அவன் சரீரத்திலிருக்கிற ஆயாசக்கைப்பார்க்கச் சகியாத தேவர்களெல்லாரும் கண்ணை மூடிக்கொண்டார்கள். பின்னர் தேவேந்திரன் தான்செய்த குற்றங்களை வெளியிட்டு, பிரகஸ்பதிபகவானிடம் ஷடாக்ஷர மந்திரோபதேசம் பெற்று, அம்மந்திரத்தை யுச்சரித்தவுடன் அவனுடலிலிருந்த பெண்குறிகளெல்லாம் மாறிக் கண்களாயின. எம்மாலும், பிரகஸ்பதி பகவான் முதலானவர்களாலும் ஆசிர்வதிக்கப்பெற்று, இந்திரன் முகமலர்ந்து, ஆநந்தமாயினான். தேவர்கள் புட்பவருடம் பொழிந்தார்கள் அரம்பையர் நர்த்தனஞ்செய்தார்கள். பிறகு இந்திரன் தேவர்கள் தனக்காகச் செய்த நன்றிக்காக அவர்களைப் பலவாறு புகழ்ந்து இனிவிநாயகமூர்த்தியை யனுஷ்டித்து, அவர் கிருபைபெற்று உய்யுமாறு, ஓர் திவ்விய க்ஷேத்திரத்திலிருந்து, சிறந்த தவங்களைச் செய்து, பிறகு தேவலோகம் வருவேனென்று சொல்லி, தேவர்களுக்கு விடைகொடுத்தனன். அவ்வாறே யாவரும் சென்றபின்னர், இந்திரன் கடம்பவனக்ஷேத்திரஞ்சென்று, அங்கோர் தடாகக்கரையில் ஓராலயமேற்படுத்தி, அதிலே ஆகமவிதிப்படி விநாயகமூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து, நிராகாரனைப் ஷடாக்ஷரமந்திரத்தைத் தியானித்து ஆயிரம் வருடம் தவம்புரிந்தான். இவ்வாறு இந்திரன்செய்கிற தவத்திற்கு அருள்கூர்ந்து விநாயககடவுள் அவனுக்கெதிர் பிரத்தியக்ஷமாயினார். உடனே இந்திரன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, இருகரங்களையும் சிரமேற்குவித்து, கூத்தாடி, வலம்வந்து, ஆநந்தக்கண்ணீர் சொரிந்து துதிப்பதாயினான்.

அறிவாய விளக்கு மொளியாகி யெங்கு மசைவற்று நின்ற நிறைவாய்க்
குறியாகி யினைய முதலீ றிலாத குறைவற்ற வின்ப மயமாய்ச்
செறிவான நீரி னிழல்போல நின்ற திறலோயை யானும் வனைவேன்
வெறுஞான மான திருமேனி கொண்டென விழிகாண முன்னர் வரலால்.

இருண்மூழ்கு கண்ணி னமர்கேவ லத்தி னிதமின்றி நின்ற வுயிர்கட்
குருவாதி மூல முறைமுய்த்த கவற்றி னுளசாம் விகார வகையா
லிருவேறு காய மிசைவித் தருத்து மிறையோயை யானு மொழிவேன்
வெருணாமாயை நீத்த திருமேனி கொண்டென் விழிகாண முன்னர் வரவால்.

வாதங் கடந்து பலமாயை கன்ம வகையுங் கடந்த வைசெயு
மேதங் கடந்து பொருளொன்று மின்றி யெழுகின்ற மம்ம ருயிரி(

போதங் கடந்து துரியங் கடந்த பொருளோயை யானு முணர்வேன்
வேதங் கடந்த திருமேனி கொண்டென் விழிகாண முன்னா வரலால்.

இவ்வாறு தோத்திரங்களைச்செய்து, மனமுருகிநிற்கின்ற தேவேந்திரனை விநாயகக்கடவுள் அன்போடுபார்த்து, ஓ, சுராதிபனே நீ செய்த தவத்திற்கு யாம் சந்தோஷித்தோம், உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தருள, தேவேந்திரன் ஆனந்தபரவசங்கொண்டு, ஓ, "சகலமுறைதாரகாத்தகனே, உயர்ந்த ஞானயோகத்தை யனுஷ்டிக்கத்தக்க பரிபக்குவரெவர்களோ, அவர்களிருதயத்தி லொன்றுபட்டிருப்பது தேவரீருடைய பாதபத்மங்கள், அதனை அடியேனுக்கருளாது, வெளிப்படையாகிய சுவர்க்கலோகவரசாட்சியை யருளிச்செய்தீர். அந்தச்சுவர்க்கலோகவரசாட்சியையும் ஒரிடையூறில்லாமல் சகலபோகங்களோடும் புகழ்பெற்றுளவதற்கு முன்னொருகாலத்தில் பிரமதேவர் உபதேசித்த ஷடாக்ஷரமந்திரத்தை மறந்து, அளவற்ற பிழைகளைச்செய்த காரணத்தால், மிகத்துன்பங்களையெல்லாமடைந்தேன், பினவுமதைப் பிரகஸ்பதிபகவானாலும் உபதேசிக்கப்பெற்று, அத்துன்பங்களினின்றும் நீங்கி, அயிராவதத்தையுடையவனாயினேன். அன்றியும், அம்மந்திரத்தை இடைவிடாச் சாதித்த பேற்றினால் மனவாக்குக் காயமென்னும் மூன்று கரணங்களினாலும் அறிதற்கரிய தேவரீரை அடியேன்முன் பிரத்தியக்ஷமாகக் காணப்பெற்றேன். இனிமுடியாத காரியம் அடியேனுக்கென்ன விருக்கின்றது.

தேவரீர் திருவடிகளில் பணியாதிருப்பதே சகலகாரியங்கட்கும் இடையூறு வருவதற்குக் காரணமானதால், தேவரீர் திருவடிகளில் அடியேனுக்கு மாறாதபக்தியை யருளல்வேண்டும். இத்தலத்தில் அடியேன் பூசித்த தேவரீர் திருவுருவத்திற்குச் சிந்தாமணிவிநாயகரென்றும், இத்தலத்திற்குச் சிந்தாமணிதீர்த்தமென்றும், திருநாமமிருக்கவேண்டும். மேலுமிவ்வூரைக் கதம்பநகரமென்றுங் கூறல்வேண்டும். இக்கதம்பநகரத்தில் வசிக்கின்ற யாவருஞ் சிந்தாமணிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, தேவரீர் திருவுருவமாகிய சிந்தாமணிவிநாயகரைத் தரிசிப்பார்களாயின், அவர்கட்குக் கிடைத்தற்கரிய நான்கு புருஷார்த்தங்களுங் கிடைத்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, கணேசமூர்த்தி யவ்வாறே அனுக்கிரகஞ்செய்து, தமது திருவுருவத்தை மறைத்துச்சென்றார். தேவேந்திரனுந் தன் மனக்குறைவுகளற்றுச் சிந்தாமணி விநாயகரை

மீளவும் பூசித்துச் சடாக்ஷரமந்திரத்தை யனுஷ்டித்து விடைபெற்றுத் தனது சொர்க்கலோகத்திற் சென்று, ஓரிடையூறின்றி யரசாட்சி நடத்திவந்தனன். நீயுமவ்விநாயக மூர்த்தியைச் சரணடைந்து பூசிப்பையாயின், இப்பிணியொன்றுமே நீங்குவதன்றிப், பலவரங்களையும் பெறுவாயேயாமென்று நாரதமுனிவர் உருக்குமாங்கதராஜனுக்குச் சொன்னார்.

இவ்வாறு நாரதமுனிவர் சொல்லி அங்கிருந்து நீங்குவதற்கு முன்னமே, முன்னர் உருக்குமாங்கதராஜனைக் காணாமல் நகரத்திற்குச் சென்ற பரிசனங்களெல்லாம், காடு, மலை, முதலிய விடங்கள்தோறுந் தேடிக்காணாதவர்களாகி, அந்த நாரதமுனிவரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த வனத்திற்குவந்து, தங்களரசன் குஷ்டநோயுடனிருக்கக்கண்டு, மனமெலிந்து, ஓ, சார்வபௌமா! மானோடு வேட்டையாடச் சென்ற வுமக்கு, இந்நோய்வந்த காரணமென்னவென்று கேட்டார்கள். அதைக்கேட்டு அவ்வரசன் நடந்த காரியங்களனைத்தையும் விவரமாகச் சொல்லி, அவ்விடத்தினின்று நீங்கிக் கதம்பநகரஞ் சென்று, சிந்தாமணிவிநாயகரைத் தரிசித்துச் சகலவினைகளையும் போக்கக்கூடிய சிந்தாமணி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தான். உடனே அவன் சரீரத்தைப் பற்றிய குஷ்டநோய் நீங்கி, முன்னிருந்த உருவமும் உண்டாயது. பின்னர் அவ்வரசன் அளவற்ற வானந்தங்கொண்டு, மீளவுஞ் சிந்தாமணிவிநாயகரை யடைந்து பூசித்து, அந்தணர்களுக்கு அளவற்ற திரவியங்களைத் தானஞ்செய்துகொண்டிருக்கையில், தேவகணங்கள் அந்தரமார்க்கமாக வொரு தெய்வவிமானங்கொண்டுவந்து, அவ்வரசனுக்கெதிரில் நிறுத்தி, ஓ, புண்ணியசீலனே! நீர் இக்கணேசகுண்டமாகிய சிந்தாமணிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிந்தாமணிவிநாயகரைப்பூசைசெய்த பேற்றினால் உமக்குண்டாகிய பெருமை யாவராலுரைக்கப்படும். நீர் இவ்விமானத்தின்மீதாரோகணித்து, எம்மோடுங் கணேசலோகம் வாருமென்றழைத்தார்கள். அதையவ்வரசன் கேட்டு, அத்தேவகணத்தவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, சின்மய சிற்குண அகண்டாகார சச்சிதானந்தராகியுந், தம்மையடைந்தோர்களைத் தன்மயமாக்குகின்ற முதல்வராகியுங், காரணாதீதராகியுமிருக்கின்ற விநாயகக்கடவுளுடைய பெருங்கருணைக்கு யானெவ்வளவு பாத்திரன். யானென்ன தவங்களைச்செய்தேன். என்மனமெவ்வளவு பக்குவமாயிற்று. என்பிறவி எவ்வளவு யோக்

ஐயம். என்பக்தியெவ்வளவு, யான்முன்பு செய்திருக்கின்ற தபோ பலத்தினாலும், இத்திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த மகிமையினாலும், அடியேன் உம்முடைய தரிசனத்தை வெளியில் காணப் பெற்றேன். ஆயினும் வீமராசனும், சாருகாசினியும் அளவற்ற தவங்களைச் செய்து என்னையினர்களாதலால், அவர்களைவிடுத்து யான் மாத்திரமெவ்வாறு வருவேனென்று சொன்னான். அவையனைத்தையுந் தேவர்களுந் தலைவர்கேட்டு, மிக்க சந்தோஷங்கொண்டு, ஓ, அரசனே! நீ உனது தாய தந்தையாரை நினைத்து, இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால், தப்பாமற் பரிவையுடையோர், அவர்களுமுன்னுடன் வருவார்களென்று சொல்ல, அதைக்கேட்டரசன் மனக்களிப்படைந்து, தர்ப்பையை முடிந்து. அம்முடிந்த தர்ப்பையைத் தந்தைமுதலாயினோரை நினைந்து ஸ்நானஞ்செய்வித்து, தானுமாடிக்கரையேறி வந்து, தனக்கு வழிகாட்டிக் காப்பாற்றிய நாரதமுனிவரைப் பணிந்து, தன்பிறப்பைப் போக்கியருளிய அத்தீர்த்தத்தையுந் துதித்து நின்மல சொரூபத்தை யடைந்தான். அவ்வரசனுடனிருந்த மற்றவர்களும் அதில் ஸ்நானஞ்செய்து தேவரூபம் பெற்றார்கள். அரசன் மறுபடியும் சிந்தாமணி விநாயகரைப் பூசித்து, தனது சேனைமுதலிய பரிவாரங்களோடு விமானத்திலேறி, தனது கவுண்டினிய நகரிற்சென்று, தான் ஸ்நானஞ்செய்த பலனைத் தாய்தந்தை முதலாயினோர்க்குத் தத்தஞ்செய்தான். அரசனுடைய சேனை பரிவாரங்களும் அவ்வாறே தங்கள் தங்கள் சுற்றத்தினர்க்குத் தத்தஞ்செய்தார்கள். விநாயகமூர்த்தியினுடைய திருவருளால் உடனே அவர்க்கு வெவ்வேறு விமானங்கள் வந்தன. பின்னர் வீமராசன் முதலாயினோர் அவ்விமானங்களைப் பணிந்து அவைகளின்மேலேறிக்கொண்டு, உருக்குமாங்கதராசனோடும் விநாயகலோகத்திற் போய்ச் சேர்ந்தார்கள். சுபமஸ்து.

முற்றிற்று.

ஜயதேவோபாக்கியானம்.

இப்பிரபஞ்சத்திலுள்ள மானிடர்கள் ஜனனமரணம், நரக வேதனை இவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறதற்கு சாதனம் பகவத்பக்தியைத் தவிர வேறொன்றுமில்லை. பக்தியென்பது வேறு நினைவின்றி ஒருநிஷ்டையோடேயாவது நமது மனதை பகவானுடைய பாதாரவிந்தங்களில் லயிக்கச்செய்வதே. பகவான் பக்திக்குக் கட்டுப்படுவதுபோல மற்ற யோகம், யக்ஞம், தானம் முதலியவைகளுக்குக் கட்டுப்படார். வேறு சிந்தையின்றி பகவானை பஜனை செய்துகொண்டிருக்கும் பக்தர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராதபடி அவர் பாதுகாப்பார். பகவானை பக்தி செய்வதில் ஒருகாசுகூட செலவில்லை. எந்த ஜாதியானாலும், எந்த ஆச்சிரமத்திலிருப்பவனாயிருந்தாலும் பக்தி செய்வானேயாகில் அவனுக்கு பகவான் கட்டுப்பட்டு சகல காலங்களிலும் பக்கத்திலிருப்பார். இவ்விதம் பக்தி செய்து மோக்ஷத்தையடைந்தவர்கள் அநேகருளர். அவர்களில் ஜயதேவரென்னும் மகாபக்திமானுடைய சரித்திரத்தை இங்கு எடுத்துரைப்போம்.

கலியுகம் பிறந்து ஜகத்தில் புண்ணியங்கள் வரவரக் குறைந்து ஜனங்கள் பாபங்கள் பண்ணிவிட்டார்கள். இதையறிந்த விஷ்ணு பகவான் பாபிகளிடத்து இரக்கமுற்று அவர்களை நரகவாசத்தினின்று ரக்ஷிக்கக் கருதி தாமே பூலோகத்தில் அவதாரஞ் செய்து பக்தியை ஜனங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று நினைத்து, பகவானின் ஆக்ஞைப்படி ஜகந்நாதக்ஷேத்திரத்திலே திந்துபில்வமென்கிற கிராமத்தில் ஒரு பிராமணஸ்ரேஷ்டருக்குப் பிள்ளையாக ஜனித்தார். பெற்றோர்கள் அக்குழந்தையை மகா ஆநந்தத்தோடு வளர்த்து தக்கவயதில் வித்தியாப்பியாசம் கற்பிவித்தார்கள். ஜயதேவரென்னும் அக்குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்வதற்குமுன்னமே தனது பூர்வஜன்மத்தின் ஞாபகத்தினால் அப்போது கற்றிருந்தவைகள் ஞாபகத்திலிருந்ததால், சகல சாஸ்திரங்களிலும் நிபுணராகி பகவான்பேரில் அநேக கவிகளைச் செய்து ஜகத்திலுள்ளோர்களுக்குப் போதித்தார். தற்காலத்திலே கோவிந்தமென்னும் வடமொழியிலுள்ள கிரந்தம் அவரால் செய்யப்பட்டது. அந்தக்கவியை வீணை, மிருதங்கம், தாளம் முதலிய உப

கானத்தோடு கானஞ்செய்யும்போது கேட்பவர்கள் மனம் கல்லேனும் என்னமாய் உருகி ஆநந்தப்பரவசமாகுமென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவினுடைய ராஜக்கிரீடைமுதலான லீலைகளை வர்ணித்து கானஞ் செய்தபோது அவருக்கு ஜயதேவகவி என்னும் பெயர் உலகத்தில்பிரசித்தமாயிற்று. அவரால்செய்த கோவிந்த கீதையை உலகத்திலுள்ள சகல ஜனங்களும் சர்வகாலமும் கானஞ் செய்துகொண்டு அவரவர்களுடைய கிரககிருத்தியங்களை மறந்துவிட்டார்கள். இவ்விதம் ஜகத்பிரசித்தமாய் ஜயதேவருடைய கீதகோவிந்தத்தை ஜனங்கள் பாடுகிறதைக்கேட்ட அப்போது ஜகந்நாதத்தில் அரசுபுரிந்துவந்த சாத்தகியென்கிற ஒரு அரசன் ஜயதேவருடைய கவியில் ஆசையையடைந்து, தானும் அதைப்போல ஒருகவி செய்து தனது இராசியத்தில் அதைப் பிரசித்தஞ்செய்தான். அவ்வரசன் கிரந்தத்தை வித்வஜ்ஜனங்கள் அங்கீகாரஞ்செய்யாததால், அரசன் எல்லா வித்வான்களையும் வரவழைத்து "ஏன் நான்செய்த கவியை நீங்கள் கானஞ் செய்யவில்லை" யென்று வினவ, அதற்கவர்கள் "உமதுடைய கவியில் பக்திரசமில்லாதிருப்பதால் ஜயதேவருடைய கீதகோவிந்தத்தைப்போல பகவத் சன்னிதானத்தில் கானஞ்செய்ய பிரயோஜனமில்லை" என்று சொன்னார்கள். ஜயதேவர் ஸ்ரீவாசுதேவருடைய லீலாவிநோதங்களை வர்ணித்ததுபோல நானும் வர்ணித்தேனென்று சொல்லுவீரானால் அவ்வார்த்தை ஸ்ரீநிவாசனுக்கேற்காது. அவருக்கேற்காதது உலகத்தாருக்குமேற்காது. அவரங்கீகாரஞ்செய்யும்பட்சத்தில், நாங்கள் பாராயணஞ்செய்து ஆனந்தமடைவோமென்று சொல்ல, அதற்கு இராஜா இந்தவிரண்டுகிரந்தங்களையும் ஜகந்நாதத்தில் மூர்த்திகரித்திருக்கிற ஸ்ரீகிருஷ்ணனுடைய சன்னிதியில் வைத்து எது பகவானுக்குப் பிரியமாகவிருக்கிறதோ பார்ப்போமென்று சொன்னான். அதற்குப்பட்டதாகவெல்லாரும் சம்மதித்து அந்த இரண்டுகிரந்தங்களையும் ஒருநாளிராத்திரி சுவாமிசந்நிதானத்தில் வைத்து கோவிலகதவைச்சாத்தி முத்திரையிட்டு, மறுநாள் காலமே இராஜாவுடன் சகலவித்வான்களான பக்தஜனங்களும் கதவைத்திறந்து பார்த்தபோது, ஜயதேவருடைய கிரந்தம் சுவாமிக்குச்சமீபத்திலிருக்கிறதையும், அரசனுடைய கிரந்தம் கோவிலுக்கு வெளியே விழுந்துகிடக்கிறதையும் பார்த்து சர்வஜனங்களும் அத்யாச்சரியத்தையடைந்தார்கள்.

அதைப்பார்த்த அரசன் வெட்கமடைந்து மனவருத்தப்பட்டு பகவான் சந்நிதியிற்சென்று ஸ்தோத்திரஞ்செய்து "சுவாமி தேவருடைய பெருமை இன்றுதானறிந்தேன் உம்முடைய நாமம் பக்திபாவனமென்றும் சத்தியமானதென்றுமெண்ணி நான் கவிசெய்தேன். சகல ஜீவராசிகளுக்கும் பொதுவாய் விளங்குகின்ற தேவரீர் என்னைத் தள்ளிவிட்டு ஜயந்தனை அங்கீகரித்தீர் சர்வாந்தரியாமியாயிருக்கிற நீர் என்னுடைய கவியை ஏற்றுக்கொள்ளாததைப்பார்த்தால் உம்மிடத்திலுங்கூட பக்ஷபாதமிருக்கிறது. உமக்கு சகல ஜீவராசிகளுஞ் சமந்தானே. அப்படியிருக்க என்விஷயத்தில மட்டும் அது பொய்யாய்ப்போயிற்றே. உம்முடைய நாமத்தை பக்தியாய்ச்சொன்னாலும் பாவனஞ்செய்யத்தக்கதென்று நம்பி நான்செய்த கிரந்தத்தை நீர் நிராகரித்தபடியினாலே என்னுடைய சிரத்தை தேவரீருடைய திருவடிகளுக்குச் சமர்ப்பணம் பண்ணுகிறேனென்று" அதிக வைராக்கியமாய்ச் சொல்லுகிறபோது, கருணைக்கடலும், தயாளுவும், நாடகசூத்திரதாரியுமான ஸ்ரீமந்நாராயணமூர்த்தி பட்டினராசனுக்குப் பிரசன்னமாகி அவனுக்குப்பலவாறாகத் தேற்றுதல்சொல்லி அவன் சேர்த்த கிரந்தத்திலிருந்து இருபது சுலோகங்களை யெடுத்து ஜயந்தனுடைய கவியுடனே சேர்த்துவிட்டு அந்தக்காரியமானவுடனே அரசனும் பகவானுடைய அனுக்கிரகம் பெற்று ஆனந்தமடைந்து போய்ச்சேர்ந்தான்.

அதன்பிறகு ஜயந்தன் பக்தகோடிகளோடே சேர்ந்து காலம் ஸ்ரீநிவாசன் சந்நிதியில் காலக்ஷேபஞ்செய்து கொண்டிருக்கிற நாளில் ஒருதினம் ஜகந்நாதக்ஷேத்திரவாசியான ஒருமகா ஐசுவரியவந்தனான பிராமணனொருவன் ஜயந்தனைப் பார்த்து, ஓ! பக்த சிரேஷ்டரே என்னுடைய குமாரத்தியை யுமக்குப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்கும்படி ஜகந்நாதருடைய ஆக்ஞையாயிருக்கிறது. ஆகையால் நீர் வந்து என்னுடைய குமாரத்தியை விவாகஞ்செய்துகொள்ளும். என்னுடைய குமாரத்தியை சுவாமி உமக்குக்கொடுக்கும்படியாய்ச் சொல்லக் காரணமென்னவென்று கேட்பீராகில் சொல்லுகிறேன் கேளும்: என்னுடைய பெண் மகாரூபவதியாயிருந்த நிமித்தம் ஸ்ரீமந்நாராயணனைத் தவிர மற்றொருவருக்கும் கொடுப்பதில்லையென்று நிச்சயப்படுத்தியிருந்தேன். ஒருநாள் பகவான் என்னுடைய சொப்பனத்தில் தோன்றி ஓ பிராமணா! உம்முடைய பெண்ணை எனக்கு அர்ப்பணஞ்செய்துவிட்டீர். நான் கலியுகத்தில் அர்ச்சா

ரூபமாயிருப்பதால் நேரில்வந்து கலியாணஞ்செய்வது கூடாது. என்னுடைய பரமபக்தனான ஜயதேவசுவாமியை யழைத்து கன்னிகையை யலங்காரம்பண்ணி கன்னிகாதானம் செய்தால் அது எனக்குத் திருப்தியாமென்று சொல்லிவிட்டு மறைந்துபோய்விட்டார். ஆகையால் காலதாமதஞ்செய்யாமல் என்பின் வந்து எனது குமரியை மணம்புரியுமென்று வேண்ட, உடனே ஜயதேவர் பகவானுடைய வார்த்தையை உல்லங்கனஞ்செய்யக்கூடாதென்று அந்தப் பிராமணருடன் ஜகந்நாதத்திற்குச் சென்று அவருடைய மகாரூபவதியான பத்மாவதியென்னும் புத்திரியை பிராமணர்கள் முன்னிலையில் அக்கினிசாட்சியாக பாணிக்கிரகணஞ்செய்தார். பெரியோர்கள் தம்பதிகளை மந்த்ராசீர்வாதஞ் செய்தார்கள். கல்யாணத்திற்குப் பிறகு ஜயதேவகவிசிரேஷ்டரும் தனது பத்னியுடன் சந்தோஷமாய் அந்த ஜகந்நாதக்ஷேத்திரத்திலேயே பகவானை இரவும்பகலும் தியானஞ்செய்துகொண்டும் பக்தகோடிகளுக்கு உபதேசஞ்செய்துகொண்டும் சுகமாய் காலத்தை ஸத்விஷயத்தில் போக்கி வந்தார்.

அப்போது அவ்வூரில் மகாபக்திவந்தனாய், மேலான உத்தம குணங்களையுடைய வர்த்தகனொருவன் ஜயதேவசுவாமியிடம்வந்து அவரனுக்ஞைபெற்று அவரால் உபதேசத்தையுமடைவான். அதன் பிறகு வொருநாள் அந்தவர்த்தகன் ஜயதேவசுவாமியைத்தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், இரவும்பகலும் அவரை சேவித்துக்கிருதார்த்தனாகவேண்டுமென்று பிரார்த்தித்ததின்பேரில் அவரதற்குக்கிருபைசெய்தருளினார். உடனே அவரை இரதத்திலுட்கார வைத்துக்கொண்டு தனதூருக்கு இட்டுக்கொண்டு போனான். அவன் அவருக்கு ஒருமாதபரியந்தம் சகலவிதமான கைங்கரியங்கள் செய்து அவர் உபதேசிக்க பகவத்கீர்த்தனங்களை சிரவணஞ்செய்து ஆநந்தமடைந்தான். அதன்பிறகு அவரை ஊருக்கனுப்புஞ்சமயத்தில் அவருக்கு எதைக்கொடுத்தாலும் அபேட்சியாரே என்றெண்ணி, அவர் ஏறிப்போகும் இரதத்தில் அளவற்ற இரத்தினங்களையும் திரவியங்களையும் இரகசியமாக ஒளித்துவைத்து, அவைகளை அவருடைய மனைவியிடம் அவருக்குத் தெரியாமல் கொடுத்துவிடும்படியாய் இரண்டு சேவகர்களை திட்டஞ்செய்து அந்தவர்த்தகன் அந்த இரதத்துடன் அனுப்பினான். ஜயதேவசுவாமியும் தனது சிஷ்யனுடைய பக்திக்கு அவனை ஆசீர்வதித்து தனது

ஊருக்கு புறப்பட்டுப்போனார். நடுமார்க்கத்தில் வர்த்தகன் அனுப்பின சேவகர்களிரண்டுபேரும் திரவியத்தில் ஆசையுற்று நிர்மானுஷியமான வொருவிடத்தில் ஜயதேவ சுவாமியைப்பிடித்துக் கைகால்களைவெட்டி ஒரு பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டு, இரதத்திலிருந்த சகல சொத்துக்களையும் அபகரித்துக்கொண்டு மறுதேசம் போய்விட்டார்கள்.

அப்போது ஜயதேவசுவாமி பகவானை நினைத்துக்கொண்டு சுகதுக்காதிகள் தன் சித்தத்தில் லேசமுமணுகாதபடி பஜித்துக் கொண்டிருக்கையில், விருசந்தேசத்து அரசன் வேட்டையாடி அப்பாழுங் கிணற்றின்வழியாகச் செல்லுகையில், அவ்விடம் தோன்றிய பிரகாசத்தினால் ஆச்சரியப்பட்டுப் பார்த்தபோது, மகானுபாவர் ராமா, கிருஷ்ணாவென்று தியானஞ்செய்துகொண்டிருந்ததைப் பார்த்து, உடனேதானே அக்கிணற்றிலிறங்கி அவரை வெளியேயெடுத்து தனது இரதத்திலேற்றி தன்னரண்மனைக்குக் கொண்டுபோந்து அநேக பரிசாரிகளோடு உபசரணைசெய்து சேவித்துவந்தான். ஜயதேவசுவாமி அந்த அரண்மனையில் வாசஞ் செய்துகொண்டிருக்கிறபோது ஒருநாள் ராஜா தானடைந்தேறத் தக்கதாக நல்லதொரு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று ஜயதேவசுவாமியைப் பிரார்த்தித்துக் கேட்கிறபோது அவர் அரசனை நோக்கி மகாராஜனே! ஸ்ரீவாசுதேவனுக்குச் சாதுக்களான பக்தர்களைப் பூசிப்பவர்களிடத்தில் வசிக்கிற கிருபை லட்சுமியிடத்திலுமதிகமானது. ஆகையால் பாகவதோத்தமர்களைத் தொழுவீராகில் மோட்சத்தையடைவீரென்று சொன்னார். அதன்படியே அன்றுமுதல் அரசன் தன்னூருக்கு விஜயஞ்செய்கிற பாகவதசிரேஷ்டர்களை ஆராதித்து மிகுந்த திரவியங்களையும் அவர்களுக்குக் கொடுத்துவந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள், முன் ஜயதேவசுவாமியை கைகால்கள்வெட்டிக் கிணற்றிலதள்ளின பாதகர்களிரண்டுபேரும் பேராசையால் பக்தர்களைப்போல வேஷம்போட்டுக்கொண்டும், ராமா, கிருஷ்ணாவென்று வாயினால் உச்சரித்துக்கொண்டும் அரசன் அரண்மனைக்கு வந்தவர்கள் அங்கு ஜயதேவசுவாமியைக் கண்டு நடுக்கமுற்றார்கள். அதைக்கண்ட ஜயதேவசுவாமி சகல ஜீவனகளிடத்திலும் வைரமன்னியில் சமானமாய்ப் பார்க்கும் சுபாவமுடையவரானதால் அத்துஷ்டர்கள்செய்த அபராதத்

தை நினையாமல், அவர்களைப் பக்கத்தில் அழைத்து ஆலிங்கனஞ் செய்துகொண்டு பிறகு அவர்களுக்குத் தகுந்த சம்மானஞ்செய்யும்படியாய் மகாராஜனிடத்தில் சிபாரிசுசெய்தார். அரசனும் அவர் சொன்னபடியே அத்துராத்மாக்களை மகாபக்தர்களென்று நம்பி நாராயண சுவரூபமாக அவர்களைப் பூசித்து, அவர்களுக்கு இரண்டுரதமும் அனேக நிறைய வஸ்திராபரணங்களும் கொடுத்துக் கடைசியாக வழித்துணையாகச் சில சிப்பாய்களுடன் அவர்களை அனுப்பினான்.

அவர்கள் இராஜனுடைய வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு ஜயதேவசுவாமியிடத்திலும் உத்திரவுபெற்றுக்கொண்டு போனார்கள். போகும்போது, வழியில் காவலர்களும் சேவகர்கள், அக்கொடிய வேஷதாரியான பக்தர்களைப் பார்த்து, சுவாமி எங்களரசனுடைய வரண்மனையிலிதுவரையில் கோடாகோடி பக்தர்கள் வந்திருக்கிறார்கள் அவர்களைக் காட்டிலும் உங்களிடத்தில் ஜயதேவசுவாமி அதிக விசுவாசமுள்ளவராய் பிரமாதமான சம்மானஞ் செய்யும்படி ஏற்பாடு செய்ததற்கு என்ன காரணமென்று வணக்கத்தோடு கேட்க, அதற்கவர்கள் முன் ஜயதேவசுவாமி அந்தத்தேச வரசனிடம் பிரதானியாயிருந்தாரென்றும், அவர் அந்தவரசனுக்கு மகா அபராதம் பண்ணினதினிமித்தம் அவரைக் காட்டில்கொண்டுபோய் வெட்டிவிடும்படியாய் எங்களுக்கு அரசன் கட்டளையிட்டார். அதன்படியே நாங்கள் அவரைப்பிடித்துக் காட்டுக்குக்கொண்டுபோய் அவரைக் கொல்லாமல் கால்களைமட்டும் கொய்துவிட்டுப்பிறகு அவரையும் அப்படியே ஒரு பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டுப் போய்விட்டோம். பிறகு எங்கள் இரகசியத்திறந்துபோகாமல் தத்தியோகத்தைக்கொண்டு அன்று முதல் விரக்தர்களாகத் திரிகிறோம். நாங்களிங்கு வந்தபோது அகஸ்மாத்தாய் எங்களை ஜயதேவசுவாமி கண்டதும், அவருயிரைக் கொல்லாது காப்பாற்றின நன்றிக்காக எங்களை மரியாதை செய்தாரென்று சொன்னார்கள் இவ்வார்த்தையைச் சொல்லி முடிக்கும் ஒரு மகாகோரமான சத்தமொன்றுண்டாயிற்று. அப்போது இவர்களின் இரதத்தின் அடியில் பூமிதேவி இரண்டுபிளவாக வெடிக்க அதில் அத்துராத்மாக்கள் தங்களுக்கு ராஜாகொடுத்த இரதத்தோடு அமிழ்ந்தார்கள். உடனே பூமாதேவியும் மூடிக்கொண்டாள். இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்ற சேவகர்கள் பயந்து

திரும்பி ஜயதேவ ஸ்வாமியிடம்வந்து நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் சொன்னார்கள்.

ஜயதேவஸ்வாமி யிதைக்கேட்டவுடன் மிகவும் விசனமடைந்து, ஓ! ஜகந்நாதா! கோவிந்தா! நாராயணா! பக்தவத்ஸலா, ஜகதீசா! நீமட்டும் உம்முடைய சத்துருக்களாகிய இராவணன் கம்சன்முதலான துஷ்டர்களுக்கு நற்கெதியை ஈன்று என்னுடைய சத்துருக்களைமட்டும் அதோகதியாய் விடுவது நியாயமோவென்று பலவாறாகத் துதித்துக்கொண்டிருக்கையில் ஸ்ரீபகவான் உடனே சங்குசக்கிரத்துடனும், இடையில் பீதாம்பரம் தரித்து, மேகசியாமளராய், கோடிசூரியனை பிரகாசித்ததுபோல் ஜயதேவர் முன் பிரசன்னமானார், உடனே ஜயதேவருக்கு கையுங் காலும் வளர்ந்து தேகம்பரவசமாகி ஆநந்தக்கடலில் மூழ்கி ஸ்ரீமந் நாராயணனை வலம்வந்து பாதத்தில் நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்தார். ஸ்ரீபகவான் ஜயதேவஸ்வாமிக்கு அனுக்கிரகஞ்செய்து விட்டு அந்தர்த்தியானமானார்.

பிறகு அரசன்முதலான சகலபுரவாசிகளும் இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு ஜயதேவனைப் பணிந்து பூஜைசெய்தார்கள். உடனே ஜயதேவர் அரசனுடன் இரதத்திலேறிப் புறப்பட்டுக் கபட வேஷதாரியாம் பக்தர்கள் புதைந்துபோனவிடத்துக்குச் சென்றதும், பூமி மறுபடியும் பிளந்து அத்துஷ்டர்களை இரத்தத்துடன் வெளியில்கொண்டு வந்துவிட்டது. ஆகாசமார்க்கத்திலிருந்து தேவிமானம் வர அதில் அந்த பக்தர்கள் ஏறிக்கொண்டு வைகுண்டம்போய்ச் சேர்ந்தார்கள். அதைக் கண்ணுற்றவர்களெல்லாரும் ஜயதேவரைப் பார்த்து, சுவாமி! மகாபாபிகளாயிருப்பவர்கள்கூட பக்தர்களுடைய கடாட்சத்தினாலே மோட்சத்தை யடைந்தார்கள். பக்தர்களுடைய பெருமையே பெருமை. ஜகத்கர்த்தாவாகிய பகவான் பக்தபராதீனராய், அவர்களுடைய மனம் எப்படியோ அவ்விதமே செய்கிறானென்பதை இப்போது பிரத்தியட்சமாகக் கண்டோமென்றும் பலவாறாக ஜயதேவசுவாமியை ஸ்தோத்திரஞ்செய்தார்கள். பிறகு அவரைப்பார்த்து தங்களுடைய பூர்விகவரலாற்றைத் தயைசெய்யவேண்டுமென்று அரசன் கேட்க, அதற்கு அவர் சகலத்தையும் ஒளிக்காமல் சொன்னார். இதைக்கேட்ட இராஜா ஆநந்தமடைந்து சுவாமி தேவரீருடைய

பத்தினியை பூஜைசெய்ய அபேட்சையா யிருக்கிறபடியால், தேவ
ரீர் என்பேரில் கிருபைகூர்ந்து அவ்வெண்ணத்தை நிறைவேற்றி
அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கிறபோது, இரா
ஜாவினுடைய பக்திக்குமெச்சி அவனெண்ணத்தின்படியே பத்
னியை வரவழைத்துக்கொண்டார். பிறகு அரசன் தன்மனைவி
யோடு ஜயதேவசுவாமியையும் அவருடைய பத்னியையும் தினம்
பூஜித்து ஆராதனைசெய்துகொண்டு அவரால் போதிக்கப்பட்ட
பகவத்கீர்த்தனங்களைக் கேட்டு சதகாலக்ஷேபஞ்செய்து வந்தான்.
இவ்விதம் வெகுகாலமிருந்து ஜயதேவசுவாமி சகலமான ஜனங்
களுடன் வைகுண்டம்போய்ச் சேர்ந்தார்.

ஆகையால் பகவத்பக்தி செய்கிறவர்களதாமும் நற்கதி
யடைவதுடன் தன்னையண்டினவர்களையும் மோட்சத்தை யடை
யும்படிசெய்வார்கள்

துளசிதாசோபாக்கியானம்.

இக்கலியுகத்தில் பகவான் பக்தர்களுக்கு வசியப்படுவது
போல மற்றயுகங்களில் கிடையாது. அப்படி பகவத்கிருபையடை
ந்த மகான்கள்செய்யும் ஆச்சரியமான செய்கைகளைக் கண்டப
புறமதஸ்தர்களும வியப்புற்று அப்பக்த சிரோமணிகளைப் பணி
ந்தார்களென்றால் அவருடைய மகிமை எவ்வளவு அதிசயிக்கத்
தக்கதென்பதைச் சகலரும் மனதில் அறிந்துகொள்ளக்கூடும்.
சுமார் 300 வருஷங்களுக்குமுன் டில்லியில் மகா செளரியத்தோ
டும், நீதியோடும் அரசாட்சிசெய்துவந்த அக்பர் பாட்ஷா சதாசர்வ
காலமும் ஆராதித்துவந்த பக்தசிரோமணியாகிய துளசிதாசரென்
பவரொருவரிருந்தார். அவர் பூர்வஜன்மத்தில் வால்மீகர். பக
வானுடைய ஆக்ஞைப்பிரகாரம் ஹஸ்தினாபுரத்தில் ஆத்துமாராமன்
என்கிற பிராமண சிரேஷ்டருக்குப் புத்திரனாக அவதரித்து, இள
மைப்பிராயத்தில் சகலவேத சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து,
ஸ்ரீராம நாமத்தை உச்சரித்துக்கொண்டு வந்தார். அவருக்குப்
பன்னிரண்டு வயதாகுந்தும, மாதாதேவியென்னும் பெண்ணை
விவாகஞ்செய்துகொண்டு, அவர்தன் மனைவியோடு போகபாக்
கியங்களைச் சிலகால மனுபவித்து வந்தார். மகா பதிவிரதை

யாகிய பாதுமாதேவியும் மகா பிரீதியோடு அவருக்குச் சகல பணி விடைகளையும் தவறாது செய்துவந்தனள். இப்படி ஆனந்தமாயிருக்கிறபோது ஒருதினம் அக்பர்பாட்சாவோடு துளசிதாசர் வெளியே சவாரிபோயிருந்தபோது, மாதாதேவியின் தாய் அசவுக்கியமாயிருப்பதாகச் சமாசாரம் வந்தது. உடனே அவளுடைய மாமனாராகிய ஆத்மாராமர் சமாசாரங்கொண்டுவந்த ஆளுடன் மருமகளைத் தாயார்வீட்டுக்கனுப்பிவிட்டார். இராத்திரி துளசிதாசர் வீட்டுக்குவந்தவுடன் அவருடைய பெற்றோர் மாதாதேவி தாய்வீட்டுக்குப்போன சங்கதியைத் தெரிவித்தார்கள். பிறகு துளசிதாசர் போஜனஞ்செய்து படுத்துக்கொண்டார். அவர் ஒரு நாளும் தன் பத்தினியைவிட்டுப் பிரிந்திருந்தவரல்லாததால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. உடனே அவர் எழுந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள தன் மாமனாருடைய வீட்டுக்கு இராத்திரிப் பதினைந்து நாழிகைக்குப்போய்ச் சேர்ந்து கதவைத்தட்டினார். அப்போது எல்லாரும் நித்திரையாயிருந்தபடியால் கதவை ஒருவரும் வந்து திறக்கவில்லை. அவர் வெகுநேரங் கூப்பிட்டு அலுத்துப் போனபடியால் எப்படியாவது வீட்டிற்குள் போகவேண்டுமென்று அதைச் சுற்றிவந்தார். அப்படிச் சுற்றிவரும்போது சுவரின் ஒருபக்கத்தில் கயிறுபோல ஸர்ப்பமொன்று தொங்கிக்கொண்டிருந்தது.

அதைச் ஸர்ப்பமென்றறியாமல் அதைப் பிடித்துக்கொண்டு சுவரேறித் தாண்டி உள்ளேபோய்த் தன்பத்தினியை எழுப்பி நடந்த வர்த்தமானத்தைச் சொன்னார். அவள் மகாபுத்திசாலியானதாலும், புருஷனிடத்தில் மிகுந்த அன்பும் விசுவாசமுமுடையவளானபடியாலும் உடனே எழுந்து கயிறுதொங்கவிட்டிருக்கிற விடத்தைப் போய்ப்பார்த்தாள். அவ்விடத்தில் சர்ப்பம் வாலைத் தொங்கவிட்டுக்கொண்டு சுவரின்மேல் படுத்திருந்தது. அவள் மிகுந்த ஆச்சரியமடைந்து, தன் புருஷனைப்பார்த்து என் பிராணநாதா! இந்த அர்த்தராத்திரியில் யமுனாநதியையும் மற்ற சிற்றாறுகளையும் கடந்துவந்து, கடைசியில் சர்ப்பத்தின் வாலைப்பிடித்துக்கொண்டிருந்ததுபோல சுவரேறிக்குதித்ததையும்பார்த்தால் உம்மிடத்தில் விவேகம் சிறிதுகூடவில்லையென்பது நிச்சயமாயிருக்கிறது. என்னிடத்தில் வைத்திருக்கிற மகாமோகத்தினால் சுவரேறித் தாண்டும்போது அந்தச் சர்ப்பங்கடித்திருந்தால் இங்

நேரம் பிராணன் போயிருக்குமே. இந்த சம்சாரம் மாயமான வலையல்லவா, இந்த வுடல் நீர்மேல் குமிழியாயிருக்கிறது, ஆகையால் நீர் மகாகாமிபோல இன்னதுசெய்த காரியமின்னதென்று தெரியாதபடி மகாமோகவலையில் சிக்கிக்கொண்டிருப்பது தகுதியல்ல. இந்த மோகத்தைவிட்டுப் பகவானிடத்தில் எப்பொழுதும் மனத்தைவைத்தால் உத்தமகதியை யடைவாய். வைராக்கியமென்கிற அக்கினியில் விழுந்து பஸ்மமாய்ப் போய்விடுவீராகில் நற்கதியை யடையமாட்டாய். ஆகையால் ஸ்ரீபகவானுடைய பாதாரவிந்தங்களில் சித்தத்தை வைப்பதே மேன்மைப்படுத்தத்தக்க பிரயோசனமென்று சொல்லியதைக் கேட்ட ஞானிதாசர் வெட்கமடைந்து, தன்னுடைய பூர்வஜன்ம நல்வினையால் யாத்திரையை வெகுவாய்ச் சிலாகித்து அவ்விடத்திலேயே தத்துவார்த்தமாயிருக்கிற ராமனைச் சேவித்துவிட்டு வெளியே புறப்பட்டுவிட்டார்.

பிறகு அந்தக்காட்டிலுள்ள பலவித அநேக காய், கனி, கிழங்கு முதலியவைகளைப் புசித்து அவ்விடமாகவே இராமசந்திரனைத் தியானஞ்செய்துகொண்டிருந்தார். சிலநாள் ஒருகாலத்தில் [illegible] ந்து கைகால்களைச் சுத்திசெய்து மீதி ஜலத்தை ஒருமரத்தடியில் ஊற்றிவிட்டுப் பிறகு ஸ்நானஜெபதபாதிகளை முடித்துக்கொண்டு சமீபத்திலிருந்த கிராமத்துக்குப் போய் ஆங்கோரிடத்தில் ராமாயணம் படிப்பது வழக்கம். ஒருநாள் மீதியான ஜலத்தை மரத்தடியில் ஊற்றினவுடன் கோரமான ரூபத்தோடு ஒரு பிரமராட்சசன் எதிரில் தோன்றி ஞானிதாசரே உமக்கொரு வார்த்தைக் கேளும். தங்கள் பின்னாலென்று சொல்லிற்று. அதைக்கேட்ட ஞானிதாசர் நீர் யாரென்று கேட்டதற்கு நான் இந்த மரத்திலிருக்கிற பிரமராட்சஸ், நான் சேய, ஆறுமுகங்கள் ஜலபானத்தில் தாகசாந்தி செய்யக்கூடாது "நாளையையா இவ்வளவு நாளாக இந்த மரத்தடியில் ஊற்றிவிட்டீரே இந்த ஜலத்தைக் குடித்துத் தாகந் தணிந்தேன்! இன்று மகா சந்தோஷத்தை யடைந்தேன் உமக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கப் பிரத்தியட்சமானேன்" என்று சொல்லிற்று.

அவ்வார்த்தையைக் கேட்ட ஞானிதாசர் இதென்ன ஆச்சரியம்! ஸ்ரீ இராமசந்திரனைத் தரிசனஞ்செய்து கடைத்தேற வேண்டுமென்று எண்ணிக்கொண்டு சதாகாலம் அவனைத் தியானஞ்செய்துகொண்டிருந்த எனக்கு பிசாச பிரசன்னமாக வேண்

டும். இவ்வாத்தகின் போல எனக்கியாய்விட்டதே என்று வருத்தப்பட்டவராய்ச் சொல்லுகிற வசனத்தைக்கேட்ட பிரம்மராக்ஷஸ் ஓ பிராமணா! நீ மகா புத்திசாலியாய் ஜகதாரியத்தைக் கிரகிக்க நினைத்த வேதத்துமற்ற காரியங்கள் பெரிதாகத் தோன்றுது. அப்படி நினைத்த போதிலும் தங்கத்தையுருக்க வெண்காரம் அவசியமானதாயும், பூமாலைகட்ட நால் அவசியமானதாலும், நீர் எண்ணியிருக்கிற எண்ணத்தைச்செய்ய எனக்கு சாத்தியமாகாமல் போனபோதிலும், அதற்கு வேண்டிய வழிகளையாவது என்னால் சொல்லமுடியும். ஆகையால் நீர் உம்முடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமென்று சொல்லிற்று.

அந்த ஜயதேவர் [illegible] வைத்திருக்கும் ஜாபகராப்பிராம [illegible] வுருகிறதம் பெறு [illegible] அதைச் செய் [illegible] சொன்னார். இதைக்கேட்ட [illegible] அதிகாச [illegible] பிரகருமாயின் அதற்கு [illegible] சொன்னார், அதாவது அவருடைய [illegible] காண்பிக்கிறேன்; [illegible] பகவானுடைய [illegible] நியினுடைய [illegible] அவளிடத்தை உமக்குக் காட்[illegible]. [illegible] அதனைக் [illegible] உம்முடைய [illegible] சொல்கிறது. அதனைக் கேட்ட ஜயதேவர் சந்தோஷ[illegible] "நீ அவ்விடத்திற்கு [illegible] போனாலும் [illegible] அவளைக் காட்டினால் நான் தரிசனஞ்செய்து அவளுக்கிரகத்தினால் பகவானுடைய [illegible] உன்னுடைய பிரம்மராக்ஷஸ் [illegible] மாற்றும் செய்கிறேனென்று" சொன்னார். அதன்மேல் அந்த பூதம் "நீர் ஒவ்வொரு நாளும் இராமாயணப [illegible] எல்லாருக்கும் முன் ஒருகிழப்பிராமணன் கிழியில் சுற்றிக்கொண்டு, இடுப்பில் ஜீரணவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு வந்து புராணத்துக்கு நேராக உட்கார்ந்து கேட்டு, எல்லாரும் போனபிறகு எழுந்தி

ருந்து போகப்பட்டவரே அனுமாரென்று சொல்லிவிட்டு மறைந்து போயிற்று.

துளசிதாசர் பரமானந்தமடைந்து, பூதம் சொன்ன அடையாளத்தின்படியே அன்று அந்த கிழப்பிராமணனைக் கண்டு, புராணபடனமானவுடனே அவர் பின்சென்றுபோய் சாஷ்டாங்கமாக அவருக்கு நமஸ்காரஞ்செய்து ஆஞ்சநேயா! அமிதபுஜபராக்கிரமா! வாயுபுத்திரா! இராமதூதா! ஏழையின்பேரில் கிருபைபுரிந்து எனக்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பலவிதமாய் அவரை ஸ்தோத்திரஞ்செய்தார். ஆஞ்சநேயர் மனமிரங்கி, துளசிதாசர் வால்மீகருடைய அவதாரமென்றறிந்து உமக்கு வேண்டியதைக் கேளுமென்று சொன்னார். அதற்குத் துளசிதாசர் சுவாமி! எனக்கு ஸ்ரீராமசந்திரனுடைய தரிசனஞ்செய்வதையுமென்று கேட்டதற்கு ஆஞ்சநேயரும் அப்படியே ஆகட்டுமென்று வாக்குக் கொடுத்துவிட்டு, பகவானிடத்தில் போய் சுவாமி! துளசிதாசருக்குத் தங்களுடைய தரிசனத்தைச்செய்து வைக்கிறதாக வாக்குக்கொடுத்துவிட்டேன். அவருக்குத் தரிசனங்கொடுத்துக் கடைத்தேறும்படி அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றும் பலவாறாகப் பகவானைப் பிரார்த்தித்துக் கேட்டார். அதற்குப் பகவானும் அப்படியே தரிசனங்கொடுப்பதாக அனுக்கிரகஞ்செய்தார்

பிறகு இராமசந்திரனும் தம்முடைய பரிவாரங்களும் துருக்கர்களைப்போல் வேஷமணிந்துகொண்டு துளசிதாசர் ஆசிரம வழியாகச் சாரிபோகையில், துளசிதாசர் அதையறியாமல் துருக்கக்கூட்டமென்று சும்மாவிருந்துவிட்டார். பிறகு ஆஞ்சநேயர் துளசிதாசர் ஆசிரமத்துக்கு வந்து, பகவான் உமது ஆசிரமத்தின் வழியாகப் போனாரே நீர் தரிசனஞ்செய்யவில்லையாவென்று கேட்டதற்கு, துளசிதாசர் ஆச்சரியமடைந்து எப்போது போனார். நான்காணவில்லையேயென்று சொன்னார். துருக்கக்கூட்டத்துக்கு நடுவில் நவாப்புபோல் விளங்கினவரே ஸ்ரீராமசந்திரமூர்த்தி, அவரைக் காணவில்லையா என்று ஆஞ்சநேயர் கேட்டார். அதற்குத் துளசிதாசர் மனவருத்தமடைந்து, மகா அபராதஞ்செய்து விட்டேன் பகவான் தரிசனங்கொடுக்க வந்தபோது துருக்கக் கூட்டமென்று நினைத்து சும்மாவிருந்துவிட்டேனே. ஆனால் நானே ஸ்ரீவால்மீகர் எவ்விதம் வர்ணித்திருக்கிறாரோ அந்த மாதிரியா

களை நான் தியானஞ்செய்துகொண்டிருப்பதால் மற்ற சுவரூபங்களை நான் தியானஞ்செய்யாதிருந்த நிமித்தம் சும்மாவிருந்துவிட்டேனென்று துக்கித்தார். அப்போது மாருதியானவர் மகா சந்தோஷமடைந்து உம்முடைய மனோரதத்தின்படியே பகவானைத் தரிசனஞ்செய்து வைக்கிறேனென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பிறகு ஆஞ்சனேயர் இராமசந்திரனை ஸ்தோத்திரஞ்செய்ய அவர் பிரத்தியட்சமானார். உடனே ஆஞ்சனேயர் வலம்வந்து நமஸ்கரித்து சுவாமி! பக்தாபீஷ்டப் பிரதாதா! துளசிதாசருக்கு முன் துருவனுக்கு வேஷத்தோடு தரிசனங்கொடுத்ததுபோலக் கொடாமல், சியாமளவர்ணமாயும், கோதண்டபாணியாய், சீதாலட்சுமண சகிதராய்த் தரிசனங்கொடுக்கக் கிருபைபண்ணவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டபோது, பகவான் பக்தவத்சலரானதால் அதற்கு மனமிரங்கி யங்கீகரித்துத் துளசிதாசருக்குத் தரிசனங்கொடுக்கப் புறப்பட்டார்.

பகவானுக்கு முன்னதாகவே ஆஞ்சனேயர் ஓட்டமாகத் துளசிதாசர் ஆசிரமத்துக்கு ஓடிப் பகவான் வருகிற சமாசாரத்தைத் தெரிவித்தார். அவர் ஆஞ்சனேயரை நமஸ்கரித்து ஆநந்தமாகி சுவாமி! இதுவே மகோபகாரம், இதுவே பெரும்பாக்கியம் இதற்குப் பதிலுமக்கு என்னபிரதியைச் செய்யப்போகிறேன், செய்தற்குப் பதார்த்தமுங் கிடையாது, நீர்செய்தவுபகாரத்திற்கு நிகர் எதுவுமில்லை. துருவன் தன் தாயார் வாக்கியத்தின்படி நாராயணப் பிரார்த்தியையாராதித்து வுன்னதமான பதவியையடைந்து அந்தத் தாயாருக்கு என்னவுபகாரம்பண்ணினான். பார்வதிதேவி, தன்னைப் பரமசிவனுக்குக் கொடுத்த ஹிமவானுக்கென்ன உபகாரஞ்செய்தாள். சீதாதேவி, தன்னை இராமனுக்குத் தேடிக்கொடுத்த ஜனகனுக்கு என்ன பிரதியுபகாரஞ்செய்தாள். அகலிகை தன் சாபவிமோசனஞ்செய்த ஸ்ரீராமனை யழைத்துவந்த விசுவாமித்திரருக்கென்ன உபகாரஞ்செய்தாள். இவ்விதம் பலவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து கொண்டிருக்கையில் ஸ்ரீராமசந்திரனும் அவ்விடந் தோன்றித் துளசிதாசர் ஆராதித்துவந்த சுவரூபத்தோடு தரிசனங்கொடுத்தார். அப்பொழுது துளசிதாசர் உடம்பு புளகாங்கிதமாகி, சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, கண்களில் ஆநந்தக் கண்ணீர் சொரிய, ஓ கேசவா! வேதங்கள், சாஸ்திரங்கள், தேவர்

கள் ருஷிகள் முதலானவர்களாலும் காணமுடியாததும் ஸ்தோத்திரஞ்செய்ய ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷனாலு முடியாத பிரதாபத்தையுடையவனே! அபார கருணாநிதியே! அநந்த ரூபா! சர்வஜீவ தயாளோ! புராண புருஷோத்தமா என்று வெகுவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து ஆநந்தமடைந்து, வாய்புதைத்து நிற்கிறவனைப் பகவான் பார்த்து, உனக்கு வேண்டியதைக் கேளுமென்றார். அதற்கு துளசிதாசர், ஸ்வாமி, "உமது சரணஞ்செய்தபிறகு வேறு யாதொன்றும் வேண்டியதில்லை. ஆனால் உம்மிடத்திலெனக்கு ஏகாக்கிரமாயும் ஆதாரமுடன் நிஜபக்தியிருக்கும்படியாயநுக்கிரகஞ்செய்ய வேணுமென்று கேட்டார். பிறகு பகவான், அவரெண்ணத்தின் படியே அநுக்கிரகஞ்செய்து, மறுபடியும் அவரைப்பார்த்து "நீ ஜனங்களுக்கு ஸ்ரீபகவந்நாமத்தைச் சொல்லு. மற்ற ஞானம், யோகம், வைராக்கியம், யக்ஞம், தபசு, தீர்த்தஸ்நானம், தானம், இவைகளினால் சித்தசுத்தியாகுமே தவிர ஜனனம் பிறக்கமாட்டார்களென்று உபதேசம்பண்ணி அவர்களையுத்தாரணம் பண்ணுமென்று சொல்லி அநுக்கிரகஞ்செய்துவிட்டு மறைந்துபோனார்.

பிறகு துளசிதாசர் காசியிலே இராமசந்திரனுடைய அநந்த கல்யாணகுணங்களை சதா கீர்த்தனஞ்செய்துகொண்டு, ஒருபஜனை மடங்கட்டியதில் வாசஞ்செய்துகொண்டிருந்தார். அவருடைய தரிசனத்துக்காக அந்த மடத்துக்கு தினந்தோறும் பக்தர்கள் ஆயிரம் பதினாயிரம் பேர்கள் வந்து போஜனஞ்செய்து அவருடைய பக்கத்திலிருந்து பகவானுடைய நாமசங்கீர்த்தனங்களைக் கேட்டு ஆநந்தப்படுவார்கள். துளசிதாசருக்கு இராமசந்திரனுடைய தியானத்தைத் தவிர மற்றொன்றிலேயும் மனஞ்செல்லுகிறதில்லை. இவ்விதமிரவும்பகலும் சகலமான ஜனங்களும் இராமத்தியானமாயிருக்கும்போது, போவது வருவது ஒன்றுந்தெரியாமலிருந்தபடியே தியானஞ்செய்துகொண்டிருப்பதால், மடத்திலிருக்கும் பொன் பாத்திரம் வெள்ளிப்பாத்திரங்களிவைகளை யாரெடுத்துப் போனாலும் தெரியாது. மடத்தின் கதவை இவர் மூடச் சாத்துகிறதில்லை. தாராளமாய் எவர்களும் இராஜமார்க்கம்போலப் போகலாம். எவரும் தமக்கு வேண்டியதைக் கொண்டுபோகிறதும், மடத்துக்கு வேண்டிய சாமான்களைக் கொடுக்கிறதுமாயிருந்தார்கள். இப்படியிருக்கிற சமயத்தில் ஒருநாளிரவு திருடர்கள் இந்த மடத்திலே திருடினால் யதேஷ்டமாய் சொத்துக்களகப்படுமெ

இந்தமடத்துக்கு ரட்சகரொருவருமில்லையென்று நினைத்து சமயம் பார்த்து எல்லாரும் அயர்ந்து தூங்குகிறவேளையிலே உள்ளேநுழைந்து சுவாமியினுடைய பாத்திரங்களையும் நகைகளையும் மூட்டையாகக்கட்டிக்கொண்டு வெளியே வரும்போது வடக்குவாசற்படியிலிருந்த வீரர்கள் தனுவில் அம்பை ஆரோபணஞ்செய்துகொண்டு நிற்கிறதைக்கண்டு பயந்து, இவர்கள் நாம் உள்ளே நுழையும்போதிலேயே இப்போது இங்கே யிருந்தார்களோ தெரியவில்லையென்று திகைத்துச் சற்றுப்பொழுதிருந்து ஒப்போய்விடலாமென்று ஓடினார்கள். அவ்விடத்திலிருந்தும் கதவுப்பாலகர்களைக்கண்டு பயந்து, இந்த தர்மதாரிகளுடைய வாசலிலிருக்கிறார்களே, இவர்களை யப்பாலேகடந்து போகிறது, அல்லது நித்தியமானிருளும் அந்தகாரம்பரந்தது அப்போவோமென்று படுத்து வாசலிலொரு மூலையில் பதுங்கிக்கொண்டிருந்துவெகுநேரஞ்சென்றபின் எழுந்திருந்து பார்ப்பார்கள். அப்பொழுதும் முன்போலே அந்தத்துவாரபாலகர்கள் நிற்பதைக்கண்டு இனிமேல் விழித்துவிடுவாரென்று திருடர்கள் பயந்து திருடினசொத்துக்களையெல்லாம் போட்டுவிட்டு வெறுங்கையோடு வெளியே வந்தார்கள். அப்போதும் அந்தவீரர்கள் அவர்களை விடவில்லை. இந்தசமயத்தில் துனிதாரர் அந்தமடாதிபதி பகவத்தியானத்திலிருந்து எழுந்து வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்தார். அப்போது வந்த திருடர்களெல்லாரும் வந்து அவர்பாதங்களில் விழுந்து இட்டோமிட்டோமென்று சொன்னார்கள். நீங்கள் யாரென்று அவர் கேட்க, அவர்கள் நாங்கள் திருடர்களென்றும், தங்கள் மடத்தில் திருடவந்தோமென்றும் போகவிடாமல் தங்களைத் தடுத்த வீரர்களைப்பற்றியும் முழுவதும் வெளியாகச் சொன்னார்கள்.

இதைக்கேட்ட துனிதாரர் ஆச்சரியமடைந்து, ஓ குருவே! ஜெகத்தயா! கோதையுடைய நிலாவுடய பாதபாதத்தெவைகளை தேவரீருடைய வாயிலில் காத்திருந்து சாமங்கடந்தபோது உன்னை வருகிறதைக்கண்டு. அப்படிப்பட்ட மகாபுருஷரும், சாமர்த்தியசாலியுமான தேவரீர் நான் பகவத்தியானப் பண்ணினதாலென்னுடைய மடத்தின் துவாரரட்சகராக விருந்திரென்று நாநாவிதமாக ஸ்தோத்திரம்பண்ணிவிட்டு, திருடர்களைப்பார்த்து உங்களுக்குத் தேவையான பொருள்களை சங்கோசமில்லாமல் எடுத்துப்போங்கள். நீங்

கள் மகாபாக்கியசாலிகள் எவருக்குங் காணக்கிடைக்காத பரமாத்துமாவை உங்கள் புண்ணியவசத்தினாலே தரிசனஞ்செய்தீர்கள் என்று துளசிதாசர் சொன்னார்.

அதற்குத் திருடர்கள் துளசிதாசர் வசனத்தைக்கேட்டு, சுவாமி! சூரியப்பிரகாசமானபிற்பாடு இருள் மறைந்துபோவதுபோல எங்களுடைய அக்ஞானங்கள் நீங்கிவிட்டது. நாங்களிந்த மடத்திலேயே யிருந்து உங்களுக்கேவல்புரிந்துகாலங்கழிக்கிறோமென்று சொல்லி அவ்விடத்திலேயே இருந்தார்கள்.

பிறகு சிலகாலஞ்சென்ற பின்னொருநாள் மகாபாதகங்களைச் செய்து யாவராலும் நிந்திக்கப்பட்ட பிராமணனொருவன் அம்மடத்துக்குள் நுழைந்து இராமா, கிருஷ்ணா, முகுந்தா, கோவிந்தாவென்று உச்சரித்துக்கொண்டு வந்தவனை துளசிதாசர் அந்தப்பிராமணனை ஆலிங்கனஞ்செய்து உபசரித்துக் கையைப்பிடித்தழைத்துவந்து நடுப்பந்தியில் போசனத்துக்காக உட்காரவைத்தார். அப்போது அங்கிருந்த பிராமணர்களெல்லாம் ஓய் துளசிதாசரே! நீர் பிரமஹத்தியாதி பாதகங்களைச்செய்தவனை எங்கள் பந்தியின் நடுவிலுட்காரவைத்ததினால் நாங்கள் அவனிருக்கும் பந்தியிலே சமபோஜனஞ் செய்யமாட்டோமென்று எழுந்திருந்து விட்டார்கள். அதற்குத் துளசிதாசர் ஓ பிராமணோத்தமர்களே! ஒருதரம் ராமாவென்று ஸ்மரித்த அந்தக்ஷணத்திலேயே பிரமஹத்தி முதலான சகலதோஷங்களும் போய் புனிதனாகிறான். ஆதலால் நீங்கள் மனதில் யாதொரு கலக்கமுமில்லாமல் சுகமாக அவருடன் சாப்பிடலாம் வாருங்களென்று சொன்னார். அப்போது அந்த வேதவித்துக்களான பிராமணர்கள் ஓ தாசரே! நீர் சொல்லுகிற சங்கதி சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் மிகவே. சுருதி, யுக்தி அனுபவமென்றும் மூன்றிலொன்றிலாவது எங்களுக்குக் காட்டினால் நாங்கள் ஒப்புக்கொள்ளுவோமென்பதற்குத் துளசிதாசர் அவர்களைப் பார்த்து சர்வ ஜனங்களுஞ்செய்கிற சுபசோபனாதி, சிராத்தம் முதலான கர்மங்களின் முன்னும், சந்தியாவந்தனம், யாகம், யக்ஞம், தபசு முதலான காரியங்களுக்கு முன்னும் "ராமா" வென்று சொன்னால் சகல பாவங்களும் போய் பரிசுத்தமாவதாக சுருதி வாக்கியமேற்பட்டிருக்கிறது. அதாவது,

[illegible]
[illegible]

சுத்தோவாஸனாவர்ஜிதம் ஸ்ரீராமஸ்மரணமேவ ஸர்வமோக்ஷ
ஸாதனம்

சுத்தனாயிருந்தாலும் அசுத்தனாயிருந்தாலும் "ராமா" என்று சொன்னபோதே பூர்வகர்மங்கள் தொலைகிறதென்று துளசிதாசர் சொன்னதைக் கேட்ட பிராமணர்கள், ஓ தாசரே! உமக்கு நிச்சயமாயிருந்தாலும் எங்களுக்கு நிச்சயப்படவில்லை. பிரத்தியக்ஷமாக எங்களுக்குக் காட்டவேண்டுமென்று கேட்டார்கள். துளசிதாசர் அவ்விதமே காட்டுகிறேனென்று அன்னம் பாயசம் பட்சணம் முதலிய சாமான்களை யெல்லாம் பிரமஹத்தி செய்த பிராமணன் முன்னதாக எடுத்துக்கொண்டு விசுவநாதர் கோவிலுக்குப் போய் அங்கு பகவானுக்கு முன்பாகவிருக்கும் நந்திகேசுவருக்கு முன் கொண்டுபோய் ராமநாம ஜெபித்தார். உடனே நந்திதேவர் புசித்து அன்னம் முதலியவைகளைத் திருப்தியாய்ச் சாப்பிட்டுப் பிறகு எழுந்து போய் மறைந்துவிட்டது. அதன்மேல் துளசிதாசர் விசுவநாதராயினும் சிவனும், கங்காதரர், சந்திரசூடர், நீலகண்டர், பார்வதிபதி, திரிபுராரி, பக்தவத்ஸலர், அபிஷேகப்பிரியர், ஹரிவல்லபர், ஹரிஹரேச்வரர், மும்மூர்த்திஸ்வரூபர், சர்வாதாரர் என்று பலவாறாக ஸ்தோத்திரஞ்செய்தார். இவ்வாறு நடந்ததைக் கண்டிருந்த பிராமணர்களும் மனநடுக்கமடைந்து "ராம நாம" என்று சதா சொல்லிக்கொண்டிருக்கிற துளசிதாசரை நமஸ்கரித்து அவர்கள் செய்த அபசாரத்தைப் பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு போனார்கள்.

பிறகு துளசிதாசருடைய பிரபாவம் அந்தக்காசிநகர் முழுதும் பரவிச் சகலமான ஜனங்களும் இராமநாமத்தைச் சதாகாலமும் முச்சரித்து வந்தார்கள். இப்படி இருக்கிற நாளையில் அந்நகரில் "செயித்த கபாலமென்கிற" வாத்தகனென்றொருவ னிறந்துபோய் அவனுடைய பெண்சாதி சககமனம்பண்ண நிச்சயித்துப் பிரேதத்துக்குப் பின் தொடர்ந்துபோய் மடத்தின் வாசலண்டை வருகையில் அந்தப் பெண்பிள்ளை ஆ, ஆ, இன்னும் க்ஷணப்பொழுதில் பிராணனைவிடப்போகிறேனே, இந்த மகானுபாவரான துளசிதாசரைக் கண்டு சேவித்துவிட்டுப் போகிறேனென்று நினைத்து மடத்திற்குள் நுழைந்து துளசிதாசரைச் சேவித்தாள். அவள் சேவித்தவுடனே "தீர்க்கசுமங்கலீபவ, புத்திரபௌத்திரவதீ" என்று ஆசீர்வாதஞ்செய்

தார். அப்போது அந்தப்பெண்பிள்ளை, சுவாமி! தேவரீர் ஆசீர்வாதஞ்செய்கிறீர். என்னுடைய புருஷனிறந்து நானவருடனே ஏககமனம்பண்ணப் போகையில் தேவரீரைச் சேவித்துவிட்டுப்போகவேண்டுமென்று வந்தேனென்றாள். இதைத்துளசிதாசர் கேட்டு ஸ்ரீஇராமசந்திரனுடைய வாக்குப் பொய்யாகப்போகாது. அந்தப் பிரேதத்தை யிங்கே கொண்டுவரச்செய்யென்று சொல்ல, அவ்விதமே கொண்டுவர கட்டுச்சேர்ந்துவிட்டபொழுது, அந்தப் பிரேதத்தின் சமீபமாக துளசிதாசர் போய் இராமா, இராமா, இராமா, எழுந்திருவென்று மூன்றுதரங் கூப்பிட்டார். உடனே பிரேதமாயிருந்த வியாபாரி தூங்கியெழுந்தவனைப்போல் எழுந்து துளசிதாசருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வைஷ்ணவதீக்ஷை செய்தான். பிறகு அந்த ஸ்திரீபுருஷர்களைத் துளசிதாசர் ஆசீர்வாதஞ்செய்து மங்களமாக வீட்டுக்கனுப்பிவிட்டார். இதைப்பார்த்த சகலமான ஜனங்களும் ஆச்சரியத்தையடைந்து துளசிதாசரைப் பார்த்துப் பலவிதமாய் ஸ்தோத்திரஞ்செய்தார்கள்.

இந்த ஆச்சரியங்களைக் கேள்விப்பட்ட டில்லி பாச்ஷாவானவர் "அகபர்பாச்ஷா" இவரைச் சோதிக்கவேண்டுமென்று கருதித் தன்னு மந்திரியைக் காசிப்பட்டணத்துக்கு அனுப்பித் துளசிதாசரை யழைத்துக்கொண்டு வரச்சொன்னார். அவ்விதமே மந்திரி காசிப்பட்டணத்துக்குவந்து துளசிதாசரை அகபர்பாச்ஷா அழைப்பதாகக் கூப்பிட்டான். துளசிதாசர் உடனே பாச்ஷாவுக்கு அநுக்கிரகஞ்செய்யவும் கடைத்தேறச் செய்யக்கருதியவ்விதமே வருவதாக வொப்புக்கொண்டு, இராமநாமத்தை யுச்சரித்துக்கொண்டு புறப்பட்டு வருகிற துளசிதாசரை அகபர்பாச்ஷா தன்னுடைய ராஜதானியாகிய ஆக்ரா புரியிலிருந்து தனது பரிவாரங்களோடு வழியில் எதிர்கொண்டழைத்துத் தன்னுடைய பட்டணமுழுதும் துளசிதாசருடன் மகாவைபவத்தோடு சுற்றிவந்து கடைசியில் தனது அரமனையிற்சென்று அவரைத் தன்னுடைய சிம்மாசனத்தில் உட்காரவைத்து, சுவாமி! தேவரீர் நானாவிதமான ஆச்சரியங்களைக் காசிப்பட்டணத்திலகாண்பித்தீரே யவை யாருடைய வல்லமையினாலேயென்று கேட்க, அதற்கவரென் தெய்வமான ஸ்ரீராமசந்திரனுடைய நாமப் பிரதாபத்தினாலேதானென்று சொன்னார். அப்படியானால் தேவரீருடைய அந்த தெய்வத்தை எனக்குக் காட்டுமில்லாவிடிலும்மை வெளியில் விடுகிறதில்லையென்று காவல் வைத்துவிட்டுப்போனான். அப்

பொழுது துளசிதாசர் ஆஞ்சநேயரை ஸ்மரிக்க அவருடனே பிரசன்னமாக, அவருக்கு சாஷ்டாங்கமாகச் சேவித்து இந்தவிருத்தாந்தங்களெல்லாவற்றையுஞ் சொன்னார்.

உடனே அநுமார் பதினாயிரம் வானரவீரர்களையழைத்து அவர்களைப்பார்த்து நீங்கள் இந்நகரிலுள்ள [illegible] பரியந்தம் உங்களுடைய பராக்கிரமங்களை பாட்சாவுக்குக் காண்பிக்கவேண்டுமென்று சொன்னவுடனே, அவர்களெல்லோரும் ஆகாசமார்க்கத்தில் கிளம்பி பட்டணத்திலிருக்கிற [illegible] ஒவ்வொருவரைத் தூக்கி [illegible] வீசுகிறதும், [illegible] பிடுங்கித் தள்ளுகிறதும், [illegible] கொள்ளையடித்து [illegible] விடுகிறதும், இவ்விதம் நானாவிதமான உபத்திரவங்களினாலே பட்டணத்தார் [illegible] களுக்குக் கெடுதல் [illegible] தீங்கிலடைந்து, இந்தக் காரியம் [illegible], அந்தபாட்சாவின் காரியஸ்தர்களில் [illegible] பாட்சாவைப்பார்த்து, இராமபக்தனாகிய துளசிதாசரை அவமானஞ்செய்ததின் [illegible], உடனே ராஜா துளசிதாசரிடம் வந்து நமஸ்கரித்து, சுவாமி! [illegible] தங்கள் [illegible] அபராதத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று [illegible] யுடைய [illegible] முதலானவைகளையும் [illegible] வேண்டுமென்று [illegible] பிறகு துளசிதாசர் இந்தமுறையே ஆஞ்சநேயரை ஸ்மரிக்க அவர் [illegible] வானரவீரர்களைப் பட்டணத்தை விட்டு அப்பால் விட்டு, பாட்சாவுக்கும், அந்தப்பட்டணத்திலுள்ள சகலமான பிரஜைகளுக்கும் இராமமந்திரத்தையுபதேசித்துக் கிருதார்த்தர்களாகச் செய்தார்.

இவ்விதம் துளசிதாசர் வெகுகாலம் பாதுஷாவினால் சேவிக்கப்பட்டு அவருடைய [illegible]யிலேயே சுககாலக்ஷேபஞ்செய்துவந்தார். பிறகு அந்நகரியைவிட்டுப் புறப்பட்டு கோகுலத்துக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் தரிசனஞ்செய்து, அதன்பின்பு பிருந்தாவனத்தில் ராதிகாபாயியைத் தரிசித்து, அங்குள்ள ஜனங்களுக்கு உபதேசஞ்செய்து பாகவதர்களாகச் செய்தார்.—

பிருந்தாவனத்தில் மகாபாகவதோத்தமரான பிராமணரொருவர் அநேகம் பக்தர்களுடைய சரித்திரங்களைக் கிரந்தத்திலெசெய்திருந்தார். அச்சரித்திரங்களைக் கேட்கவேண்டுமென்று துளசிதாசர் அவரைக்கேட்க அப்போது அந்தப் பாகவதர், ஓகோ! நாம் துளசிதாசருக்கு முன்னுள்ள பக்தர்களுடைய சரித்திரங்களையும், இவருக்குப் பின்னுள்ளவரான பக்தர்களுடைய சரித்திரங்களையும் வர்ணித்திருக்கிறோம்; இவருடைய சரித்திரத்தை யெழுதாமற்போனோமேயென்று மனதில் விசனமடைந்து நலெத்து இவர் கேட்டதைக்காட்டவேண்டுமென்று பயந்துக் காட்டிக்கொண்டு வருகிறபோது, நடுவில் துளசிதாசருடைய சரித்திரமெழுதியிருக்கக் கண்டு பரமாச்சரியப்பட்டு அதை சகலமான பக்தர்களுக்கும் காட்டினார். பகவானே தன் சொந்தக்கையினாலெழுதி பெருமையில்லாமல் அந்தப் பக்தருடைய புஸ்தகத்தில் எழுதிவைத்துவிட்டுப்போன வந்த சரித்திரமடங்கிய புஸ்தகம் மகா சிரேஷ்டமானதென்று சகலமான பேர்களும் அதைத்தங்கண்ணால் பார்த்துப் பரமானந்தத்தையடைந்தார்கள். பிறகு எல்லாரும் துளசிதாசரை ஸ்தோத்திரஞ்செய்து அவர் போகுமிடங்களிற் சென்று அநேக ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து சதாகாலம் இராம நாமத்தை யுச்சரித்துக்கொண்டு வானந்தமாயக் காலங்கழித்துவந்தார்கள்

ஆகையால் பாகவதர்களுடைய பிரபாவங்களை வேதங்களாலும் வர்ணிக்கமுடியாது. சகலமான ஜன்மங்களைக்காட்டிலும் மகாஉத்கிருஷ்டமான மானிட ஜன்மமெடுத்ததற்கு சம்பூர்ணபகவத் பக்திசெய்து மோட்சத்தையடையவேண்டும். இம்மானிட ஜன்மத்தைத் தவிர வேறு ஜன்மங்களில் மோட்சத்தை யடைய இடமில்லை. மோட்சமடையவேண்டிய பக்குவஞ் சாதனமாயுள்ள ஞானமானிடர்களைத்தவிர மற்ற ஜீவஜந்துக்களுக்குக் கிடையாது. இச்சமயந் தப்பினவிச்சமயம் வாய்ப்பதருமை. ஓ மானிடரே! பசுப்பிராயங்களாய்க் காலத்தைக்கழிக்காமல் ஒவ்வொருவரும் வீணாய்ப் போகாவண்ணம் வேறுசிந்தையின்றி பகவானை ஸ்மரித்துக்கடைத்தேறுங்கள். பக்தர்களுடைய சரித்திரங்களைப் படிப்பதினால் மனதில் பக்திபிறந்து நல்வழியில் புத்தியைப் பிரவர்த்திக்கச்செய்யும். பக்தர்களுடைய சங்கத்தினாலும், பகவத் குணங்களைக் கேட்பதினாலும், பகவத் ஆராதனையினாலும், பாகவதர்களை யாராதிப்பதாலும் பக்திபிறந்து அந்தப்பக்தியினால் பகவானுடைய பிரசாதத்தையடைந்து மோட்சத்தை யடையலாம். சுபமஸ்து.

உ

கங்காபுரிராஜாவின் அரசாட்சி.

முற்காலத்தில் வடதேசத்தில் காசிநகரையாண்ட அரசனொருவன் மனுநீதிதவறாமல் தன்னுடையராச்சியத்தை யாண்டுவந்தான் அவன் பல்வித தந்திரங்களும், சாட்சிகளுமில்லாமலே வழக்குகளின் உண்மையறிந்து ஞாயந்தீர்ப்புச் செய்துவருகிறதொன்றும், மகாசத்தியவந்தன், மகாபத்திமானென்றும், அவன்பெயரெங்கும் பிரசித்தமாயிற்று.

இதைக்கேள்விப்பட்ட நாரதமகாமுனி ஒருநாள் அப்படிப்பட்ட உத்தமனுடைய மகாபுருஷனை நேரில் பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு ஒருகிழப்பிராமணனைப்போல் வேஷந்தரித்துக்கொண்டு அந்தவரசனுடைய நியாயஸ்தலம்போய்ச்சேர்ந்தார்.

அவ்வாறவரசன் நியாயஸ்தலத்திற்கு வந்ததும் முதலாவதாக ஒரு கசாயிக்காரனுக்கும், ஒரு எண்ணெய்வாணியனுக்கும் நேர்ந்தவழக்கை விசாரித்தான். அரசன் முன்னின்ற வாணியன் தேகமும் வஸ்திரமும் எண்ணெய்க்கசிவுள்ளதாயிருந்தது. கசாயிக்காரன் அரசனைப்பார்த்து, "நானிந்தப் பெரும்புரட்டன்கடைக்கு எண்ணெய் வாங்கப்போனேன். அதற்கு பணங்கொடுப்பதற்காக என்னிடத்திலிருந்த பணப்பையை அவிழ்த்து அதில் கையிட்டு கைநிறையசில்லரை யெடுத்தேன் அதில் பொன் நாணயத்தைக்கண்ட வாணியன் என்பணத்தை அபகரிக்க எண்ணி என் பணப்பையைப்பிடித்துக்கொண்டு நான் பணத்தைத் திருடினதாகப் பாசாங்கு செய்தான். நான் பிடித்தபிடி விடாமல் தங்களிடம் வந்தேனிதோ பாருங்கள்" என்றான்.

இதைக்கேட்ட வாணியன் ஐயா! "இந்தப் போக்கிரி என் கடைக்கு எண்ணெய் வாங்கவந்தான். எண்ணெய்வார்த்த பிறகு ஒருபொன்நாணயத்தைக்கொடுத்துச் சில்லரை கேட்டான். நான் பெட்டியைத்திறந்து சில்லரைப்பையையெடுத்து சில்லரையெடுக்குஞ்சமயத்தில் பையைப் பிடுங்கிக்கொண்டான்" என்றான் இவர்களுடைய வாக்குமூலத்தைக் கேட்ட அரசன், பணத்தைக் கச்சே

கியில்வைத்துவிட்டு அவர்களை மறுநாள் வரும்படி உத்திரவுசெய்தான்.

இரண்டாவது, குருவுக்கும் சிஷனுக்கும் நேர்ந்த பெண்வழக்கு. குருவும் சிஷனும் ஒருஸ்திரீயை என்பெண்சாதி யென்பெண்சாதி யென்று சண்டையிட்டுக்கொண்டு அரசனிடம் வந்தார்கள். அரசன் அந்த ஸ்திரீயை விசாரிக்கும்போது அவள் ஊமைபோலிருந்தாள். அரசன் யோசித்து குரு சிஷர்களை மறுநாள் வரும்படியாய் உத்திரவுகொடுத்து, அந்தஸ்திரீயை மட்டும் நியாயஸ்தலத்தில் வைத்துக்கொண்டான்.

மூன்றாம்வழக்கு. ஒருபிரபு தன்குதிரையின்மேலேறிச் செல்லுகையில் வழியில் வந்த ஒருகிழவனை நடக்கச் சக்தியற்று மூர்ச்சையாகி வழியில் விழுந்திருந்ததைக்கண்டு, அந்தப்பிரபு இரக்கமுற்று அக்கிழவனை ஆதாரப்படுத்தி தன்குதிரையில் ஏற்றித்தானே நடத்திக்கொண்டு கிராமத்துக்குள் நுழைந்ததும் தன்குதிரையை விட்டிறங்கும்படியாய் கிழவனை வேண்ட, அவன் தன்குதிரையானதால் தானிறங்கமாட்டேனென்று சொல்லிக் குதிரையை தனது மனையைநோக்கி ஓட்டினான். அப்போது அந்தப்பிரபு, ஓ, ஓ, "நான் தீர்க்காலோசனை செய்யாமல் கிழவன் அவஸ்தையைப்பார்த்து மனமிரங்கி யென்குதிரையை யவனுக்குக்கொடுத்தேன்" இப்போது கிழவன் தனக்குத்தான் குதிரை சகாயமாயிற்று நோவுமென்று அரசன் நினைத்துத் தன்பட்சம் நியாயஞ்செய்யானென்று நினைத்துக் குதிரையைத் தன்னுடையதென்று வைப்பாடிக்கொண்டான். இவன் எண்ணமிந்தகாரனிடம் செல்லாதென்று அவனை வழிமறித்துப் பிடித்து அரசனிடம் கொண்டுபோனான். அரசன் வாதி பிரதிவாதிகளுடைய வாக்குமூலங்களை வாங்கிக்கொண்டு, அவர்களையும் மறுநாள் வந்தாஜராகும்படியாய் உத்திரவுசெய்தனுப்பினான்.

மறுநாள் கட்சிக்காரர்களெல்லாம் நியாயஸ்தானத்தில் அரசன்முன் ஹாஜராக, அரசன் முதலில் எண்ணெய் வாணியனை நோக்கி "இந்தக் கசாயிக்காரனிங்கு வைப்புபோன பணமுடிச்சைப் பெட்டியிலிருந்து திருடிக்கொண்டதென்றும், அதை நீ கையாண்ட காசுகளென்றும் சாதித்தாயல்லவா? அவைகளை நான் ஒருபாத்திரத்து நீரிற்போட்டுப்பார்த்தேன்; உன்கை முழுவதும் எண்ணெய்மயமாயிருக்கிறபடியால், அந்த நீரிற்போட்ட காசுகளிலிருந்து

என்னெண்ணெய்ப்பசை நீர்மேல் மிதக்கவேண்டுமே, அப்படி லவலேசமும் காணப்படாமையால் அந்தப்பணம் கசாயிக்கடைக்காரனுடையதே; துராவழக்குக் கொண்டுவந்த நீ கசையடி 50 சகிக்கவேண்டுமென்றும்" தீர்ப்புரைசெய்தார்.

இரண்டாவது "இந்த குருடர்கள் இந்த வொரு ஸ்திரீயை தனதன மனைவியென்று வழக்காடுகிறார்கள். ஒருவருந் தன்சுதந்தரத்தை ருசிப்படுத்தக்கூடவில்லை. இந்த பெண்பிள்ளையோ வாய் திறவாமல் மவுனமாயிருக்கிறாள். இவ்வுலகத்தில் இவளைநமதுகுல குருவுக்கு நைவேத்தியமாய்க் கொண்டுபோய்க் கொடுக்கும்படி உத்தரவு செய்தேன். ஆனால் அவ்விடத்தில் குருவுக்கு காரியமாக காப்பாற்றிய ஹோமசாமான்களை நறுக்கிக்கொடுத்துவிட்டு, அவைகளைக் கொண்டு அந்தச்சமயத்துக்குத் தகுந்த ஆகாரங்கள் முன்னுப்போல கொடுத்துவந்தாள். அப்போது அவள் நடந்துகொண்டவிதமும் இப்படிப்பட்ட ஹோமஸ்திரீயிடத்தில் சாஸ்திரத்தின்படி வழக்கமுள்ளவளாகக் காணப்பட்டபடியால், இந்தப்பழக்கம் ஸ்திரீயாகச் செய்துகொண்டு, மற்றவர்களின் பெண்சாதிகளுக்குத் தெரியாதது. ஆகையால் இவள் குருவின் பெண்சாதியெனபதற்கு சந்தேகமில்லையென்று தீர்மானிக்கிறேன். சேவகன் தப்பு வழக்கிட்டு, தாயாருக்கு சமானமான குருவின் பெண்சாதியை அபகரிக்க நினைத்ததற்காக கொரடா அடி அறுபது பொறுத்துக் கொள்ளவேண்டுமென்றார்.

உடனே அரசன், பிராதுபாட்டைசாரிக்கிழவன் இவர்களுடைய வழக்கைவிசாரிக்க அவர்களைக்கூப்பிட்டார். அரசன் தன் சேவகனை நோக்கி "இந்தவழக்காளிகளிருவரையும் நம்முடைய குதிரைலாயத்துக்கு நம்மைப்பின்தொடர்ந்துவரச்செய்" என்றுத்திரவுகொடுக்க, அவன் அவர்களில் பிரபுவை முன்னே குதிரைச்சாலையில் அழைத்துக் கொண்டுபோய்விட்டான். "நீர் உம்முடைய குதிரையைக் கண்டு பிடியுமென்று அரசன் சொல்ல" அந்தப்பிரபு பலகுதிரைகள் கட்டியிருந்த பல அறைகளில் ஒன்றின் கிட்டப்போய் "இதோ என் குதிரையிருக்கின்றது" என்றார். அவ்விதமே அந்தக்கிழவன் வர "ஓய் பெரியவரே! இந்தக்குதிரைகளுக்குள் உம்முடைய சொந்தத்தை இதுவென்று கண்டறிந்துசொல்வீரா?" என்றுகேட்க, "ஐயா! என்குதிரையோ, நூறு குதிரைக்குளளிருந்தாலும் நான் என்னு

டையதைத் தெரிந்துகொள்வேன், அதோ யிருக்குது பாருங்கள் என்குதிரை" என்று சுட்டிக்காட்டினான்.

பின்புநியாயாதிபதி தன் ஸ்தானத்திற்குத்திரும்பிவந்து ஆசனத்தில் வீற்றிருந்து, உடனே கிழவனைக்கூப்பிட்டு, "குதிரை உன்னுடையதே. ஏனென்றால் நீர் குதிரையினிடத்திற்குப்போனபோது குதிரை உம்முடைய காலடிச் சத்தத்தைக்கேட்டு உம்மையறிந்துகொண்டது. கிழவன் குதிரையைக் காட்டினபோதிலும் அது அவனை யறியாமல் விறைத்துப்பார்த்து பயப்பட்டது. ஆகையால் பொய்வழக்குக் கொண்டுவந்த கிழவன் பிரம்படி இருபது வாங்கிக்கொள்ளவேண்டியது தானென்று" தீர்மானித்தார்.

பிறகு அரசன் வழக்கம்போல அன்று தம்பதிபூஜை செய்யவேண்டுமென்று பார்க்கையில், தூரதேசத்திலிருந்தொரு தம்பதிகள் வந்திருப்பதாக மந்திரி தெரிவித்தார். அத்தம்பதிகள் கபடவேஷதாரிகள். பணவாசைகொண்ட விரண்டு பிராமணராயிருந்தவர்கள் ஒருவன் புருஷன்போலவும், மற்றொருவன் பெண்சாதி போலவும் வேஷமாறிக்கொண்டு வந்தார்கள். அக்கபடதம்பதிகளை யரசன் முன் கூட்டிக்கொண்டுபோனதும், அரசன் அவர்கள் முகத்தைக்கண்டபோதே கபடவேஷதாரிகளென்று அறிந்துகொண்டான். அப்படியாயினும் தன்னுடைய உத்தேசம் பார்வதிபரமேசுவரர்களைக்குறித்து பக்தியோடு பூஜைசெய்வதால் இவர்களுடைய கபடத்தை மனதில் நினைக்காமல், அத்தம்பதிகளைப் பார்வதி பரமேசுவரசுவரூபமாக ஆவாகனஞ்செய்து, விதிப்படி ஷோடசோபசாரங்களாலும், வஸ்திராபரணங்களாலும், அர்ச்சனைகளாலும் பக்தியோடு பூஜைசெய்து, அத்தம்பதிகளை பார்வதிசமேத சங்கரராக எண்ணிப்பலவாறாக அவர்கள் பாதத்தில் நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்தான். அவன் பூஜைசெய்தகாலத்தில் பார்வதிபரமேசுவரர்கள் அதிர்சியமாக அவ்விடம் வந்து, அரசனால் செய்த பூஜைகளைப்பெற்று சந்தோஷமடைந்து அரசனுக்குப் பல ஆசிகள்கூறிக் கைலாயஞ்சென்றார்கள். பிறகு இத்தம்பதிகள் அரசனால்கொடுத்த அபரிமிதமான வஸ்திராபரணங்களை யெடுத்துக்கொண்டுவெளியே வந்ததும் பெண்வேஷதாரியான பிராமணசிறுவன் பதினெட்டுவயதான பெண்ணாகித் தனது பழையசுவரூப நினைவில்லாதவளாய்ப் புருஷனைப்பார்த்து, "ஓ பிராணநாயகா! எனக்குக் காமவிகாரமாயிருக்கிறது; எங்கே என்னைவிட்டு விரைவாக முன்னால்

செல்லுகிறீர்கள் ; எனக்கு நடக்கச் சக்தியில்லை ; என்னை யுபேட்சை செய்யக்கூடாதென்று” பெண்வேஷதாரி சொன்னான். அதற்குப் புருஷன், “சினேகிதா ! பரிகாசஞ்செய்யவேண்டாம் ; நம்முடைய கபடவேஷம் வெளியில் தெரிவதற்கு முன்னமே நாம் இப்பட்டணத்தை விட்டகலவேண்டும் ; வாய்பேசாமல் சீக்கிர மென்னுடன் வந்துசேரவாயானால் பிறகு உன்னுடைய பரிகாசங்களைச் செய்யலாம்” என்றான்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீவேஷதாரியானவன் தான் வேஷம்போட்டுக்கொண்ட ஞாபகமேயில்லாமல், “நாயகா! என்ன விக்தியாசமான வார்த்தைகள் உங்கள் நாவிலிருந்து வருகிறது ; நாம் வேஷம்போட்டுக்கொண்டதாகச சொல்லுகிறீர் ; இன்னும் கொஞ்சதூரம் போனால் என்னை யும்முடைய பெண்சாதியல்லவென்று சொல்வீர்போலத் தோன்றுகிறது ; ஏனென்றால் மகாராஜாவினிடத்தில் அபரிமிதமான தனத்தைப் பெற்றமையால், அத்தனத்தைக்கொண்டு என்னைக்காட்டிலும் ரூபவதியான ஸ்திரீயைக் கல்யாணஞ் செய்துகொள்ளலாமென்கிற எண்ணம் உம்முடைய மனதில் ஜனித்திருப்பதாக வெனக்குத் தோன்றுகிறதென்று” சொன்னான்.

உடனே புருஷனுக்குச் சந்தேகம் பிறந்து திரும்பிப்பார்க்க, தன் சினேகிதன் நிஜமாகவே ஸ்திரீயாக மாறிவிட்டான். அவனுக்கு முந்தின நினைவிலலாமல் ஜன்மமாரம்பமுதல் பெண்ணாக விருப்பதாகவே அவள் எண்ணியிருந்தாள். இந்த வேறுபாட்டைக்கண்ட புருஷன் மிகவும் நடுங்கி, “நாம் செய்த மோசம் நமக்கே கெடுதலாய் முடிந்தது ; மகாராஜா மகா பக்திவானானதால் அவன் பார்வதி சுவரூபமாக எண்ணி என் சினேகிதனைப் பூசித்ததால், அவன் பெண்ணுருவாக மாறிவிட்டான் ; அந்த மகாராஜாவினுடைய அனுக்கிரகத்தால் தான் மறுபடியும் என் சினேகிதன் புருஷசுவரூபத்தை யடையவேண்டுமென்று எண்ணி”ப் பிறகு தன்னுடைய சினேகிதனைக் கூட்டிக்கொண்டு மறுபடியும் ராஜசமுகத்துக்குச்சென்று, அங்கு சிம்மாசனத்தில் கொலுவிருந்த அரசனிடம் யாவற்றையும் ஒளியாமல்ச் சொன்னான்.

இதைக்கேட்ட வரசன் சற்று யோசித்து,அந்தப் பிராமணச் சிறுவனைப்பார்த்து “நான் உ ம்முடைய சினேகிதனை பார்வதியாக

ஆவாகனஞ்செய்து பக்தியோடு பூஜைசெய்ததால், அவர் ஸ்திரீ சுவரூபமாக மாறினவரை மறுபடி ஆண்சுவரூபமாகச்செய்வது அசாத்தியம் ; இனிச்செய்யவேண்டியது யாதெனில், நீங்களிருவரும் வேதோக்தமாக விவாகஞ் செய்துகொள்வதுதான் என் மனதுக்குத் தோன்றுகிறதென்று" சொன்னான்.

அதைக்கேட்ட மந்திரி முதலான சபையோரெல்லாம் அரசனுடைய அபிப்பிராயமே சரியென்று ஒத்துக்கொண்டார்கள். பிறகு அரசன் அந்தச் சிறுவர்களுக்குக கலயாணம் செய்வித்து நிஜ தம்பதிகளாக்கி அபரிமிதமான வரிசைகளோடு அவர்களிருப்பிடம் அனுப்பிவிட்டான்.

இவ்வாச்சரியங்களையெல்லாம் நேரில் பார்த்திருந்த நாரத முனிவர் அரசன்முன் தோன்றி, அரசனால் செய்த சகல உபசரணைகளையும் பெற்றுப் பிறகு அரசனுடைய பக்தியைக்கொண்டாடியவனுக்குப் பல ஆசீர்வாதங்களைச் செய்துவிட்டு அதிர்சயமானார். அதன்பின்னர் சபையோரெல்லாம் ஆநந்தப்பட்டவர்களாகி தங்கள்தங்க ளிருப்பிடஞ்சென்றார்கள்.

ஆகையால், நாம் பக்தியாகக் கடவுளை ஆராதிப்போமாகில், அவர் நமக்கு முக்தியைக் கொடுப்பாரென்பதில் சந்தேகமில்லை.

நாகானந்தம்.

(சர்ப்பங்களுக்கு ஆநந்தம்.)

“அஹிம்ஸாபரமோ தர்ம:” என்கிறவாக்கியத்தின்படி ஜகதீசனால் படைக்கப்பட்ட அற்ப ஜந்துவைக்கூடத் தொந்திரவுசெய்யாமலிருத்தலே எல்லா தர்மங்களிலும் மேலானது. ஒருவன் தன்னுடைய உயிரை யிழந்தாவது பிறருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டும். அப்படிச் செய்வதால் அவனுக்குப் புகழும், செல்வமும், மோட்சமுஞ் சித்திக்குமென்று புராணங்களில்நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. தேவாலயங்களின் முன் சிலபிராணிகளைப் பலிகொடுப்பதால் தேவதாப் பிரசாதத்துக்குக் காரணமெனறு சிலர் அனேகம்பிராணிகளை வதைக்கிறார்கள். அப்படிப்பட்ட பலியினால் பகவானுடைய கிருபைக்குப் பாத்திரராகார்களென்றே “நாம் உறுதியாகச் சொல்வோம்”. ஏனென்றால், ஒருவன் கட்டியவீட்டையாவது, வெகு சிரமப்பட்டு வளர்த்த மரத்தையாவது, மற்றொருவன் அப்படி வீட்டைக்கட்டிய அல்லது மரத்தைவளர்த்தவனுக்குப் பிரீதியுண்டாக்கவேண்டுமென்று அந்தமரம் அல்லது வீட்டை நாசஞ்செய்தால், அவனுக்கு (மரம் வளர்த்தவனுக்கு) சந்தோஷமுண்டாகுமென்று யாராவது எண்ணுவார்களா? எண்ணமாட்டார்கள்; அதுபோலவே பகவத் சிருஷ்டியைக்கொல்வது பகவானுக்குக் கோபமாகுமேயல்லாமல் பிரீதியையுண்டாக்கமாட்டாது. ஆகையால் பிராணிகளை ஹிம்ஸிக்கக்கூடாதென்று முதியோர் உரைத்தனர். இதைப்பற்றி யொரு இதிகாஸமிருக்கிறது.

இவ்வுலகாரம்பத்தில் பிரமன் தனக்குதவியாக பிரபஞ்ச சிருஷ்டியின் நிமித்தம் மரீசி, அத்ரிமுதலான பத்துருஷிகளைப்படைத்தனர். மரீசிக்கு காசிபரென்னும் புத்திரசிகாமணியுண்டானார். அவர்மகாதபச்வி; வேதவேதாங்கங்களைக் கரைகடந்தவர்; அவரே அனேகவிதமான ஜீவராசிகளை யுத்பத்திசெய்தார். அவருக்குப்பத்தினிகள் பதின்மூன்றுபேர்கள். அவர்களில், கத்துரு, விநதை என்னும் அக்காள் தங்கைகள் காசிபருக்கு மனைவிகளாக ஏற்பட்டு பர்த்துசிச்ரூஷை செய்துவந்தார்கள்.

ஒருநாள் சாயந்திரம் தமக்கையும், தங்கையும் வேடிக்கையாக கடற்கரையில் உலாவப்போனார்கள். அங்குதேவரும், சித்தரும், கந்தர்வரும், வித்தியாதரரும், ஜதைஜதையாய் ஸ்திரீகள் சகிதமாய் வந்திறங்கினர். அவர்களுடைய இரதத்தில் பூட்டியகுதிரைகள் கனைத்து அதிர்த்தன. மத்த கஜங்கள் வீறிட்டு ஆகாயத்தைக் கிழித்தன? அலைகள் ஒன்றின்பின்னொன்றாய் கரைகளில் ...ாதி முத்துக்களையும் பவழங்களையும் வாரி யிறைத்தன. சுமத்ரா, ஜாவாமுதலிய மலயத்தீவுகளில் அடர்ந்த காட்டில் ஓங்கிவளர்ந்த ஸ்ரீசந்தன விருட்சபந்திகளில் ஏறிப்பின்னிப் பிணைந்துகொண்டிருந்த, ஜாதிக்காய், ஏலக்காய் முதலான வாசனைத்திரவியங்களின் கொடிகளில் பட்டுவீசும மந்தமாருதத்தின் குளிர்ச்சியால் சதிபதிகள் விரகதாபமடைந்து ஒருவரை யொருவர் தழுவிமுத்தமிட்டுப் பூஞ்சோலைகளில் கிரீடித்தார்கள். அங்கு வேடிக்கைகளைப்பார்த்துக்கொண்டு அந்த மின்னார்க்கொடியரிருவரும் உலாவிக்கொண்டிருக்கும்போது, தூரத்தில் நின்றுகொண்டிருந்த "உச்சைச்சிரவம்" என்றபெயராயுடைய இந்திரனுடைய குதிரையைக் கண்டனர்.

அப்போது கத்துரு, தங்கையாகிய "விநதை என்பவளைப்பார்த்து, "சகோதரி! அதோ நிற்கிற உச்சைச்சிரவத்தை (இந்திரன் பட்டக்குதிரை) ப்பார்த்தையா? அது எவ்வளவு வெண்மையாகவிருக்கிறது! அதற்கேதை யொப்பாகச் சொல்லலாம். அதனுடைய பெருக்கு அனுகுணமாக உயர்ந்த சரீரமும், நிமிர்ந்தகாதுகளும் பார்க்க மனோகரமாயிருக்கின்றது" என்று சொன்னாள்.

விநதை: "அக்கா! அந்தக்குதிரையைச் சந்திரனுக்கு ஒப்பாகச்சொல்லலாம்."

அக்கா: "விநதாய்! நீ சொல்வது சரிதான். சந்திரனைப்போல அதனிடத்திலும் கொஞ்சம் களங்கமிருக்கிறதைப்பார்த்தாயா?"

தங்கை; "அக்கா! களங்கமெங்கே இருக்கின்றது?"

அக்கா: "அதோபார் வாலண்டைகன்றாய்த் தெரிகிறதே!

தங்கை: "அக்கா என்னைக்குருடியென்று நினைத்து பரிகாசஞ் செய்கிறயோ, அல்லது அற்பவிஷயத்துக்குப் பொய்தான் சொல்லுகிறயோ."

அக்கா:- "நான்சொல்வது பரிகாசமுமல்ல, பொய்யுமல்ல, நிஜந்தான்; உனக்கு நான்சொல்வது நிச்சயமில்லாதிருந்தால், என்ன பந்தயங்கட்டுகிறாய்? நான் ரூபிக்கிறேன்.

தங்கை:-"அக்கா! கருப்பை நீ நிரூபிக்காத பட்சத்தில் எனக்கு நீயும் உன்னுடைய சந்ததிகளும அடிமையாய் விடுகிறாயா?

அக்கா: "ஆம நான் அடிமையாகிறேன. கருப்பிருந்தால் நீயும் உன்னுடைய சந்ததிகளும், எனக்கும் என்னுடைய சந்ததிகளுக்கும் அடிமையாகவேண்டும.

தங்கை:- சம்மதம்; புறப்படு போய்பார்ப்போம்.

அக்கா:-அப்போது கத்ரு தான்போட்ட சபதம் பொய்யாகுமென்று உத்தேசித்து "தங்காய்! இப்போது இருள்மூடிக்கொண்டது; நாம தனியே அங்குபோகக்கூடாது; ஒருவேளை நாம் போவதற்குள் அந்தக்குதிரை சுவர்க்கலோகம போய்விடும்; ஆகையால் நாம் நாளைக்காலமே இவ்விடம் வந்து பார்ப்போம்; அந்தக்குதிரையும் வழக்கம்போல நாளைக்கும் வரும; இப்போதுவீடு போய்ச்சேருவோமென்று" தங்கையைக்கூட்டிக்கொண்டுகத்ரு இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள்.

விநதை இராத்திரி விசனமின்றித்தூங்கினாள். கத்ருவுக்குத் தூக்கம் வரவில்லை. உச்சைச் சிரவத்தின் வால்நுனி தூல்லியவெண்மையென்று மனதாரத்தெரிந்த விஷயம். வீம்புக்காக வீண்சபதங்கூறிவிட்டாள். அதைச்சாதிக்கவேண்டுமென்று அவளுக்கேக்கம்பிடித்துத் தூக்கம வரவில்லை. போட்ட பந்தயம் சாமானியமன்று; தோற்றுப்போனால் இழிவான அடிமைத்தொழில் புரியவேண்டும். உடனே அர்த்தராத்திரியில் அவள் எழுந்து, தன்னுடைய குமாரர்களாகிய ஆதிசேஷன் முதலான ஆயிரம் சர்ப்பசிரேஷ்டர்களிடஞ் சென்று தனக்கும், தங்கைக்கும் நடந்த சபதத்தை யுறைத்தாள்.

அதைக்கேட்ட ஆதிசேஷன் முதலான புத்திரர்கள், "அம்மா! நீங்கள் செய்துகொண்ட வீண்வாதத்தை எப்படி ஜயிக்கமுடியும்? உச்சைசசிரவத்தினுடைய வாலில் கறுப்பென்று சொன்னால் நியாயமாகுமா? எங்களால் முடியாத காரியமாயிற்றே" யென்றுசொன்னார்கள். அவர்களில் கார்க்கோடகன் என்னும் கறியநாகம்

"நான்போய் அதன் வாலைச்சுற்றிக்கொள்கிறேன்; அப்போது தூரத்திலிருந்து பார்க்கிற உங்களுக்கும், உங்கள் தங்கைக்கும் நான் சுற்றிக்கொண்டிருக்கிற பாகம் கறுப்பாகத்தோன்றும்; அப்போது தாங்கள் பந்தயத்தைக் கெலித்துவிடலாமென்று" சொன்னான்.

அந்தவசனத்தைக் கேட்ட கத்துரு மகாசந்தோஷமடைந்து கார்க்கோடகனை யாசீர்வதித்து, பிறகு விநதையைக் கூப்பிடப்போனாள். அதற்குள் கார்க்கோடகன் அந்த இந்திரன் குதிரையின் வாலைச்சுற்றிக்கொண்டான். கத்துரு தங்கைக்குக் காலையில் குதிரையின் வாலில் தெரிகிற கருப்பைக் காண்பித்துப் பந்தயத்தைக் கெலித்தாள். விநதை நிஜமென்று நம்பி யன்றுமுதல் தன்னுடைய தமக்கையாகிய கத்துருவுக்கு அடிமையாகி யவளிட்ட வேலையைப் புரிந்து வந்தாள்.

இவ்விதம் வெகுகாலம் விநதையும் அவளுடைய புத்திரனாகிய கருடனும், கத்துருவுக்கும் அவளுடைய குமாரர்களாகிய ஆதிசேஷன் முதலான சர்ப்பங்களுக்கும் ஏவல்புரிந்து வரும்போது, கருடன் தன்னுடைய தாயாதிகளாகிய நாகங்கள் படுத்துகிற பாட்டைச் சகிக்கமுடியாமல், ஒருநாள் தன் தாயினிடம்வந்து "அம்மா! தாங்களும், கத்துருவும் காசிபபிரஜாபதிக்கு சமமானபத்நிகளாயிருந்தும் தங்களுக்குமெனக்கும் அடிமைத்தொழில் நேர்ந்ததற்கு என்னகாரணமென்று" கேட்டான். அப்போது விநதை, அப்பா குழந்தாய்! "நீ ஜனிப்பதற்குமுன் நானும் அக்காளும் வேடிக்கையாகக் கடலோரம் காற்றுவாங்கப்போனபோது, அங்கு வெகுதூரத்தில் நின்ற "உச்சைச்சிரவம்" என்கிற இந்திரன் குதிரையைக்கண்டு அதன் வாலில் கறுப்பிருக்கிறதென்று அக்காள் சொல்ல, நானில்லையென்றேன்; அப்போது அவளுடைய குமாரன் கார்க்கோடகனைக் கொண்டு வாலைச் சுற்றிக்கொள்ளச்செய்து, பிறகு தூரத்திலிருந்து வாலிலுள்ள கருப்பையெனக்குக் காண்பித்து, மோசடியாகப் பந்தயத்தைக் கெலித்து என்னை யடிமையாகச்செய்து கொண்டாள்; "நீ பிறந்தபிறகும், நீயும் அவர்களுக்கு அடிமைத்தொழில் செய்ய நேரிட்டிருக்கிறதென்று" சொன்னாள்.'

இவ்வசனத்தைக் கேட்டு கருடன் தன்னுடைய பெரிய தாயாகிய கத்துருவினிடத்தில் போய் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து,

"அம்மா! என்னையும் என் தாயாரையும் இவ்வடிமைத் தொழிலிலிருந்து நீக்கக் கிருபைசெய்யவேண்டும்; அதற்குப் பிரதியாக எதைக்கேட்டாலுங் கொண்டுவந்து தருகிறேனென்று" சொல்லுகிற கருடன் வார்த்தையைக்கேட்ட கத்துரு, கொஞ்சநேரமாலோசித்து, "அடா குழந்தாய்! தேவலோகத்தில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிற அமிர்த கலசத்தைக் கொண்டுவந்து தருவாயாகில் உன்னையும் உன்னுடைய தாயாரையும் அடிமையிலிருந்து நீக்குவோம்" என்று சொல்ல, கருடன் அதற்கிணங்கி, தன் பிதாவாகிய காசிபப் பிரஜாபதியினிடஞ்சென்று, அவரை வணங்கி, "பிதாவே! என்னுடைய தாயாரின் அடிமைத்தனத்தை நீக்கவேண்டுமென்று கத்துருவைக் கேட்க, அவள் தன்னுடைய புத்திரர்கள் சிரஞ்சீவியாயிருக்கும்படி அமிர்தங்கொண்டு வந்து தரும்படி கேட்டதற்கு நானுமொப்புக்கொண்டுவிட்டேன்; ஆகையால் தேவலோகம் போய்த் தேவர்களை ஜயித்து அமிர்த கலசத்தை எடுத்து வருவதற்குத் தகுந்த பலத்தை அருளவேண்டுமென்று" பிரார்த்தித்தான்.

கொஞ்சநேரம் காசியர் யோசித்து கருடனைப் பார்த்து, "அப்பா குழந்தாய்! முன்னர் சகோதரரிருவர் விபாவஸு, சுப்ரதீகர் எனவிருந்தார்கள். அவர்களில் சுப்ரதீகர் தமயனைப்பார்த்து பிதுரார்ச்சித சொத்தைப் பாகித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு, விபாவஸு கோபமடைந்து தம்பியை யானையாகப் போகக்கடவதென்று சபித்தனன். தம்பி, தமயனைப்பார்த்து நியாயமான பாகத்தைக் கேட்ட என்னை சபித்ததால், "நீயும் ஆமை யுருவாக மாறக்கடவதென்று" சபித்தனன். தட்சணமே அண்ணந்தம்பிகள் ஆமை யுருவாகவும், யானை யுருவாகவும் மாறினர். யானை ஆறுயோசனை யுயரமும் பன்னிரண்டு யோசனை நீளமுமுள்ளது. ஆமை ஆறு யோசனை அகலமும் மூன்று யோசனை உயரமுமுள்ளது. யானை மேட்டிலும், ஆமை குளத்திலுமிருந்துகொண்டு சண்டைசெய்வதால் அனேக பிராணிகள் நாசத்தை யடைகின்றன. ஆகையால் அந்த யானையையும், ஆமையையும் ஏககாலத்தில் பிடித்து, அங்கிருந்து அவைகளைத் தூக்கிக்கொண்டு, அலம்ப தீர்த்தக்கரையை யடைந்து, அதன் கரையிலுள்ள ரோகிணம் என்கிற விருட்சத்தினுடைய நூறு யோசனை விஸ்தாரமுள்ள ஒரு கிளையில் அவ்விரண்டையும் வைத்துத்தின்றால், உனக்குப் பலமதிகரிக்கும்" என்று சொன்னார்.

கருடன் அவ்வசனத்தைக் கேட்டு ஆநந்தமடைந்து, பிதாவை வணங்கிப் புறப்பட்டு, ஆமையிருக்கும் குளத்தண்டைவந்து சேர்ந்தான். அங்கு பிதா சொன்னபடி யானையும் ஆமையும் ஒன்றோடொன்று சீறி நெருங்கும்போது ஏககாலத்திலிரண்டையுமிரண்டு கால்களால் தூக்கிக்கொண்டு, ரோகிணம் என்ற மரத்தின் கிளையில் உட்கார்ந்தார். உடனே அந்தக் கிளைகருடனுடைய பளுவைத் தாங்காமல் சடசடவென்று முறிய வாரம்பித்தது. அக்கிளையில் வாலகில்லியா முதலான மகாருஷிகள் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு தபசுசெய்து கொண்டிருந்தார்கள். அதைக் கருடபகவான், ஓகோ! மகாருஷிகளுக்கு வாபத்து வந்தால் தன்னைச் சபித்துவிடுவார்களென்று பயந்து, அக்கிளை யொடிந்து கீழே விழுவதற்குமுன் அதைத் தன் மூக்கால் கவ்விக்கொண்டும், இரண்டு கால்களினாலும ஆமை, யானை இவைகளைத தூக்கிக்கொண்டும் பறந்து ஆகாயமார்க்கமாகத் தன் பிதா தபசுசெய்யுமிடம் வந்து ஆகாசத்தில நின்றான். அதையறிந்த காசிபர், ஞானதிருஷ்டியால் சகலத்தையுமறிந்து, அந்தக் கிளையில் தொங்குகிற ருஷிகளைப் பிரார்த்தித்தார். உடனே ருஷிகளெல்லாம் தபசிலிருந்தபடியே மறைந்துபோயினா. பிறகு காசிபர் கருடனைப்பார்த்து, "குழந்தாய்! சமுத்திரமத்தியில் ஒரு தீவில் அநேகங் கோடிகிராதர்கள் கொடிய பாபங்களுக்கிடமான ஜீவனங்களைக் கொன்றுதின்றுத் துஷ்டர்களாய்த் திரிகிறார்கள். அவர்கள்மேலிந்தக் கிளையைப் போட்டுக்கொன்று ஒரு வரையும்விடாமல் தின்றுவிடு; ஆனால் அங்கொருப் பிராமணன் துஷ்டகிருத்தியங்களால் ஜாதிப்பிரஷ்டனாகி, கிராதர்களுடன் சேர்ந்து மதுமாமசாதிகளைத் தின்றும கிராதஸ்திரீகளுடன் சம்சர்க்கஞ்செய்து பதிதனாகிவிட்டான். அவனைமட்டும் கொல்லாதே; அவனை விழுங்கும்போது உன் தொண்டையை பிரம்மதேஜஸ் தகிக்கும்; அப்போது அந்தப் பிராமணனைமட்டும் விழுங்காமல் விட்டுவிடவேண்டுமென்று" சொல்லியனுப்பிவிட்டார். கருடன் தன் பிதாவின் வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு அந்தக்கிளையை கிராதர்கள் மேல்போட்டு அதினால் நசுக்குண்டவர்களையும், தப்பிப் பிழைத்தவர்களையும் பிடித்துப்பிடித்துப் புசித்துவிட்டார். ஒருவனைப்பிடித்து விழுங்கும்போது தொண்டையில் அத்தியுஷ்ணமாயிருந்தது. பிதாசொற்படியே அவன் பிராமணனென்றறிந்து அவனை வெளியில் கக்கினார். உட

னே அந்தப் பிராமணப்பதிதன் "என்னுடைய ஜாதகஸ்திரீயையும் வெளியில்விட்டால்தான் நான் பிழைத்திருப்பேன்; இல்லாவிட்டால் என்னையும் அவளுடன் விழுங்கிவிடென்று" சொன்னான். அதற்குக் கருடன் யோசித்து அவனுடைய் பத்தினியை வெளியில் விடுவிதே நலமென்று கக்கிவிட்டார். பிறகு யானை, ஆமை இவைகளையும் தின்று பசியாறி, தன்பிதா விருப்பிடம் வந்துசேர்ந்து, அவரை வலம்வந்து, துதித்துநின்றார். காசியர் மகனைத் தழுவி, உசிமுகர்ந்து, ஆசீர்வதித்து, இனிமேல் நூறு இந்திரர்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் தேவசேனைகளுடன் "உன்னையெதிர்த்தாலும், நீயவர்களை வெகு அற்பமாகவே ஜயித்துவிடலாம்; நீ இனிமேல் பயப்படாமல் தேவலோகம் போய் தேவர்களை ஜயித்து அமிர்த கலசத்தை யெடுத்துவரத் தடையிராது? உனக்கு ஜயமுண்டாகக்கடவது' என்றாசீர்வதித்து" அனுப்பினார்.

உடனே கருடன் மகாபுஜபல பராக்கிரமத்தையடைந்ததால், காவமடைந்து, இந்திரலோகஞ் சென்று கர்ச்சித்தான். இந்த கர்ச்சனையைக் கேட்ட விந்திரன் தூதர்களை யனுப்பிப்பார்த்து வரச்சொன்னான். அவர்கள்போய்க் கருடனைக்கண்டு விசாரிக்க, அவர்தான் அமிர்தங்கொண்டுபோக வந்ததாயும், அமிர்தங் கொடாவிட்டால் யுத்தத்திலிந்திரனை ஜயித்து பலாத்காரமாகக் கொண்டுபோவதாகத் தெரிவித்தார். இவைகளை யெல்லாங் கேட்டதூதர்கள் இந்திரனிடத்தில் அதைத் தெரிவித்தார்கள். இந்திரன் கோபமடைந்து, சகலமான தேவ சைன்னியங்களோடு போர்க்கோலங்கொண்டு, பட்டணத்துக்கு வெளியில் அட்டகாசஞ்செய்து கர்ச்சித்துக்கொண்டிருக்கிற கருடனை நோக்கிச் சென்றான்.

கருடனுக்கும், தேவர்களுக்கும் பலமான யுத்தம் நேரிட்டது. கருடன் தன் சிறகுகளைப் படபடவென்றடித்துக்கொண்டு அதன் காற்றுவேகத்தால் தேவசேனைகளைத் தூற்றிவிட்டு, இந்திரனையும், அவனுடைய சேனாதிபதிகளையும் காலினாலும், மூக்கினாலும் கீறிக் கொத்தித் துரத்தித் துரத்தியடித்ததால் இந்திரன் தன்னுடைய சேனைகளுடன் கருடனுக்கெதிரே நிற்கமுடியாமல் யுத்தமுனையினின்றும் ஓடிப்போய்விட்டான்.

பிறகு கருடன் தன்னை யெதிர்ப்பவரொருவருமில்லாததால் பட்டணத்துக்குள் நுழைந்து, அமிர்தம் வைத்திருக்கிறவிடத்

சென்று, அங்கு காவலாயிருந்தவர்களை யெல்லாந் துரத்தியடித்து விட்டு, அமிர்த கலசத்தை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

உடனே தேவர்கள் பயந்து கருடனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ஒருவார்த்தை கேட்டுவிட்டுப் பிறகு இஷ்டம்போலப் போகலாமென்று பிரார்த்திக்க, கருடனிணங்கி நின்றார். அப்போது தேவர்கள், "ஸ்வாமி! எதற்காக அமிர்தத்தைக் கொண்டுபோகிறீர்கள்? அதைத் தேவர்கள் தவிர மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்று பகவானுடைய ஆக்ஞை யேற்பட்டிருக்கிறது; ஆகையால் நீனத்தவர்களுக்கெல்லாம் அமிர்தத்தைக் கொடுப்பது பகவானுக்குக் கோபமாகுமென்று" சொன்னார்கள். அதற்குக் கருடபகவான் "ஓ தேவர்களே! நான் என்னுடைய பெரிய தாயாருக்கு வாக்குக்கொடுத்தபடி கொண்டுபோகவேண்டியது முக்கியமானது; ஆனால் நீங்களாவது உபாயஞ்செய்து, நானும் என் தாயாரும் அடிமைத் தொழிலிலிருந்து விலகின பிறகு, அதை இங்கு தூக்கிவந்து விடுங்கள்" என்று சொன்னார். இதைக்கேட்ட தேவர்களும் சரிதானென்று சம்மதித்தார்கள்.

பிறகு கருடபகவான் அமிர்த கலசத்தைக் கொண்டுபோய்த் தன்னுடைய பெரியதாயின் முன்வைத்தார், அவள் வெகு வாநந்தப்பட்டு, க்கருடனைப் புகழ்ந்து அவனையும் அவன் தாயாகிய விநதை என்பவளையும் அடிமைத் தொழிலிலிருந்து விலக்கிவிட்டாள். அதன்பின்னர் தன்னுடைய குமாரர்களான ஆதிசேஷன் முதலான ஆயிரம் சர்ப்பங்களையும் அழைத்துச் சீக்கிரம் ஸ்நானஞ்செய்து சுசியுடன் அமிர்தபானம்பண்ண வரவேண்டுமென்றனுப்பிவிட்டு, கத்ருதானும் ஸ்நானத்துக்குச் சென்றனள். இச்சமயத்தில் இந்திரன் தேவர்களை விடுத்து அமிர்தகலசத்தைத் தூக்கிவரச்செய்து, மறுபடி யதன் இருப்பிடத்தில் வைத்துவிட்டான்.

இந்த வேடிக்கைகளை யெல்லாம் பார்த்திருந்த ஸ்ரீமந்நாராயணமூர்த்தி, கருடனுக்குப் பிரசன்னமாகி, அவனுடைய பராக்கிரமத்துக்கும், கையிற்கிடைத்த அமிர்தத்தில் ஆசைவையாமல் தன்னுடைய பிரதிஞ்ஞையை நிறைவேற்றினதற்கும் சிலாகித்தார். உடனே கருடனும் அவர் பாதங்களில் விழுந்துப் பலவாறாகத் தோத்திரஞ்செய்தான். பகவான் அவனுக்குப் பலவரங்களைக் கொடுத்தபின்னர் அதிர்சியமானார். இந்திரன்முதலான தேவா

களும் கருடனுக்குப் பலவரங்களைக் கொடுத்துபின்னர் தேவலோகஞ் சென்றார்கள்.

அதன்பின்னர் கருடன் தன்னுடைய தாயாதிகளான சர்ப்பங்கள் தனக்குச்செய்த கஷ்டங்களையெல்லாம் நினைத்துக்கொண்டு, தினம் தவறாமல் அகப்பட்ட சர்ப்பங்களையெல்லாம் தின்ன வாரம்பித்தனன். இவ்விதமாக அனேகங்கோடி சர்ப்பங்களையெல்லாந் தின்றபிறகு தன்னுடைய அண்ணன்மார்களான ஆதிசேஷன், வாசுகி முதலான வாயிரம்பேர்களில் எவன் அகப்படுகிறானோ அவனைக்கூட பட்சணஞ்செய்ய வாரம்பித்தது. அப்போது சர்ப்பங்களெல்லாஞ் சேர்ந்து ஒரு யோசனை செய்தது. தினம் அனேகம் பேர்களைக் கருடன் நாசப்படுத்துகிறான். இவ்விதம் இன்னும் கொஞ்சநாள் செய்வானேயாகில் சர்ப்பமே வுலகிலற்றுப்போய் விடும். ஆகையால் அவர்களெல்லாரும் கருடனை வணங்கி அவர்களில தினம் ஒவ்வொரு சர்ப்பமாக அதன் ஆகாரத்துக்குக்குறித்த வொருவிடத்தில வருவதாகக் கேட்டுக்கொண்டதின்பேரில் கருடன சம்மதிகக, அவ்விதமாகவே தினம் ஒவ்வொரு சர்ப்பமாகப் புசித்துக்கொண்டு வநதனன். ஒருதினம் ஒரு சர்ப்பத்தின் முறைவர அது கருடன் வருகிறவிடத்துக்குப்போய், அங்கு அதன்வருகையை யெதிர்பார்த்துக்கொண்டும், தன்னுடைய அகாலமரணத்தைப் பற்றியும் துக்கித்துக் கொண்டு மழுதுகொண்டிருநதது. அச்சமயத்தில் அவ்வழியாகப் போன வொரு சாது (சன்னியாசி) அழுகையைக் கேட்டு மனமிரங்கி, அந்தச் சர்ப்பத்தை அழுகையின் காரணமென்னவென்று கேட்டதற்கு, சர்ப்பம் நடக்கப்போகிற சங்கதியைத் தெரிவித்தது. உடனே அச்சன்னியாசி சர்ப்பங்களுடைய விருத்தாந்தங்களைக் கேட்டு மகாபரிதாபமடைந்து, சர்ப்பங்களைக் காப்பாற்றக் கருதி, "ஓ சர்ப்பமே! நீ உன்னிருப்பிடம்போய்ச் சேரலாம்; உனக்குப்பதிலாக நான் இன்று கருடனுக் கிரையாகிறேன்; நானோ இவ்வுலகப்பற்றை யொழித்துத் திரிபவன்; நீயோவென்றால் உன்னுடைய குடும்பத்துக்கு ரடசகனாக விருக்கிறாய்; நீ போகும்பட்சத்தில் உன்னுடைய புத்திரகளத்திரர்களெல்லாம் ரட்சகரில்லாமல் தத்தளிப்பார்கள் ஆகையால நீ போய்விடு; உனக்குப்பதிலாக நானிங்கு வருகிற கருடனுடைய பசியைத் தணிக்கிறேன்" என்றார். அதற்குச் சர்ப்பம் 'ஓ மகானுபாவா! எனக்காக நீர் உயிர்விட்டால், என்னைப்போல்

எத்தனையோ கோடி ஜீவன்களைக் காப்பாற்றக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிற உம்முடைய உயிரை யிழப்பது நியாயமல்ல; நானிறந்தால் என்னுடைய குடும்பமட்டுமே வருத்தப்படும்; நீ ரிறந்தால் உமக்காக வுலகமே நஷ்டத்தை யடையும்; ஆதலால் நீரெனக்காக வருத்தப்படவேண்டாமென்று" சொன்னான்.

சன்னியாசி, "ஓ சர்ப்ப சிரேஷ்டமே! நான் அந்தக் கருடனுக்கு லக்ஷ்யமாக இரையாகிவிடுவேனென் றெண்ணவேண்டாம். இனிமேலுங்களைத் தொந்திரவு செய்யாதிருக்கும்படி செய்கிறேன்; அந்த வேடிக்கையை நீயும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கலாமென்றார்." பிறகு சர்ப்பம் அந்தச் சன்னியாசிக்கு வந்தனஞ்செய்து, விடைபெற்றுத் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனன். சன்னியாசி சர்ப்பத்தை யனுப்பினபின்பு, காஷாயத்தைப் போர்த்திக்கொண்டு சர்ப்பம் உட்கார்ந்திருந்தவிடத்தில் உட்கார்ந்தார்.

சிலநேரத்துக்குள் கருடன் அதிவேகமாக வந்து, அங்கு வழக்கமாய் சர்ப்பத்தைத் தூக்குவதுபோல காஷாயப் போர்வையுடன் சன்னியாசியைத் தூக்கிக்கொண்டு ஒரு மலையினுச்சியி லுட்கார்ந்து, தன மூக்கினால் காஷாயத்தைக் கிழித்தெறிந்து வெகு ஆவலுடன் உள்ளே பார்த்தபோது, சன்னியாசியைக்கண்டு நடுநடுங்கி, அவரை வலம்வந்து நமஸ்கரித்து, அஞ்சலிபந்தனஞ் செய்துகொண்டு, "சுவாமி! மகா அபராதியாகிய என்னைப் பொறுத்துக் காப்பாற்றவேண்டும். என்னுடைய மதக்கொழுப்பால் எவ்வளவோ ஜீவன்களைக் கொன்றுவிட்டேன்; தங்களுடைய ஸ்பரிசத்தால் எனக்கு ஞானமுதித்துவிட்டது; என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று"ப் பலவிதமாகத் தோத்திரஞ்செய்கிற கருடனைப்பார்த்து, அந்த ஸாது, "ஏ கருடா! நீ மகா அபராதஞ்செய்து விட்டாய்; உன்னை யிப்போது மன்னித்துவிட்டோம்; இப்போது நான் சொல்வதைக் கேட்கவேண்டும்; இல்லாவிடில் உன்னை சபித்துவிடுவேனென்றார்." அதற்குக் கருடன் சம்மதிக்க, இன்று முதலினிமேல் "உன்னுடைய தாயாதிகளான சர்ப்பங்களை வதை செய்வதில்லையென்றுப் பிரதிக்ஞை செய்யவேண்டுமென்று கேட்க," கருடன் "சுவாமி! உம்முடைய தரிசனத்துக்குப் பிறகு கூட எனக்கு ஜீவஹிம்சை மனதிலுதிக்குமா? இனிமேல் சர்ப்பங்கள் பயப்படாமல் வெளியில் திரியலாம்" என்று சொன்னான்.

பிறகு கருடனுக்கு நற்புத்திகளைச் சொல்லியனுப்பினபின், அந்தச் சன்னியாசி லோகசஞ்சாரார்த்தம் புறப்பட்டார். இந்த வாச்சரியங்களை யெல்லாம் வெகுதூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த சர்ப்பம் மறுபடியும் சன்னியாசியிடம்வந்து அவரைப் பணிந்து, இனிமேல் நாகசர்ப்பங்களுக்கெல்லாம் ஆநந்தத்தையுண்டாக்கினாரென்று தெரிந்துகொண்டு, அவரைத் தனது ஊருக்கு அழைத்துப்போய், அங்கு ஆதிசேஷன் முதலான சர்ப்பங்களுக்கெல்லாம நடந்த வர்த்தமானங்களையெல்லாம் சொன்னான். இதைக்கேட்ட நாகங்களெல்லாம பரமாநந்தமடைந்து, அச்சாதுவைப் பலவாராகப் போற்றி ஸ்தோத்திரஞ்செய்து, அவரை திவ்வியமாக வலங்கரித்து ஒருபல்லக்கிலேற்றி நாகலோக முழுவதும் சகலமான வாத்தியகோஷத்துடன் சுற்றிவந்து, தேவோற்சவமாகக் கொண்டாடினார்கள். நாகங்களுக்கு ஆநந்தமுண்டாக்கின இந்தச சரித்தத்தை "நாகாநந்தம" என்று கூறப்படுகிறது.

அந்தச் சன்னியாசி யாதொரு பிரதிபலனையுமடைய விரும்பாமல், தனனுயிர் போனாலும் பிறருடைய வுயிரைக் காப்பாற்றக் கருதி, மகா கொடிய விஷத்தையுடைய சர்ப்பங்களாயிருந்தாலும், அதன் குணதோஷங்களைக் கவனியாமல அவைகளைக் காப்பாற்ற விரும்பிக் கருடனுக்குத தாமே ஆகாரமாகச சென்றார். ஆகையால் பிரம்ம சிருஷ்டியில் அகப்பட்ட ஜீவன்களைத் தொந்திரவு செய்யாமலிருப்பது தான் முதன்மையான தர்மம்.

ஓம்பரப்ரம்ஹணேநமஃ.

நமது தேசத்தில், வேதம், உபனிஷத், ஆகமம் ஸ்மிருதி முதலான கிரந்தங்களின் இரகசியங்களை யெள்ளளவேனும் ஆராய்ந்தறியாத சில மூடஜனங்கள், பரப்ரம்ஹஸ்வரூபமாகிய கடவுள் சமயத்துக்குத் தக்கபடி எடுத்த ஸ்வரூபங்களைப்பற்றி தாரதம்மியங் கற்பித்து ஒருவருக்கொருவர் மற்றொருவரை தூஷித்துத் திரிகிறார்கள். முக்கியமாய் பகவான் சிருஷ்டி, பரிபாலனம், நிக்கிரகம் என்கிற முத்தொழில் புரிவதற்காக மும்மூர்த்தி சுவரூபமாக ஜகத்தில் விளங்குகிறாரென்று வேதங்கள் முறையிட்டாலும், அந்த வேதவாக்கியங்களுக்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கற்பித்து எழுதியிருக்கிற வசனகாவியங்களைமட்டும் படித்த சிலர்,

தாங்கள் அபிமானிக்கு தெய்வத்தையே வெருவாக சிலாகித்தும், மற்ற தெய்வஸ்ரூபங்களை தூஷிப்பதுதான் ஸ்ரீசைவம் அல்லது ஸ்ரீவைஷ்ணவமென்று எண்ணியிருக்கிறார்கள். அப்படி தூஷிக்கிற மூடர்களுக்கு நரகமே தவிர மோட்சங் கிடைப்பதருமை. சாதாரணமாய் மனிதர்களுடைய தாரதம்மியத்தை யறியச் சக்தியற்றவன், அம்மனிதர்களைச் சிருஷ்டித்த ஜகதீசனுடைய மாயா சுவரூபங்களின் தாரதம்மியங்களைக் காணமுடியுமா? சில அவிவேகிகளுடைய துஷ்கிருத்தியங்களினால் இக்காலங்களில் புராணம், பாரதம், பாகவதம் முதலான கிரந்தங்களில் அவரவர்களுக்குத் தோன்றியபடி தெய்வங்களைத் தூஷணைசெய்து கற்பித்தெழுதியிருக்கிறார்கள். அதினால் உலகத்தாருக்குள்ள நிஜபக்தி மலினமடைந்து, சைவர், வைஷ்ணவரென்றும் வித்தியாசங்களேற்பட்டு, ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, தேவாலயங்களை மூடிவிட்டுக் கோர்ட்டுகளில் போய் வக்கீல்களுக்கும், சாட்சிகளுக்குந் தேவஸ்தான சொத்துக்களை வாரி யிறைத்து நாசஞ்செய்கிறார்கள். இராமசந்திரமூர்த்தியும், பரசுராமரும், மகாவிஷ்ணு அவதாரமாயிருக்க அவர்களிருவரும் விரோதபாவமா யிருந்தார்களென்று இராமாயணத்தில் சொல்லியிருக்கிறது. ஏன் அப்படிக் காட்டினார்களென்று தகுந்த முகாந்தரம் யாராவது சொல்லுவார்களா? அவ்விரோத பாவத்தைக் காட்டினதற்குக் காரணம் இராமாயணத்தின் இரகசியார்த்தத்தை யறிந்த மகானே யறிவார். ஒரு இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சிவில், ரிவினியூ, கிரிமினல் அதிகாரிகள் அவரவர் தொழிலைச் செய்ய அந்தந்த வேலைகளுக்கு அதிகாரிகளாயிருப்பதுபோல, பகவான், பிரம்மா, விஷ்ணு மகேஸ்வரர் ஆகிய மூன்று சுவரூபங்களாயிருந்து மூன்று தொழில்களையும் தாமே செய்துவருகிறார். முற்காலங்களில் புராணிகர்கள், தாங்கள் எழுதின கிரந்தங்களில் சமயம் வந்தபோது முக்கியமாய் ஒரு தெய்வத்தைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருப்பதனால், மற்ற பகவத் சுவரூபங்களை தூஷணைசெய்ததாக எண்ணக்கூடாது. மற்றொரு கிரந்தத்தில் மேற்சொன்னவைகளுக்கு நேர் விரோதமாக எழுதியிருக்கின்றன. நமது புராணிகர்கள் இல்லாததை உண்டு பண்ணியும், உள்ளதை மறைத்தும், எவ்வளவு தூரம் பொய்யான சங்கதிகளைச் சேர்க்கவேண்டுமோ அவ்வளவுங் குறைவில்லாமல் சேர்த்தும், சுருதி, ஸ்மிருதி, இதிகாசம் இவைகளின் ஆதாரமில்லா

மலே புராணங்களை யெழுதி, நமது ஆரிய மதஸ்தர்கள் வெவ்வேறு மார்க்கங்களாகப் பிரிந்து, ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லாமல் போகும்படி செய்துவிட்டார்கள். யாதொரு கலெக்டருக்கு ரிவினியூ சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கிற அதிகாரத்தை, சில சந்தர்ப்பங்களில் சிவில் கோர்ட்டார் ரத்துசெய்வதுபோலவும, யாதொரு மாஜிஸ்ட்ரேட்டார் ஒருவருக்கு பிறப்பித்த யாதொரு சுதந்தரத்தைச் செய்து பூர்த்திசெய்யவொட்டாமல் சிவில் கோர்ட்டார் இன்ஜெங்க்ஷன் என்னும் கட்டளையினால் தடுப்பது போலவும, யாதொரு சிவில் கோர்ட்டார் முன் நடந்த சட்ட விரோதங்களை மாஜிஸ்ட்ரேட்டுக்கு கம்மிட் செய்வதுபோலவும், ஜகத் கர்த்தாவாகிய பராபரக்கடவுள் திருவிளையாட்டுக்காக எடுத்த மூன்று சுவரூபங்களுக்கும் வெவ்வேறு தொழிலை யேற்படுத்திக் கொண்டு, அந்தந்தத் தொழிலில் நடத்திய ஆச்சரியமான திருவிளையாடல்களை அடியில் விவரிப்போம்.

பத்மாசுர சம்மாரம்.

முற்காலத்தில் பத்மாசுரனென்னும் ஒரு இராட்சதன் பரமசிவத்தை நோக்கிக் கடுந்தவம்புரிந்தான். அப்போது சங்கரன் அவன்முன் தோன்றியவனுக்கு வேண்டியவரத்தைத் தருவதாகக் கிருபைபுரிந்தனர். அச்சமயத்தில் அவ்விராக்கதன் யோசித்து, "சுவாமி! யான் எவர் தலையில் என்கையை வைக்கிறேனோ அவனுடனே எரிந்து சாம்பலாகப் போகும்படியாய் வரமளிக்கவேண்டுமென்று இரக்க," பகவான் "அவ்விதமே அனுக்கிரகித்தோமென்று" சொன்னார். உடனே அப்பதிதன் அவர் தந்தருளின வரத்தைச் சோதிக்கவேண்டுமென்று கருதி, அக்கங்காதரனுடைய தலையில் தன் கையை வைக்கப்போகையில், அவர் உடனே யோசித்து, இவனுக்குக் காலம் குறுகிவிட்டது; இவனை "நாமே கொல்லக்கூடாதென்று" எண்ணி, அவனைக் கொல்லக்கூடிய மகாவிஷ்ணுவை நோக்கி யோடினார். அச்சமயத்தில் அந்த விராட்சதனும் பின் தொடர, பரமசிவம் மகாவிஷ்ணுவைக் கண்டதும் அதிசயமானார். உடனே இவைகளையெல்லாம் அறிந்த மகாவிஷ்ணு ஒரு கிழப்பிராமண ரூபமாக அப்பதிதன் முன்தோன்ற, அவன்.

மகாவிஷ்ணுவாகிய பிராமணனைப் பார்த்து, "சுவாமி! பரமசிவமெங்கே? என்று கேட்க, அதற்கு நாராயணன், "ஏன் அவனைப் பற்றிக் கேட்கிறாய்"? என்று கேட்டார். அவன் நடந்த சங்கதிகளையெல்லாம் சொன்னான். அவ்வசனத்தைக் கேட்ட பத்மநாபன், "ஏ பத்மாசுரா! நீ அசுசியாய் சந்திர சூடனை ஸ்பரிசிக்க முடியாது; ஸ்நானஞ்செய்து, விபூதிதாரணஞ் செய்துகொண்டு நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துப் பின்னர் அவனை யணுகுவாயாகில் அவருன் கைக்ககப்படுவார்; அப்போது உன்னிஷ்டப்படி அவர் தலையில் உன் கையை வைக்கலாம்" என்று சொன்னார்.

இவ்வசனத்தைக்கேட்ட அந்த தூர்த்தன் உடனே குளத்தில் போய் ஸ்நானஞ்செய்து, விதிப்படி ஸந்தியாவந்தனம் செய்வதற்காக மந்திரோக்தமாக ஒவ்வொரு அங்கங்களைத் தொட்டுக் கடைசியாகத் தலையில் கையைவைத்துக் கொண்டதும் தக்ஷணமே அவன் எரிந்து பஸ்மமாயினன்.

மகாபயத்தை யடைந்திருந்த தேவர்முதலான சகலமானவர்களும் ஆநந்தத்தை யடைந்தார்கள். இந்தக் கதையை வைஷ்ணவர்கள் பரமசிவத்தை வெகுதூஷணையாக வெழுதியிருப்பார்கள். அதினால் கதைக்கு ஏற்பட்ட பக்திரசம குறைந்துவிடுகிறது.

கூர்ம ஸம்ஹாரம்.

ஆதியில் பதுமகற்பத்தில் தேவரும் அசுரருந் தீராப்பகையாற் பலகாலம் போர்புரிந்து இருதிறத்தவரிலும் அனேகரிறந்தனர்; அதனாலவர்கள் ஒன்றுசேர்ந்து, பாற்கடலைக்கடைந்து அமுதுண்டு சிரஞ்சீவியாய் ஜீவித்து யுத்தத்தை யாற்றவேண்டுமென்று மனதில் உத்தேசித்து, கேசவன் முன்சென்று அவனைத் தோத்திரஞ்செய்து, தங்கள் மனோபீஷ்டத்தைத் தெரிவிக்க, திருமால் "அவ்வாறே யாகுக" வென்று உத்திரவு கொடுக்க, பிறகு தேவாசுரர்கள் அவரனுமதிப்படி மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும், சந்திரனைத் தூணாகவும் அமைத்து, தேவர்கள் ஒருபுறமும், அசுரர்கள் ஒருபுறமுமாக நின்று கடைந்தார்கள்.

இவ்விதங் கடைந்துகொண்டிருக்கும்போது, மந்தரகிரி யொருபுறஞ் சாய்ந்தது. அதைக்கண்ட பத்மநாபன் பெரிய ஆமை வடிவுகொண்டு பாற்கடலிற் பாய்ந்து, தன் முதுகையிலட்சம் யோசனை யகலமாகச்செய்து, சாய்ந்த மலையை யெழுப்பித் தன் முதுகின்மேல் தாங்கி நின்றனர். பிறகு அமரர், தைத்தியர் முதலானோர் ஒன்றுகூடிக் கடையும்போது தாம்பாகிய வாசுகி வருந்தத் தாங்காமல் தன் வாயின் வழியாக விஷத்தைக் கக்கிற்று. அவ்விஷத்தின் அக்கினியைத் தாங்காமல் வானவரும் தானவரும் பயந்து வாயுவேகமாக வோடத் தலைப்பட்டனர். அதனைக்கண்ட திருமால் "தேவாசுரர்களே! சிறிதும் பயப்படவேண்டாம்" என்று அவர்களைத் தடுக்க முயன்றும் விஷவேகத்தால் உடல்கருத்துத் தாமுமங்கு நிற்க வஞ்சி, தேவர்களைப் பார்த்து,—

"என்னையொப்பவராயிரகோடியரெனினு
முன்னருங்கொடுவிடத்தினையெதிர்ப்பவருளரோ
பின்னலவேணியன்றிருவருளெனிற்பிழைப்பே
மன்னதிலலையெலெங்ஙனம்பிழைத்துமென்றறைந்தான்."

என்றபடியே "என்னைப்போல் ஆயிரங்கோடி பேரெனினும், இவ்விஷத்தினெதிரில் நிற்பாரோ? கங்காதரனுடைய கிருபையிருந்தால் பிழைப்போம்; இல்லாவிடில் பிழைப்பதருமை" என்று கூறினர். அதைக்கேட்ட தேவாசுரர்கள் திருமாலுடன் வெள்ளி மலையை விரைவிலடைந்து, நந்திகேசுவரருடைய அனுமதிபெற்று, சங்கரர் சந்நிதிசேர்ந்து, "அரஹர மகாதேவா! ஆபத்பாந்தவா! தீனதயாளு! அபயம்! அபயம்!" என்றலறியழுதனர். உமாபதியொன்றுந் தெரியாதவர்போல், "தேவர்காள்! உங்களுக்கு நேர்ந்த வாபத்து யாது?" என்று கேட்க, தேவாசுரர்கள் யாவையும் சொன்னார்கள். முன்னோன் கிருபைகூர்ந்து தன்முன் நின்ற சுந்தரரால் அந்த விஷத்தை வரவழைத்து உள்ளங்கையி லேந்தியுட்கொண்டு, தமது திருக்கண்டத்திலேயே அலங்காரமாக அவ்விடத்தை யமர்த்தினர்.

இக்காரணத்தால் நீலகண்டரெனத் திருநாமமேற்ற இமையவர், "உம்பர்காள்! உங்களிஷ்டப்படி பாற்கடலைக் கடைந்து அமுதுண்பீராக" என விடையளித்து அவர்களை யனுப்பினர். பிறகு அரி, பிர்ம்மா தேவர்கள் அசுரர்கள் முதலியோர் மீள

வாரந்தமடைந்து ஆரவாரித்து அதீராப்தியை யடைந்து, முன்போல விண்டு யாமையுருக்கொண்டு மந்தரத்தைத் தாங்க, தேவருமசுரரும் அதைக்கடைந்தனர். முதலில மூதேவிதோன்ற, அவளை வருணனுக்களித்தனர். தண்டு, கமண்டலத்துடன தந்வந்தரி யென்னுந் தேவ வைத்தியன் தோன்றினன் ; உலகமுழுவதுக்கும் வைத்தியனாக விடுத்தனர். பிறகு அறுபதுகோடி அரம்பாஸ்திரீகள் உற்பத்தியாக, அவர்களை யிந்திரலோகத்துக் கனுப்பினர். அதன்பின்னர் சுரைதோன்ற, அதை வானவா உண்டனர் ; தானவா நீக்தனர். உசசைசசிரவம என்னும புரவிதோனற, அதை யிநதிரனும், கவுஸ்துபமணியுண்டாக, வதை கமல நாபனும, அங்கீகரித்தார்கள். பஞசதருக்கள், காமதேனு, சிந்தாமணி யிவைகள் பிறந்தன ; இவறறை இநதிரன் அடைந்தான்: சந்திரன்தோன்ற, உலோகோபகாரமாய் ஆகாயத்தில் அமைததனர். மகாலட்சுமி ஜனித்தனள் ; அவளை தாமோதரன் தனது தாரமாகக்கொண்டனன். கடைசியாக அமிர்தம் பிறந்தது.

அதைக்கண்ட அமரரும், அசுரரும, அமிர்தத்தை தமக்குத் தமக்கென்று ஒருவரோடொருவர் போர்புரிநது இருதிறததிலும கணக்கில்லாதவர் மாண்டதைக்கண்ட மாயோன் ஓர்மாயையால் மோகினி வடிவெற்று அசுரரை வஞ்சித்து தேவர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுத்தனர். தேவர்களுக் கிடையில இரண்டு அசுரர்கள் மாறிய வுருவுடன அமிர்ததகதை வாங்கிச சாப்பிட்டார்கள். அதையறிந்த சூரிய சநதிரர்கள் விஷ்ணுவுக்கு வெளியிட, அச்சுதன் அந்தக்ஷணமே அளவில்லாக் கோபங்கொண்டு தன்கையிற் பிடிததிருந்த அகப்பையால அவாகள் சிரததைக் கொய்தெறிந்தனன. அவர்கள் அமிர்தஞ் சாப்பிட்ட மகிமையாலிறவாமல், இராகு கேதுவென்னு மிரணடு கிரகங்களாய்த் தம்மைக்காட்டிய சூரிய சந்திரர்களை தீராத்துயர் செய்துவருகின்றனர். அமுதுண்ட தேவர் யுத்தகளததில் தானவர்களை ஹதஞ் செய்து தெய்வலோகஞ் சேர்ந்து நித்யாநந்தராக வாழ்ந்திருந்தனர். இது நிற்க :—

மந்தரகிரியைத் தூக்கிநின்ற மாயவன் அவதாரமாகிய யாமை ஏழு சமுத்திரங்களையும் ஒன்றுகூட்டி, அதன் வெள்ளம் பூமியை யழிக்கும்படி கலக்கி, கடலைச சேறுகசசெய்து, இலட்ச

யோசனை மேல்முதுகும், கால்களின் அளவை, கணக்கிடக்கூடாத தால், திமிங்கிலமுதலிய ஜலஜந்துக்களை யெல்லாம் புசித்தும் பசி தணியாமல், ஜலத்தையுங் குடித்துத் தரை தெரியும்படி செய்தது. அதனால் கலக்கி வெளிப்படுத்தப்பட்ட கடல் நீர் யுகாந்த வெள்ளம்போல வெங்கும் பரவியது. தாமோதரனாகிய யாமை தனக்குக் கிடைத்த யாவையும் தின்ன வாரம்பித்தது. இதனை யறிந்த சூரிய சந்திரர் கடலிற்றோன்ற வஞ்சி நின்றுவிட்டனர். உலகெங்கும் காடாந்தகாரமான இருளாகிவிட்டது. இதையறிந்த பிரம்மாமுதலான தேவர்கள் உலகமழியுமென்று பயந்து, வெள்ளிமலையையடைந்து நந்திகேசுவரருடைய அனுக்ஞைபெற்று சிவபெருமான் சன்னிதியிற்சென்று அவரை வணங்கித்துதித்தார்கள்.

பார்வதிரமணன் தேவர்களுக்கும், மானிடர்களுக்கும் அருள் செய்யக்கருதி, அமரரைத் தேற்றி, பிறகு சமுத்திரத்தை யடைந்து தமது கரத்திற்றாங்கி யிருந்த சூலத்தினால் அக்கூர்மத்தின் உடலைக் குத்திப் பிளந்து எறிந்தனர். பார்த்துக்கொண்டிருந்த விண்ணவர்களிகூர்ந்து சந்திரசேகரனைத் துதித்தார்கள்.

பிருகுமுனிவர் சாபப்படி கூர்மவடிவுற்ற விஷ்ணு மூர்த்திக்கு சூலஸ்பரிசமானவுடன் தன்னுடைய கர்வங்களும், துஷ்டச் செயல்களும் போய், பூர்வவுணர்ச்சி தோன்றி தனது நிஜசுவரூபத்தை யடைந்து, பரமபதியைப் போற்றி, தேவர் முனிவர் கேட்கும்படி கூர்மபுராணம் ஓதித் தனது நிஜவடிவுடன் வைகுந்தஞ் சேர்ந்து சிவத்தியானஞ் செய்துகொண்டிருந்தனர்.

காஶீகண்டே.

[illegible] ।
[illegible] ॥

ஸ்காந்தே வீரபத்ரவாக்யம்.

[illegible] ।
[illegible] ॥

மச்ச சம்மாரம்.

வெகுகாலத்திற்குமுன், அரக்கர்குலத்திலே சோமுகாசுரனென்னும் பெயர்படைத்த கொடிய இராட்சதன் ஒருவன் தோன்றி, சிவபிரானைக்குறித்து அரியதவஞ்செய்து வேண்டியவரங்களைப் பெற்றுப் பராக்கிரமசாலியாய்த் தன்னை யெதிர்ப் போர்யாரும் இவ்வுலகிலில்லாதது கண்டு சுவர்க்கம், பாதலமென்னும இருலோகங்களிலும போய் பார்த்தான. அவ்விடங்களிலுள்ளவர்களு மிவனைக் கண்டவுடன் பயந்து ஓடி ஒளிந்தனர். பிறகு தானே சத்தியலோகத்துக்குப் போய், பிரமதேவனுக்கு முன் தோன்றி, அவனை யுத்தத்துக் கழைத்தனன். அப்போது சதுர்முகன் சோமுகனைக்கண்டு பயந்துநிற்க, இராக்கதன் இவன் பலம் இவ்வளவுதானென்று கருதி யிகழ்ந்து, பிரமாவினுடைய வசத்திலிருந்த வேதங்கள் நான்கையும் கையிற்பறித்துக் கடலில் பாய்ந்து ஒளித்தனன். பிரமன் தனது சிருஷ்டித் தொழிலுக்குச் சாதகமாயிருந்த வேதங்கள் நான்கும் அசுரன் கைவசமாய்விட்டதாலஞ்சி யினிச்செய்வ தொன்றுந் தெரியாமல் வைகுண்டஞ்சென்று விண்டுவைத் தரிசித்து "பிதாவே! என் வசத்திலிருந்த நான்கு வேதங்களையும் சோமுகன் பிடுங்கிக்கொண்டு போயினன்" எனக்கூற, நெடுமால் உடனே மகா கோபத்தையடைந்து, மீனவடிவுற்று, எண்ணில்லாத யோசனைநீளமும், அகலமும், உயரமுமுள்ள பெரிய சரீரத்தோடு கடலிற்பாய்ந்து, அது சேறுபடும்படி சோமுகனை யெங்குந்தேடிக் கடைசியாகப் பிடித்து அவனைக்கொன்று இரத்தத்தை வாயார வுட்கொண்டு, அவன் வசத்திலிருந்த வேதங்களை பிரமனிடம் திருப்பிக் கொடுத்தனர். அவைகளைப்பெற்ற சதுர்முகன் மகா சந்தோஷமடைந்து, நாராயணனைத் துதித்துப் பிறகு தனது சத்தியலோகஞ் சேர்ந்தனன்.

அசுரன் மெய்யிலிருந்து ஒழுகின இரத்தப் பெருக்கைக் குடித்ததினால், மகாவிஷ்ணு இரத்தவெறிகொண்டு தனது நிஜஸ்வரூபத்தை மறந்து, மச்ச வுருவோடு சமுத்திரங்களைக் கலக்கிக் கரைகளையிடித்து, மரக்கலங்களை யுடைத்து, திமிங்கிலம் முதலிய ஜலஜந்துக்களைப் புசித்து, தன் வாலால் ஜலத்தை நாலாபக்கமும் வாரி யிறைத்து, யுகப்பிரளயம்போல கரையிலுள்ள பட்டணங்

களையும் கிராமங்களையும் முழுகச்செய்தனன். அநேகங் கோடி ஜனங்கள் மாண்டுபோனார்கள். பட்டணங்கள் அழிந்தன. இதைக் கண்ட தேவர்கள் நடுங்கித் திருக் கைலாயத்தை யடைந்து உமாபதியை ஸ்தோத்திரஞ்செய்து, மாயோன் மச்சவடிவோடு செய்யும் அநியாயங்களைப் பொறுக்கமுடியாமல் இவ்விடம் வந்தோமென்று முறையிட்டார்கள். சிவபெருமான் புன் சிரிப்புடன் தேவர்களைப் பார்த்து, "அமரர்களே! பயப்படவேண்டாம்; அம் மாயமச் சத்தினிறுமாப்பை யடக்கி யுங்களுக்கு பயத்தைப் போக்கடிக்கிறேன்" என்று சொல்லித் தேவர்களை யனுப்பிவிட்டு, வலைஞர் வேடந்தரித்து சமுத்திரத்தை யடைந்து, அம்மீனுக்குத் தக்கபடி பெரிய வலையை வீச, மீன் அதற்கு அகப்பட, சந்திர சேகரர் அதன் விழியைத் தமது கட்கத்தால் குத்திப் பறித்தனர். மகா தேவருடைய கட்கஸ்பரிசமடைந்தவுடன், பத்மநாபன் பூர்வ ஞானமடைந்து, மச்சரூபத்தைவிட்டு நிஜஸ்வரூபமாக மாறி கங் காதரனைத் துதித்து நின்றார். தேவர்கள் துந்துபிமுதலான வாத் தியங்களை கோஷித்து ஆநந்தப்பட்டார்கள். பிறகு தேவாமுத லானவர்களெல்லாரும் அவரிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

[illegible]

[illegible]
[illegible]

வராஹ ஸம்ஹாரம்.

கமலோத்பவராகிய சதுமுகப் பிரமதேவனைக் குறித்து அநேகநாள் கடுந்தவம்புரிந்து பலவரங்களைப் பெற்ற இரணியாட் சதனென்னும் கொடிய அசுரனொருவன், அகன்று விரிந்த இவ் வுலகத்தைப் பாய்போல் சுருட்டியெடுத்துக்கொண்டு, சமுத்தி ரத்தில் பாய்ந்து பாதலம் சென்றனன். இதைக்கண்ட தேவர்கள் நடுக்கமுற்றுப் பத்மநாபனையடைந்து அரக்கன்செய்த தீச்செய லைச் செப்பினார்கள். அதைச் செவியுற்ற மாயன் "அமரர்களே! அத்தானவப்பதிதனை அதஞ்செய்து அவனியை அதன் ஸ்தானத் தில் அமைப்பேன்" என்று அபயமளித்துப் பின்னர் கருடவா

கனமேயுழி இரணியாட்சதனை நோக்கிச் செல்லுகையில் பிரமன், இந்திரன்முதலான தேவர்கள் அச்சுதனைத் துதித்துப் பணிந்தனர். திருமால் உலகைக்கொணரவராக வுருவெடுத்தனன். அவ்வராகம லட்சம் யோசனை யுயரமும, அதற்குத்தகுந்த சரீரமும பொருந்தியிருந்தது; வாலைவீசி நடக்கும்போது வால அண்டச்சுவர்களில் மோதியதை நாசஞ்செய்தது; திக்கஜங்கள் பயந்து பறந்தோடின; வடவாமுகாக்கினிபோல் பார்வையுடனும், மூக்கினால் விடுகிற சுவாசம சுழல்காற்றுபோல சகலமான வஸ்துக்களையும தூக்கி யாகாயத்தில எறிந்தும, பாதாளலோகம் வரையில் பிளக்கும் சிங்கங்களையும உடைத்தாயிருந்தது. இத்தகைய பன்றி யுருக்கொண்ட பகவானாயவன சமுத்திரத்தில் குதித்து, ஏழு கடலையும் கலக்கிச் சேறாக்கிய பின்பு இரணியாட்சதனைத் தேடிக கண்டுபிடித்து, சிங்கக் கொம்பினாலவனைக் கிழித்துக்கொன்று கடலுண்டிருக்கும அவனியைத் தன் கொம்பினால் தூணியாற்றூக்கி யெடுத்துவந்து பழையபடியாயிர சிரசையுடைய ஆதிசேஷன் தலையில வைத்தனன்.

அவ்விதஞ்செய்த வராகரூபியான மாதவன் தனது வெற்றியால மகா கர்வங்கொண்டு, பிரமம ஞானத்தை மறந்து, பர்வதங்களைத் தன கொம்பினால் குத்தித்தூக்கி யெறிந்தும, தேவாலயம், பட்டணங்கள் முதலியவைகளை யிடித்துத தள்ளியும, அநேக ஜீவன்களை வதைத்தும், திக்கஜங்களெட்டையும குத்தித் துரத்தியும், ஆகாசத்திலுலாவுகிற சப்தமேகங்களையும் நாலாபக்கமும சிதறிப்போகும்படி யடித்தும, பிரமாமுதலான தேவர்கள் யாவரும் நடுங்கும்படியாய் ஆர்ப்பரித்தும், பூமிகளைத் தனது மூக்கினால் பாதலம்வரையில் குத்திக்கோண்டி. அதஞ்செய்து திரிகிறதைக்கண்ட தேவர்கள் முனிவர்கள் அச்சமுற்று, இந்த இடுக்கண் விலகும்படி வெள்ளியங்கிரியை யடைந்து, துவாரத்தில் காவலாயிருக்கும் நந்திகேசுவரருடைய அனுமதிபெற்று திருசசன்னிதானத்திற் சென்று, பரமதயாபரனைக் கண்டு தரிசித்துப் பணிந்துபோற்றி, வராகவடிவுற்ற மாயவன்மாநிலத்தில் செய்யுமனியாயங்களை மறையாமல சொன்னார்கள். அதனைச் செவியுற்ற திரிபுராந்தகன் அத்தேவ முனிவர் வேண்டுகோளுக்கிரங்கி, அவர்களை யாபத்திலிருந்தும் விலக்க திருவுள்ளஞ்செய்து, ஓர் வேடனைப்போல் உருவாகி, வராகமிருக்குமிடத்தைத் நாடி, தமது வாக

யிற்றாங்கியிருந்த சூலத்தினால் வராகத்தின் கொம்பிற்குத்தி பூமியிலழுந்தியதன் கொம்பொன்றைக் கையால் பிடுங்கி யெடுத்தனர். அப்போது அதன்கை யொழிக்க வராகரூபியான மாயோன் பிரமம் ஞானமடைந்து, தனது பூர்வ நினைவு வரவே நிஜவுருவெடுத்து சங்கரனைத் துதித்துப் பிறகு பிரபஞ்சபரிபாலனத்துக்கும் போய்விட்டார். தேவர்கள், முனிவர்கள் பேரானந்தமடைந்து சிவபெருமானை வாயாரத் தோத்திரஞ்செய்து, வராகத்தினிடத்திலிருந்து பறித்த கொம்பை பகவானுடைய திருமேனியில் தரித்துக்கொள்ளவேண்டுமென்று வேண்ட, அவர் அவ்வாறே தரித்துக்கொண்டார். பிறகு தேவர்கள், திருமால் வராகவடிவேற்றதற்குக் காரணம் பிருகுமுனிவரிட்ட சாபமென்றுணர்ந்து, அவ்வாராக மூலமாகவே வராக புராணத்தைக் கேட்டுப் பின்னர் அவரவர் தமது இருப்பிடஞ்சென்று வாழ்ந்திருந்தனர்.

ஸ்ரீ பத்மபுராணே-காளிகாகண்டே.

உத்க்ருத்ய தம்ஷ்ட்ரம் தேவேசோ வராஹஸ்ய மஹாத்மன: ।
வராகஸ்யாங்க தாரிணோ ஹ்ருத்க்ருதா ஸ்ருஷ்டிகாரயவ: ॥

ஸ்ரீ லைங்கபுராணம்.

விஷ்ணும் தம் தம்ஷ்ட்ரம் ப்ரஸன்னம் ஸ்ருஷ்டா நாதோ ந விபீத: ।
ஜாதவிக்ரஹஸ்ய ஸ்ருஷ்டா க்ரோசஸ்ய நதத்ரஷ்டா ॥

நரசிம்ஹ சம்மாரம்.

ஹிரண்ய கசிபனென்னும் பெயரைப்படைத்த அசுரனொருவன் இராக்கத குலத்திற்றோன்றி, தனது குலகுருவாகிய சுக்கிர பகவானை யழைத்து உபசரித்து, "பரமகுருவே! யான் மகாபலிஷ்டனாகிப் பலகாலம் பாருலகில் வாழவேண்டுமானால், யாரைக்குறித்து வணங்கித் தவஞ்செய்யவேண்டுமென்று" வினவ, வெள்ளி, "அசுர சிரேஷ்டா! மதனனை யெரித்த மாலியைக் குறித்துத் தவஞ்செய்தால் உனது இஷ்டமான வரங்களைப் பெறலாம்" என்று சொல்லி அவ்வரவாபரணனைப் பணியும் பலவித மந்திரங்களையும்

கற்பித்துப் போயினர். அதன்பின், ஹிரண்யகசிபு சிவபிரானது திருவடிகளை ஹிருதயத்தில் வைத்து கணக்கற்ற காலந்தவஞ் செய்தபோது, பார்வதிரமணன் மகிழ்ந்து அவன்முன் தோன்றி, "உனக்கு வேண்டியது யாவை?" என, அசுரன் "அண்ணலே! பிருதிவிமுதலிய ஐம்பூதங்கள், சக்தி, பாணமுதலிய யுத்தக்கருவிகள், மற்ற வாயுதங்கள், தேவர்கள் மானிடர், மற்றப் பிராணிகள் இவை யொன்றாலும், இரவிலும் பகலிலும் சாகாவரம் வேண்டும்" என்று கேட்க, எம்பிரான் "அவ்வாறே யளித்தோம்" என அநுக்கிரகஞ் செய்தனர்.

தான்பெற்ற வரத்தினால் மகா கர்வத்தையடைந்த தானவன், பலகோடி யிராக்கதப் படைகளுடன் கிளம்பி மூன்று லோகங்களையுந் தனது வசமாக்கி, இந்திரன் முதலான அஷ்டதிக்குப் பாலகர்கள் தினம்வந்து தன்னைப் பணிந்துபோகவும், தேவஸ்திரீகளெல்லாம் தனக்குப் பணிவிடைசெய்யவும், பிரமன் முதலான சப்தரிஷிகளுந் தினந்தோறும் பஞ்சாங்கம் சொல்லவும், கருடர், காந்தருவர் சித்தர் வித்தியாதரர், யட்சர், கின்னரர் கிம்புருடர், மானிடர் முதலான சகலமானவர்களும் தன் பேரைக் கேட்கும்போது நடுங்கும்படியாயும் கொடுங்கோல் புரிந்தான். அக்காலத்தில் பிராமணர்கள் செய்யும் யஜ்ஞம், யாகம், தபசுமுதலான சகலமான வைதிகக்கிரியைகளையு மவன நாமத்தை யுச்சரித்தே செய்யவேண்டும்; மற்ற தேவர்களுடைய நாமோச்சரணஞ் செய்யக்கூடாது; யாகத்தில் (ஹிரண்யாயநம:) என்று தான ஆஹுதிகளைச் செய்யவேண்டும்; அவன் பெயரைச் சொல்லாமல் தேவர்கள் நாமத்தைச் சொல்லி பலிகள் கொடுத்தால், அவர்களை துன்பஞ்செய்து வந்ததால், தேவர், மனிதர் முதலான சகலமானவர்களும் அஞ்சி [ஹிரண்யாயநம:] என்கிற சொல்லிக்கொண்டு வந்தார்கள். உலகத்தில் தபசுகள் குறைந்தது; யாகங்கள் நின்றது; அவிர்ப்பாகமில்லாத தேவர்கள் பட்டினியால் வருத்தமடைந்தார்கள். பசியினால் துன்பமடைந்த தேவர்கள் லோக பரிபாலன கர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் சன்னிதானஞ்சென்று ஹிரண்ய கசிபுவினால் படும்வஸ்தையைத் தெரிவிக்க, சக்கிரபாணி, "தேவர்காள்! பயப்படவேண்டாம்; அகதிபோன் அவனுக்குண்டாகப் போகிற புதல்வனால் நாசமடை

யப் போகிறான்" என்று சொல்லித் தேவர்களை விடைகொடுத்தனுப்பிவிட்டார்.

சிலகாலஞ்சென்ற பின்பு ஹிரண்யகசிபுக்கு பிரஹ்லாதன் என்னும் தவப்புதல்வன் தோன்ற, அவனுக் கைந்துவயது வந்ததும், கிரமப்படி வித்தியாப்பியாசங் கற்பிக்க சுக்கிராசாரியிடம் விடுக்க, அவர் அவனுக்கு முதலில் [ஹிரண்யாயநம:] என்று உபதேசஞ்செய்தார். அதைக்கேட்ட சிறுவன் [ஸ்ரீநாராயணாயநம:] என்று சொல்ல, குரு, "இதென்ன விபரீதம்! இந்தச் சிறுவன் என்வாயில் மண்ணைப் போடுவன்போலிருக்கிறதே; நான் சொல்வதைவிட்டு இவன் வேறாகச் சொல்கிறானே; ஹிரண்யகசிபு கேட்டால் என்னையல்லவோ தண்டிப்பான்" என்று பயந்து, பிரஹ்லாதனுக்கு எத்தனைதரம் [ஹிரண்யாயநமா:] என்று போதித்தும், அவனதை யுச்சரியாமல் [ஓம் நாராயணாயநம:] என்று சொன்னான். இதைச் செவியுற்ற சுக்கிராசாரி சிறுவனுடைய தரக்கதியை அரசனிடஞ்செப்ப, அசுரன் வெகு நயமாகச் சிறுவனுக்குத் தனது நாமத்தை போதித்தும், அவனதை யுச்சரியாமல் [ஓம் நாராயணாயநம:] என்றே சொல்லிக்கொண்டிருந்தான்.

பிறகு அசுரன் மகாகோபமடைந்து, குழந்தையைப்பார்த்து, "அடா குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே! என் கீழ் ஏவல்புரிந்துவருகிற நாராயணன்பெயரை நீ சொன்னமையால், என் அருமைப்புதல்வனென்று இவ்வளவு நான்பொறுத்தேன்; இனிமேல்பொறுக்கமுடியாதென்று" அவனைக்கண்டந்துண்டமாகவெட்டி யெரியும்படி யுத்திரவளித்தான். அவ்விதமே கொலையாளிகள் குழந்தையை வெட்ட, கத்திகள் முறிந்துபோய் விட்டது; பூமியில் புதைத்து யானைக்காலால் இடறச்செய்தான்; யானை கூவிடமிகக் கீழ்விழுந்தது; குழந்தைக்குத் தீங்கில்லை; மலையினுச்சியிலிருந்து கீழேயுருட்டிவிடப் பாலன் பத்மநாபனைத் தியானித்துப் பஞ்சணையில் படுத்திருப்பதுபோல் கீழேவந்துசேர்ந்தனன். விடத்தையூட்டினன்; அமுதமுண்டவன்போல விளங்கின பாலனைப்பார்த்து ஹிரண்யகசிபு "நீ சொல்கிற நாராயணன் யார்? அவரெங்கேயிருக்கிறாரென்று" வினவப் பாலகன் "பிதாவே! அந்த நாராயணன், பரப்பிரமஸ்வரூபியாகிய பரம்பொருளேதவிர வேறல்ல; காரணபூதமாக நாராயணனென்று பெயர்வகித்திருக்கிறார்; அவரில்

லாதவிட முலகிலில்லை; அனைவருக்கும் நிறைந்தவா" என்று சொன்னான்.

"சாணிலுமுளனோர் பெற்றியணுவினைச் சதகூறிட்ட
கோணிலுமுளன் மாமேருக் குன்றிலுமுளனின்ற
தூணிலுமுளனீ சொன்ன சொல்லிலுமுளனிச் செய்தி
காணுதி விரைவினென்றா னன்றெனக் கனகன் சொன்னான்."

இவ்வசனத்தைக் கேட்ட ஹிரண்யகசிபு மகாகோபாக்கிராந்தனாகி தனக்குச் சமீபத்திலுள்ள தங்கத்தூணொன்றைத் தன் காலினா லுதைத்தனன். உடனே மேககர்ச்சனையைப் போலவொரு சத்தங்கேட்டது. சபையோரெல்லாம் திகைத்தார்கள். உதையுண்ட தூண் இரண்டுபிளவாக பிளக்கவே, அதிலிருந்து பகவான், மானிட சரீரத்தோடும், ஸிம்ஹத்தின் தலைபோன்ற சிரசோடும் நரசிம்ஹாவதாரமாக வெளிவந்தார். இதைக் கண்ணுற்ற அசுரன் பயப்படாமல், தனது இருகையிலு மிரண்டுகத்திகளை யுருவிக்கொண்டு, அந்த நரஸிம்ஹம் சமீபத்தில் வராதபடி வீசிக்கொண்டிருந்தான். சூரியன் மேற்றிசையி லிறங்கிக்கொண்டிருந்தான்; அப்போது பகவான் இனிமேல் பொறுக்கக்கூடாதென்றெண்ணி, கோடையிடி போல் கர்ச்சித்தார். அந்தக் கர்ச்சனையைக் கேட்ட வசுரன் திப்பிரமைகொண்டு மயங்கி யொன்றுந்தோன்றாமல் ஸ்தம்பம்போல அசைவற்று நின்றான். உடனே ஸ்ரீஹரி அவனது இருகைகளையும் பிடித்துத் தூக்கித் தமது தொடையிலிருத்திக் தமது கூரியநகங்களால் தானவன் மார்பைப்பிளந்து குடலைப்பிடுங்கி மாலையாகவணிந்து, ஒரு துளி யிரத்தங்கூடப் பூமியில் விழாதபடிப் பருகி அவனை மாய்ப்பித்தனர். (ஹிரண்யனை மாண்டவேளைக்கே இனிய வேளையென்பார். பிரஹலாதன் பகவானைத் துதிக்கப் போற்றினன். அவர் அவனுக்காசிகள் கூறிச் சென்றனர். பிறகு திருமால், மகாதுஷ்டனாகிய வசுரனுதிரத்தை யருந்தியதால், இரத்தவெறிகொண்டு மெய்மறந்து பூமியிலுள்ளோரை வாரிவாரிவாயிற்போட்டு மென்று தின்றனர். இரத்தங் குடிக்கப் பித்தமுமதிகரித்தது. தனது நிஜஸ்வரூபத்தை மறந்தனர். ஹிரணியகசிபுவைக் காட்டிலும் கோடிமடங்கு உபத்திரவத்தைச் செய்யவே தேவர்கள், ருஷிகள் மானிடர்கள் நடுங்கினார்கள். உலகத்தில் பிராணிகள் நாசமாயின. யாகங்கள் நின்றன. தேவாலயங்கள் அடைபட்டன. ஜனங்கள் வீட்டைவிட்டு ஓடியொளிந்தார்கள். தேவர்களினி யுலகழிய

மென்று பயந்து கைலாயஞ்சென்றுப் பசுபதியிடம் முறையிட்டார்கள். தேவர்கள் முறையைக்கேட்டப் பரமசிவன் அவர்களுக்கு அபயப்பிரதானங் கொடுத்தனுப்பிவிட்டு, தாம இரண்டுதலையும், இணையில்லாச் சிறகும, கூரியநகமும, எட்டுக்காலும், நீண்டவாலும், சமுத்திரம்போன்ற பேரிரைச்சலும், கடுங்கோபமுங்கொண்ட சரபரூபமாகத் திருவுருக்கொண்டு, நரசிங்கமிருக்குமிடத்திற்குச்சென்று, அதைப்பிடித்து சிரத்தையும், கைகளையும் அறுத்துத்தள்ளி, இரத்தம ஆறாயப்பெருக அதனமேலுட்காரந்து நரசிங்கத்தின் தோலையுரித்துத் தமது திருமேனியிற போர்வையாகத் தரித்துக்கொண்டு, சகலமான தேவர்களும போற்ற வெள்ளிமலையையடைந்தார்.

விஷ்ணுவுக்குப் பண்டைய நினைவு தோன்றத் தனது க்ருத்தியத்துக்கு வெட்கித் தனது நிஜஸ்வரூபத்தை யடைந்துப் பரமசிவனைப் பூசித்து, நரசிங்கபுராணம் போற்றித் தனதிருப்பிடமாகிய வைகுந்தஞ்சேர்ந்தனர். இரத்தவெறியா லெறுமாப்பையடைந்த நரசிங்கத்தைக் கொன்றமையால் பரமசிவனுக்கு (ஸிம்ஹக்னமூர்த்தி) யென்று நாமமுண்டாகலாயிற்று.

[illegible]

[illegible] ||

[illegible]

[illegible] |
[illegible] ||

முன்சொன்ன கதைகளினால் பிரம்மஸ்வரூபியான கடவுளொன்றென்றும், அந்தந்த சமயத்துக்கேற்றவிதமாய் உலகரட்சணார்த்தம் மும்மூர்த்தி ஸ்வரூபங்களாக விளங்குகிறாரென்றும், அந்த ஸ்வரூபங்களின் உண்மை தெரியாத மூடர்கள் இதுபெரிது இதுபெரிதென்றுபிதற்றுகிறார்கள். எந்தபிர்ம்மத்திலிருந்து நாமபேதமான ஸ்வரூபங்களுண்டாயிற்றோ, அவைகளெல்லாம் ஞானிகளுக்கு ஒன்றாகச்சேர்ந்து விளங்கும்.

சண்டேசோபாக்கியானம்.

உலகத்துக்கெல்லாம் நேத்திரம்போல் விளங்கப்பட்டதாய், அநேககோடி பிராமணர்கள், பசுக்கள், தேவாலயங்கள் இவைகளால் நிறைந்து சதாவடகமித்தாண்டவமாடிக்கொண்டிருக்கிறதாயும், வாழை, தென்னை, மா, பலா முதலிய விருட்சங்களின் புஷ்பங்களினின்றும் பெருகியோடுகிற மதுப்பிரவாகத்தால் கரைபுரண்டோடும் நதிகளாலும், இந்திரலோகம்போல் விளங்கப்பட்ட பல பட்டணங்களோடு கூடினதாயும், நாலுவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்குகலைக்கியானம் இவைகளைச் சந்தேகமறக் கற்றுணர்ந்த மகாவித்வான்களோடு கூடியதும், செல்வத்திலும், வைபவத்திலும் மகாமேன்மைபெற்ற சோழநாட்டிலே, ஆதியில் வேலாயுதக்கடவுள், கொடிய தீயோனாகிய சூரபன்மனைச் சம்மாரஞ்செய்யும் நிமித்தந் தென்றிசையை நோக்கிச் செல்லுகையில், ஜகத் கர்த்தாவாகிய சிவபெருமானை யாசித்த ஸ்தலங்களிலொன்றும்; மகா சிரேஷ்டமான பக்தர்களால் ஸ்தோத்திரஞ்செய்யப்பட்ட தேவாரத் திருப்பதிகம்பெற்றுள்ளதுமான திருச்சேய்ஞலூரில் பிராமண குலத்தில் காசிபகோத்திரத்தில் ஜனித்த யஜ்ஞதத்தனென்றொரு பிராமணசிரேஷ்டரிருந்தார். அவருடைய பத்தினியின் பெயர் பத்திரை. அத்தம்பதிகளுடைய மனதைச் சந்தோஷிக்கச் செய்யக் கூடிய விசாரசருமா என்னும் புத்திரசிரேஷ்டன் திருவவதாரஞ்செய்தனர். பெற்றோர்கள் தங்கள் புத்திரசிகாமணியை வெகு அன்பாய் வளர்ந்துவந்து, அந்தந்தக் காலத்தில் நாமகரணம், செளளம் அன்னப்பிராசன், உபநயனம் முதலிய கர்மங்களை வேதோக்தமாக அந்தக் குழந்தைக்குச் செய்து, ஏழாவது வயதில் மகாவித்வானாகிய வொரு ஆசிரியனைக்கொண்டு வேதம் முதலிய சகலகலைகளையுங் கற்பிக்கச்செய்தனர். குழந்தையோவெனில், பூர்வஜன்ம அறிவுத் தொடர்ச்சியால் வேதவேதாகமங்களைக் குருவினிடமிருந்து ஓதாது தாமே சுவயமாக கற்குமறிவு இளவயதிலேயே உண்டானதுபற்றி, குருவினுடைய சகாயமில்லாமலே யெல்லாங் கற்றுணர்ந்தனர். குருவும், பெற்றோர்களுமவரறிவிற்கு வியப்புற்று வானந்தமடைந்தனர்.

அப்பிள்ளையாகிய விசாரசருமர் கணக்கற்ற வேதாகமங்களிற் சொல்லப்படு முண்மைப்பொருளெல்லாம சர்வலோகசரண்யரும், ஜகந்நாதருமான சிவபெருமானது திருவடிகளைத் தவிர வேறில்லையென்றும், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம் அனுக்கிரஹமென்னுமைந்து கிருத்தியங்களுக்குக் காரணமாக ஆநந்தத்தாண்டவம புரியும் எம்பெருமானை நம்மையாளாக வுடையாரென்றும் உண்மையாயுணர்ந்தவராதலால், சகலவிதமான ஜீவன்களிடத்தும் வெருவையாயொழுகி வருங்காலத்தில், ஒருநாள் அவர் தம்மோடு வேதாத்தியயனஞ்செய்யும் அந்தணச் சிறுவரோடு அவ்வூரிலுள்ள பசுக்கூட்டங்களுடன் கூடச் செல்லுகையில், ஓர் முதலீற்றுப்பசுவொன்று அதனைமேய்க்கிற இடையனை அதனுடைய கூரியவிரண்டு கொம்புகளால் குத்தப்போக, அம்மாட்டாயன் கொஞ்சமேனும் பயப்படாமல் தன் கையிலிருந்த கோலினால் அதனை நன்றாய்ப்புடைத்தான். அதைநேரிற்கண்ட விசாரசருமர் சாஸ்திரங்களிற்கூறிய விஷயங்களை ஸ்ம்ருதி - அறியாமையாகிய முக்குற்றங்களு நீங்கத் தெளிந்தவராதலின் மனதில் மகாவருத்தமடைந்து, அவ்விடையனிடஞ் சென்று, "ஏ மூடா! உலகத்திலுள்ள சகலமான புண்ணியதீர்த்தங்களும், பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர்கள், ஆகிய மும்மூர்த்திகளும், இந்திரன் முதலான சகலமான தேவர்களும், மகாருஷிகளும் பசுக்களின் ஒவ்வொரு அங்கத்திலுமிருக்கிறார்களென்றும், சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்வதற்குரிய பஞ்சகவியங்களைக் கொடுப்பவையென்றும், சிவசாதனமாகிய திருவெண்ணீற்றுக்கு மூலம் அதன் சாணமென்றும், ருஷிகள் பிராமணர்கள் முதலானவர்கள் பிரதிதினஞ் செய்யும் ஹோமங்களுக்குச் சாதனமான நெய், பால், தயிர் இவைகளுக்குக் கொடுக்கக்கூடியதென்றும், ஹோமசாலைகள், தேவாலயங்கள் முதலியவற்றை யதன் கோமயத்தால் சுத்தஞ்செய்யவேண்டியிருப்பதாலும், நினைத்ததைக்கொடுக்கக்கூடிய காமதேனுவின் வம்சத்திலுற்பவித்த சகல தேவதாஸ்வரூபியான பசுவை நீ யறிவில்லாத்தனத்திலடித்துவிட்டாய்? இப்பசுக்கூட்டத்தை இனிமேல் நீ மேய்க்கவேண்டாம்; யானே மேய்த்து, அவைகளைச் சமீபத்திலுள்ள மண்ணியாற்றில் தோய்த்துக்குளிப்பாட்டி யவைகளை யாராதிப்பேனென்றார்." அவ்விடையன் அவர்சொன்ன வசனங்களைக்கேட்டுப் பயமுற்று அவரை நமஸ்கரித்துச் செல்ல, விசாரசருமர் அப்பசுக்களை

யுரியாரிடத்துச் சென்று, பசுக்களினிடையன் கையிற்படு மவஸ்தைகளை யவர்களுக்குத் தெரிவித்து, அவர்களனுமதி பெற்று, மறு நாள்முதல் அவ்வூர் பசுக்களைத் தாமே மேய்க்கவாரம்பித்தார்.

தினம் காலையில் கிராமத்திலிருந்து பசுக்களை யோட்டிக்கொண்டுபோய் மண்ணியாற்றங்கரையிலும், பசும்புற்கள் நிறைந்த மேய்ச்சற்றரைகளிலும் வயிராற மேய்த்து, பளிங்குபோல் நிர்மலமாயோடும் அந்நதியின் ஜலத்தை யருந்தச்செய்தும், உக்கிரமான வெயில்வேளையில் வடவிருட்ச முதலான விருட்ச சிரேஷ்டங்களின் தோப்பு நிழலிலிருக்கச் செய்தும், ஈ கொசு முதலியவைகளின் உபத்திரத்தை நீக்குமாறு ஓட்டியும், பசுக்களுக்குக் கடித்தவிடத்தில் தேய்த்தும், பகலோன மேற்குதிக்கிற் சென்று அவரது கிரணங்கள் கொஞ்சஞ் சமனமானதும் மறுபடியும் பசுக்களை யெழுப்பி ஆற்றிற்கோட்டிக்கொண்டுபோய் ஒவ்வொன்றையுந் தவறாமல் நன்றாய்த் தேய்த்துக்குளிப்பாட்டி, அந்நதிக்கரையில் விகசித்திருக்கும் புஷ்பங்களால் அவைகளை யலங்கரித்து, சூரியன் அஸ்தமனமாகுமுன் அவரவர் வீட்டிற்கனுப்பிப் பிறகு தன்வீடுபோய்ச் சேருவர். இதனால் பசுக்கள் அழகோடு விருத்தியடைந்து, வருடமொரு கன்றைத் தப்பாமலீன்று, முன் காட்டிலும் பதினமடங்கு அதிகமாகப் பாலைப்பொழிந்தன. பசுக்களின் பாத்தியஸ்தர்களும் அவைகள் முன்னிலும் அதிகமாகக் கறத்தல் கண்டு சந்தோஷமடைந்தனர். பசுக்கள் விசாரசருமரைக் கொஞ்சநேரமாகிலும் பிரிய மாட்டாதனவாயும், அவரைக்கண்டவுடன் மடிசுரந்து பால்பொழிவனவாயு மிருந்தன.

பசுக்கூட்டங்களை நிழலில் படுக்கவைக்கிற வெயில் சமயத்தில் விசாரசருமர், மகாஞானவானாதலால், பக்திமேலிட்டு அந்நதியில் ஸ்நானஞ்செய்து, சுசியாக அந்தவாற்றங்கரையிலுள்ள ஓர் மணற்றிட்டையில் அத்திமரத்தின் கீழ்மணலினால் ஓர் சிவலிங்கஞ் செய்து, கோயில் - கோபுரம் மதில் முதலியவை வகுத்து, அனேக விதமான பத்திரபுஷ்பங்களைக் கொய்து சிவார்ச்சனைசெய்து புதுக் குடங்களைக்கொண்டுபோய்ப் பசுக்கள் மடியின் கீழ்வைக்க, அவைகளந்தக்குடத்தைப் பாலால் சம்பூர்ணஞ்செய்த பிறகு, அவ்வமுதத்தைச் சிவலிங்கத்துக் கபிஷேகஞ்செய்வார்; அவருக்ககப் படாத தூபம், தீபம், நிவேதனம் முதலான பூஜாதிரவியங்களையும், ஷோடசோபசாரங்களையும் மந்திரபூர்வமாய் மானஸிகமாகச்செய்

து எவ்விதமான குறைவும், இடையூறு நேராதபடி செய்துமுடிப்பார். அவர்செய்த பூசைகளை சிவபெருமான் அவ்விலிங்கத்தினின்று மிக்க வனோடு ஏற்றுக்கொள்வார்; சிவாபிஷேகத்துக் காகப் பாலீன்ற பசுக்களதனால் குறையாமல் முன்போலவே வீட்டுக்கும் பால்கொடுத்துவந்தன. இவ்விதமாகவே விசாரசருமர் வெகு காலம் சிவார்ச்சனைசெய்து வருகையில் ஒருநாள் ஒருவன்பார்த்து அதனை யூராருடன் சொல்ல, அவர்களிற் சிலர் வேறொரு மாட்டாயனை யேற்படுத்தி யவனிடம் தங்கள் பசுக்களை யோட்டிவிட்டனர்; ஆனாலந்தப் பசுக்கள் முன்போலல்லாம லிளைத்துப்போய்ப் பால்கொடாததால் மறுபடியும் விசாரசருமரிடம் அவர்கள் மாட்டையோட்டிவிட்டார்கள். மறுபடியும் சிலர் அவர்செய்கிற பூசையைப் பார்த்து இதென்ன விபரீதம்! மாட்டைக் கறந்து மணலில் வார்க்கிறீர்! இதை யூராருடன் தெரிவித்தால் போதாது; அவனைக்கண்டிக்கக்கூடிய அவர் பிதாவுடன் சொல்லவேண்டுமென்று தீர்மானித்து, கிராமத்துக்குப் போய் ஊராருடன் சபையாருக்கறிவிக்க சபையார் விசாரசருமருடைய பிதாவாகிய யஜ்ஞதத்தனை வரவழைத்து "பிராமணசிரேஷ்டரே! உமது குமாரன் இளம்பருவத்தினால் வருத்தந்தெரியாமல் பசுக்களின் பாலைக்கறந்து மணலிற் சொரிந்து விளையாடுகிறானாம்" என்றுசொல்ல "யஜ்ஞதத்தன், நானிதுவரையில் அறிந்திலேன்; இனி யவ்விதம் நடவாதபடி பார்த்துக்கொள்வது என்கடமையென்று" சபையாருக்குச் சொல்லி விடைபெற்றனர்.

மறுநாளதபதிலதைச் சோதிக்கவேண்டுமென்றெண்ணி, விசாரசருமர் பசுமேய்க்கச்செல்லுகையில் அவரறியாமல்யஜ்ஞதத்தன் பின்றொடர்ந்துசென்று, அவர்மண்ணியாற்றின் மணற்றிட்டில் போனதுகண்டு, சமீபத்திலிருந்தகுராமரத்திலேறியொளித்திருந்தனன். வழக்கம்போல விசாரசருமர் ஸ்நானஞ்செய்து, சிவலிங்கமுதலியனவேற்படுத்தி, அந்நதிக்கரையிலுள்ள புஷ்பசெடிகளிலிருந்து பூஜைக்குவேண்டிய பத்திர புஷ்பங்களைச் சேர்த்துக்கொண்டு, பசுக்களிடங் குடங்கொண்டு சென்று, அவைசொரிந்த பாலைக் குடத்தோடுவைத்து, சிவார்ச்சனையை முடித்துப் பாற்குடங்களை சிவலிங்கத்துக் கபிஷேகஞ்செய்தனர். குராமரத்திலிருந்து இதையெல்லாம் பார்த்திருந்த யஜ்ஞதத்தன் அதைவிட்டிறங்கி விரைந்தோடிவந்து, வெகுகோபமாகப் புத்திரனைப் பல கொடுஞ்சொற்

கள் கூறி விசாரசருமர் முதுகிலடித்தனன். அவர் மனம் சிவார்ச்சனையி லழுந்தியிருந்ததால அவர் தந்தை அடித்தஅடி அவருக்குப் புலப்படவில்லை. யஜ்ஞதத்தன பலமுறைப புத்திரனை யடித்தும் அவரதை புண்ணராதகாரணம் சிவார்ச்சனையில் மனஞ்சென்றிருக்கிறதெனறறியாமல், முன்னினு மதிககோபத்தையடைந்து, பூஜைக்கு வைத்திருக்கும் உபகரணங்களை வாரி யிறைத்தும, பாற்குடங்களைக் காலாலுதைத்துப் பாலைப்பூமியிற் சிந்தியும பூஜாத்திரவியங்களை நாசஞ்செய்தனன். விசாரசருமர மகாகோபமடைந்து, செய்தவன் பிதா - குரு - பிராமணனென்றறிந்தும், அவன்செய்தது சிவாபராதமென்றறிந்து, அவன் காலைத்தறிக்கக் கருதி, அருகிலிருந்த ஓர் கோலையெடுக்க, அது மழுவாக மாற, அதனால அவன்கால்களை வெட்டி பாக்கிநின்ற சிவபூஜையைச் செய்துமுடித்தனர். சிவபெருமான அவர் பூஜைக்கும, அழுந்த பக்திக்கும சந்தோஷமடைந்து, ரிஷபாரூடராய் பார்வதியுடன் அவருக்குப் பிரசன்னமானார். விசாரசருமர் பேரானந்தமடைந்து, கண்களில் ஆநந்தநீர் ஆறாய்ப் பெருக பெம்மானது கமலடியைப் பணிந்து நமஸ்கரித்து, "மகாதேவா! சந்திரசூடா! பார்வதிமணாளா! கங்காதரா! திரிபுராந்தகா! ஸ்மராரி! காலாந்தகா!" என்று பலவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து நின்றவரை, பகவான், தமது பதமம்போன்ற திருக்கரங்களால் எடுத்து, "நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி, நாம் உண்டு கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே தந்தோம், தமது சடையிலணிந்திருந்த கொன்றைமாலையை யவருக்குச் சூட்டி சண்டேசபதவியைத் தந்தருளினார். காலவெட்டுண்டு இறந்தொழிந்துபோய பட்டுக்கொண்டிருக்கிற யஜ்ஞதத்தனுக்கும் காட்சிதந்து அவனுக்கு மோட்சத்தைத் தந்தருளினார்.

"தொடுத்தவிதழிசூழ்சடையார் துணைத்தாணிழற்கீழ் விழுந்தவரை
யெடுத்துநோக்கி நம்பொருட்டாலீன்றதாதை விழவெறிந்தா
யடுத்த தாதையினியுனக்குநாமென்றருள்செய்தணைத்தருளி
மடுத்தகருணையாற்றடவியுச்சிமோந்துமகிழ்ந்தருள.

அண்டபிரானுந்தொண்டர்தமக்கதிபனாக்கியனைத்து
முண்டகலமுமுடுப்பனவுஞ்சூடுவனவுமுனக்காகச

சண்டேசனுமாம்பதந்தந்தோமென்றங்கார்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர்சடைக்கொன்றைமாலைவாங்கிச்சூடினார்.

உஷா கல்யாணம்

முற்காலத்தில் மாபெலி சக்கிரவர்த்தியின புத்திரனாகிய ஆயிரங்கைகளையுடைய வாணாசுரனென்பவன் தனதுமனைவியாகிய சுப்பிரதீபிகையென்ற மகாபதிவிரதாசிரோன்மணியோடு நருமதைநதிக்கரையில் தினம ஆயிரம சிவலிங்கங்களைப பூசைசெய்துவருகையில், ஒருநாள் சிவபெருமான் அவனது பூசைக்கு சந்தோஷப்பட்டு அவன்முன்தோன்றி "அசுரசிரேஷ்டா! உனது பூஜைக்கு நாமமகா சந்தோஷமடைந்தோம்; உனக்கு வேண்டிய வரங்கேளென்று" சொல்ல, அதற்கு வாணாசுரன் பரமாநந்தமடைந்து, "அண்ணலே! இப்பூமண்டலமுழுதும அரசுசெலுத்தக்கூடிய வலிமையும, அக்கினியினால் சூழப்பட்ட மதிலையுடைய பட்டணமும், பலகாலஞ்சீவிக்கக் கூடியவயதும், தேவரீருடையபாதத்தில் அழியாதபக்தியும தந்தருளவேண்டுமென்று" இரக்க, சூலபாணியவ்விதமாகவே அவனுக்கநுக்கிரகித்து மறைந்துபோயினர். பிறகு வாணாசுரன் பதினாலுலோகங்களையும் தன் கைவசப்படுத்தி, தனது பிரதானபட்டணமாகிய சோணிதபுரத்தில மகாபராக்கிரமசாலியாக இராச்சியபரிபாலனஞ்செய்துவாழ்ந்துகொண்டிருக்கையில் ஒருநாள பக்திமேலிட்டு கருணாநிதியான சங்கரனைமறுபடியொருதரம நேரில் பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டுக் கைலயங்கிரியையடைந்தனன். அந்தசமயத்தில அரவாபரணன் ஆநந்தத்தாண்டவமாடுஞ் சமயமாயிருந்ததால, அசுரன் தனது ஆயிரங்கைகளாலு மிருதங்கம் வாசிக்க, பார்வதீரமணன் மகா களிப்புற்று "உனக்கு யாதுவரம்வேண்டும சொல்" என்றுகேட்க, அரக்கன் 'ஜகதீசா! அடியேன, அடிக்கடி திருக்கைலாயத்திற்கு வந்து, நந்திதேவருடைய பிரம்பாலடிபட்டுத் துன்புறுவண்ணம்விக்கினேசுவரர், சுப்பிரமணியர், பார்வதி யிவர்களு சமேதராய்த் தேவரீர் சதாகாலம் அடியேனுடைய அரண்மனையில் வந்து காட்சிகொடுத்து வீற்றிருக்கவேண்டும்" என்று கேட்க. ஜகத்கர்த்தாவாகிய பரமேசுவரர் அவன் பக்திக்கு வியந்து அவ்வாறே பார்வதி, கஜா

னன், ஷண்முகமிவர்கள் சகிதமாய் ரிடபத்திலேறிப் புறப்பட்டு சோணிதபுரத்துக்குப் போய் அங்கு வாணாசுரன் அரண்மனையில் இரத்தினங்களால் கட்டப்பட்ட ஓர்மண்டபத்தில் வாழ்ந்திருந்தனர். பிரதிதினம் வாணாசுரன் பகவானைத் தரிசித்து பேரானந்தத்தோடு யாதொரு குறைவின்றி அரசுசெலுத்தி வந்தனன்.

சதாகாலம் சாம்பசிவனைத் தரிசித்த மகிமையால் வாணாசுரன் மிகக்கர்வங்கொண்டு, இந்திரன் முதலான அஷ்டதிக்குப்பாலகர்கள், பிரம்மா முதலிய தேவர்களுடன் எதிர்த்துப்போர்செய்து அவர்களைத் தோற்கடித்து அவர்களுடைய நகரங்களையும் தனக்குள் வசப்படுத்திக் கொண்டனன். பிறகு திருமாலை நோக்கிச் செல்ல அவரு மோடியொளிந்தனர். அவரைத் தேடிக்காணாது வாணாசுரன் மிக்கமமதையடைந்து மகாதேவனிடஞ்சென்று, சுவாமி! அடியேனுக்கு அளவில்லாத புஜவலிமையைக் கொடுத்தமையால் எனது தோள்களின் தினவு தீரயுத்தஞ்செய்யும் வீரனொருவனையாவது பூலோகத்திலாகிலும், தெய்வலோகத்திலாகிலுங் காண்கிலேன்; அடியேன்மீது கிருபைசெய்து என்னுடன் போர்செய்து எனது தோளின் தினவைவாங்கக் கிருபைசெய்யவேண்டும்'' என்றுகேட்க, நீலகண்டன் புன்சிரிப்புகொண்டு, கொஞ்சமேனுமஞ்சாமல் யுத்தத்துக்கு அழைத்ததையெண்ணி "கிருஷ்ணன் துவாரகையிலிருந்துவந்து உன தோளின தினவுதீரயுத்தஞ்செய்வான்'' என, வாணாசுரன் "என்ன வாச்சரியம்! நான் அவனைப் பலதரம் யுத்தஞ்செய்ய வெதிர்த்துப்போனபோது ஊரைவிட்டோடிய கிருஷ்ணனா என் தோளின் தினவைத்தீர்த்து என்னை ஜயிக்கப்போகிறான்? என, அதற்கு, நித்யானந்தன "உன்னால் தோல்வியடைந்தோடின கிருஷ்ணன் உபமன்யு மகாமுனிவரிடம் தீட்சைபெற்று அவருபதேசஞ்செய்தபடி யிடைவிடாது என்னையருச்சித்து, உன்னைக்காட்டிலும் அளவிடக்கூடாத பலத்தையடைந்திருக்கிறான்'' என்றனர். இவ்வசனத்தைக் கேட்ட வாணாசுரன் "மகாப்பிரபுவே! அச்சண்டை யெப்போது நேரிடும்'' என்று கேட்க, உமாபதி "உன் மகள் உஷையின்மேல் பழியேற்பட்டும் உன் மயூரத்துவஜம அறுந்து விழுந்துபோவதுமே, சண்டையுண்டாவதற்குக் காரணமென்றறியவேண்டும்'' என்று சொல்ல, வாணாசுரன் கேட்டு மனமகிழ்ந்து தனரண்மனை சேர்ந்து வாழ்ந்திருந்தனன்.

இவ்விதமிருக்கும் காலத்தில், வாணாசுரனுக்கு மகாசுந்தர ரூபமுள்ள உஷையென்னும் செல்வப்புதல்வி யொருவளிருந்தாள். அவளுக்குத் தக்கவயது வந்தமையால், அவளைப் புருஷர் கண் பாராதபடி, மகா வலங்காரங்களமைந்த அரண்மனையின் ஏழாவது மாடியில் அவளை வைத்துத் தக்க பெண் காவலர்களை யமைத்து வைத்திருந்தனன். ஒருநாள் நித்திரைசெய்கையில், கிருஷ்ணமூர்த்தியினுடைய பேரனாகிய அநிருத்தனைக் கலந்து கிரீடைகள்செய்ததாகக் கனவுகண்டு கண்விழித்துப் பார்த்தபோது காணாததால் மகாசோகாக்கிராந்த சித்தமுடையவளாய் பித்தம்பிடித்தவள்போல் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவளுக்கு, அவள் தோழியாகிய சித்திரரேகை யனேக இராஜகுமாரர்களின் படத்தை யெழுதிக் காட்டியு மவள் வருத்தம் நீங்கவில்லை. கடைசியாக அநிருத்தன் சித்திரப்படத்தைக் காட்டினதும் "இவன்தான் என் நாயகன்" என்று குறித்துக் காட்டினாள். அதைக்கேட்ட சித்திரரேகை, இவன் கண்ணனுடைய பேரன்; மகாரூபவான்; அவனை யெப்படியாவது உன்னிடம் கொண்டுவந்து சேர்க்கிறேனென்று" உஷைக்குத் தைரியஞ்சொல்லிப் பிறகு சித்திரரேகை யிரவிற் துவாரகைசென்று, தனது மாளிகையில் மஞ்சத்தில் தூங்கிக்கொண்டிருக்கிற அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிக்கொண்டுவந்து சோணிதபுரத்தில் உஷையின் அந்தப்புரத்தில் சேர்த்தனள். அவனைக்கண்ட உஷை பரமாநந்தமடைந்து, அவனுடைய தூக்கத்தைப் போக்கி, அவனைக்கட்டி முத்தமிட்டு அவனுடன் கலந்து சரசசல்லாபஞ்செய்து இன்படைந்து வந்தாள். இவ்விதம் சிறிது காலமிருக்கையில் உஷை கர்ப்பந்தரித்தனள். உஷை யென்னமாயொளித்தபோதிலும் நில்லாமல், சோரபுருஷனோடு சேர்ந்து கர்ப்பவதியான சங்கதி வாணாசுரன் காதிற்கெட்டிற்று. வாணாசுரன் மகா கோபாக்கிராந்தனாகி, உஷையின் அந்தப்புரத்திலிருக்கிற அநிருத்தனைப் பிடித்து வரச்செய்து, "அடே துஷ்டா! நீயோ என மகளை மணந்து வாழத்தகுந்தவன்? உன் யோக்கியதை யெங்கே? என்னுடைய அந்தஸ்தெங்கே? நான் சகல புவனங்களையும் ஏகசக்கிராதிபதியா யாளப்பட்டவன்; என்னை யெதிர்த்துப் போர்முகத்தில் நின்று யுத்தஞ்செய்பவர் திரிலோகத்திலுமில்லை; உன்யோக்கியதையை யறியாமல் திருட்டுத்தனமாய் என்மகளைக் கூடினதற்கு உன்னைத்துண்டுதுண்டாகவெட்டியிருப்பேன்; ஆனால்

நீ சிறுவனாகவும், மகாசுந்தரமான வடிவோடுமிருப்பதாலே நட இராட்சதஸ்திரீகளுடைய கட்டாயத்தினாலிணங்கி யிவ்வபாதக்கதைச் செய்திருக்கிறாயென்று தோனறுகிறபடியால உன்னை மன்னித்தோம்; என்றுசொல்லி, பிறகு அவனைசிறைச்சாலையிலடைத்துவைத்தனன்.

அநிருத்தன் சிறையிலடைபட்ட சங்கதியைக்கேட்ட உஷை மகா கிலேசமடைந்து, சதாகாலமு கிருஷ்ணனைத் தியானித்து, "வாசுதேவா! ஜனார்த்தனா! ஜானகிவல்லபா! அச்சுதா! அநந்தசயனா! ஆபத்பாந்தவா! ஏழையாகிய என்மேரில் கிருபைபுரிந்து மகா துஷ்டனாகிய என் பிதாவை அதஞ்செய்து, என்னருமைக் கண்ணாளனாகிய உமது பேரனை என்வசம் ஒப்புவிக்கவேண்டுமென்று" பிரார்த்தித்துக்கொண்டிருக்க, அச்சமயத்தில் வாணாசுரன் அரண்மனையில் கட்டியிருந்த மயூரத்துவஜம் முறிந்துவிழுந்தது. இதுநிற்க துவாரகாபுரியில் அநிருத்தனைக்காணாமல் எங்குந்தேடித் திரிந்துகொண்டிருக்கிற சமயத்தில் நாரதமுனிவர் லோகசஞ்சாரஞ்செய்துகொண்டு துவாரகைக்கு வந்துசேர்ந்தார். கிருஷ்ணன அவரைக் கண்டதும் எழுந்து நமஸ்கரித்து அர்க்யபாத்திய வாசமனம் முதலிய உபசாரணைகளைச்செய்து ஆசனத்திலவரை யிருக்கச்செய்து பிறகு தானுமுட்கார்ந்து, நாரதரைப்பார்த்து "சுவாமி! தாங்கள் உலகசஞ்சாரியாயிருப்பதால் ஏதாவது அதிசயமுண்டோவென்று" கிருஷ்ணனவரைக் கேட்க, அதற்கு நாரதமுனிவர், "கேளப்பா! கிருஷ்ணா! நாம் சோணிதபுரத்துக்குப்போயிருந்தோம்; அங்கு வரசுசெலுத்துகிற வாணாசுரனுடைய மகளாகிய உஷையுடன் உன்பேரனாகிய அநிருத்தன் யாருமறியாமல் கூடினனென்றுவாணாசுரன்கோபமடைந்து அநிருத்தனைச் சிறையில் வைத்திருக்கிறான்; உஷை சதாகாலம் உன்னை ஸ்மரித்துக்கொண்டு அன்னவாகாரமில்லாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாள்" என்று சொன்னார். இவ்வசனத்தைக்கேட்ட கிருஷ்ணன் மகா கோபமடைந்து, நாரதரை நமஸ்கரித்தனுப்பிய பின்னர், தமது அண்ணனாகிய பலபத்திரருக்கு நாரதமுனிவரால் அநிருத்தன் சங்கதியைத் தெரிந்துகொண்டதைத் தெரிவித்து, அளவற்ற சேனைகளுடன் போர்க்கோலங்கொண்டு வாணாசுர சம்மாரார்த்தம் சோணிதபுரத்தையடைந்தனன்.

அப்பட்டணத்தின் முதல்கோட்டை வாயிலில் மூத்தபிள்ளையார் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, கிருஷ்ணன் "இவருடன் யுத்தஞ்செய்து ஜயித்து உள்ளேநுழைவது முடியாதகாரியம்; இவரைச்சந்தோஷிப்பித்துஇவரது கிருபையடைந்துபோனால் யாதொரு விக்கினமும் நேரிடாமல் ஜயமடையலாமென்று" உத்தேசித்து, கனிவர்க்கம், க்ஷீரான்னம், பாயசம், பலவகைப்பலகாரங்கள் இவற்றை யவருக்கு நிவேதித்து அவரையகமகிழச்செய்து அவரது உத்திரவுபெற்று முதற்வாசற்படியைத் தாண்டி யிரண்டாம்வாசற்படிக்குச் சென்றபோது, அங்கு வேலாயுதத்தைக்கையில்தாங்கிக்கொண்டு காவலாயிருக்கும் முருகக்கடவுளைக் கண்டனர். அவரையும பலவிதமாகப் பூசித்து அவருடைய விடையைப்பெற்றுப் பிறகு மூன்றாங்கோட்டை வாசற்படியில் வீற்றிருக்கும் உமாதேவியாரைக்கண்டு பணிந்து ஸ்தோத்திரஞ்செய்ய, அந்தம்மன் கிருபையோடு வழிவிட கிருஷ்ணன் தனது சேனைகளோடு உட்செல்லுகையில், நாலாவது கோட்டைவாசலில காத்துக்கொண்டிருக்கும் திரிபுராந்தகனைக் கண்டனா. அப்போது கண்ணனவரைத்துதிக்க, கங்காதரன, "கிருஷ்ணா ! முன்னொருகாலத்தில் மைநாக கிரியில் தவஞ்செய்துகொண்டிருநத திருமாலுக்கு யான் எதிர்த்துயுத்தஞ்செய்து தோற்றுப்போனதுபோல நடிககிறேனென்று கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்யவேண்டிய காலம் வந்திருப்பதால், நீயென்னை ஜயித்தபிறகே வாணாசுரனை யெதிர்க்கவேண்டுமென்றுஉரைத்தனர். இதைச செவியுற்ற கிருஷ்ணமூர்த்திக்குப் பண்டைய நினைவு தோன்ற, அவரும் யுத்தஞ்செய்வதாகவே தீர்மானித்தார். பவளமலையுடன் நீலமலையெதிர்த்தாறபோல நின்று, கண்ணனும் பரமசிவனுஞ் செய்த நாணொலி மூன்றுலோகத்திலுமுள்ள தேவர்கள், மனிதர்கள், நாகர்கள் முதலானவர்களுடைய காதுகளைசெவிடுபடச்செய்தது. சங்கரன் பிநாகமென்கிற தமது வில்லை வளைத்து நின்றார்; முதலில் இருவரும் ஒவ்வொரு பாணத்தினால் ஒருவருக்கொருவர வாதனைஞ்செய்துகொண்ட பிறகு கோடாகோடியான பாணங்களை ஒருவர்பேரிலொருவர் தொடுத்து மாயாயுத்தஞ்செய்யும்போது,இருவர்விட்ட பாணங்களும் நடுவில்ஒன்றோடொன்றெதிர்த்துத் தாக்கும்போது ஒன்றுக்கொன்றுபின்தாங்காமல்மோதி ஆகாசத்தில் கிளம்பி மேலேழுலோகங்களிலும் பரவி யங்கு இடமில்லாமல் எட்டுத்திக்குகள், பாதாளம் முதலிய விடங்களிலுஞ்

சென்று பதினாலுலோகங்களிலுமுள்ள தேவர்கள், மனிதர்கள் நாகர்கள்முதலானவர்களுக்கு அளவில்லாத அபாயத்தை விளைவித்தன. சகலமான ஜீவனகளும நசித்துப்போவதற்குரிய யுகாந்தம்போல் தோன்றிற்று. தேவர்கள், முதலானவர்கள் தப்பியோட விடமில்லாமல் திகைத்தனர். மானிடர்கள் உலகமுடிந்ததென்று எண்ணித்தவித்தனர். சமுத்திரங்கள் கரைகடந்தோடிற்று; பாணங்கள் கக்குகிற விஷத்தன்மைபோன்ற தீப்பொறிகள் ஜகத்தைக்கொளுத்தி நாசஞ்செய்தன; ஆறுகள் குளஙகள, ஏரிகள்முதலான ஜலாசயங்கள் வரண்டுபோயின; மலைகள் அடியோடு பெயர்ந்து கீழேசாய்ந்தது; இதுகளைக் கண்ட பிர்ம்மா முதலான தேவர்கள் விஷ்ணு ருத்திரனை ஸ்தோத்திரஞ்செயதார்கள். சிவபெருமான் தேவர்கள் செய்த ஸ்தோத்திரத்திற்கு மகிழ்ந்து சண்டையை நிறுத்த கருதி, கண்ணனெடுத்த திருவவதாரத்தில் வாணாசுரன் நாசமடையவேண்டியிருப்பதால், சர்வலோகசரண்யனாகிய சிவபெருமான ஜகத்ரட்சணார்த்தம் தாந்தோற்றுப்போனதுபோல நடித்து மறைந்தனா.

அதன்பின்னர் ஜயபேரிகை யடித்துக்கொண்டு ஆர்ப்பரித்து நிற்கையில், வாணாசுரன பரமசிவந் தோற்றுககண்ணனை ஜயசீலனாய் நிற்கிறதைக் கேள்விப்பட்டு மகா கோபங்கொண்டு கர்ச்சித்து ஆயுதபாணியாய் அளவில்லாத அவுணர் சேனைகளுடன அமர்க்களமடைந்து அச்சுதனை யெதிர்த்தான். அப்போது அசுரர்களுக்கும் யாதவர்களுக்கும் பெரும்யுத்தம் நேர்ந்தது. அந்த யுத்தத்தில் கண்ணன் வாணாசுரனுடைய வாயிரங்கைகளை யொவ்வொன்றாக வறுத்துத் தள்ளிக் கடைசியில் சிவபிரானைப் பக்தியோடு அர்ச்சித்த விரண்டுகைகள் மட்டும் எத்தனைவிதங்களான அஸ்திரங்களாலு மறுபடாமையைக்கண்ட கண்ணன் மனவருத்தங்கொள்ள, சிவபிரான் பிரசன்னமாகி, "வாணாசுரா! உன்தோள்களின் தினவு தீர்ந்ததா" வெனக்கேட்க, வாணாசுரன் வெட்கமடைந்து, "சுவாமி! அடியேன் அறிவில்லாத் தனமுள்ள அகந்தையால் அறிவித்ததைப் பொருத்தருளவேண்டு" மென்று கெஞ்சிக்கேட்டுக்கொண்டனன். அதன்படியே யுத்தத்தை நிறுத்தி, சிறையிலிருந்த அநிருத்தனைக் கொண்டுவந்து, அவனுக்கும் உஷைக்கும் மந்திரோக்தமாக வெகு விமரிசையோடு கல்யாணம் நடந்தது. தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள்; தேவதுந்துபிகள் முழங்கின.

வாணாசுரன் சிவகிருஷ்ணர்களுடைய அனுக்கிரகம் பெற்று, மறுபடி தனது வாயிரங்கைகளையும் பெற்றுக்கைலாயகிரியில் குடமுழாவெடுக்கும் பாக்கியம்பெற்றனன். அதனபின்னர் கிருஷ்ணன் பரமாநந்தமடைந்து தமதுபேரனையும் நாட்டுப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு சகல யாதவசேனைகள் புடைசூழ்ந்துவரச் சகலமான வாத்தியகோஷங்களோடு புறப்பட்டு துவாரகைபோய்ச் சேர்ந்து, அகமகிழ்ந்து வாழ்ந்திருந்தனர்.

இராமாயண படனமகிமை.

சாதாரணமாய் ஜனங்கள் யாதொரு கதை, சரித்திர முதலியவைகளைப் படிப்பதினாலுண்டாகக் கூடிய நன்மையை யடையாமல் கதையைமட்டுந் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். சிலர்படித்து அதன் நன்மையைத் தெரிந்துகொண்ட பிறகு கூட அதன்படி அனுபோகத்துக் கொண்டுவருகிறதில்லை. அந்தச்சரித்திரங்களை யெழுதினோர் ஜனங்களதைப்படித்து நல்லவழியிலொழுகவேண்டுமென்கிற கருத்துக்கொண்டே யெழுதியிருக்கிறார்கள். இராமாயணத்தைப்போன்ற உத்தமமான கிரந்தங்களில் அனேகவிதமான தர்மங்கள் நிரூபித்திருக்கின்றன. இராமசரித்திரத்தைப் படிப்பதினால், குருவினிடத்தில பக்தி, பிதாவாக்கியபரிபாலனம், இராஜாங்க நிர்வாகம் முதலான அனேகவிதமான உத்தமகுணங்களை ஸ்ரீ இராமனே காட்டியிருக்கிறார். முதலில் விசுவாமித்திர ருஷியுடன் கால்வருந்தக் காட்டில் நடந்து மகாதுஷ்டர்களான இராக்கதர்களைக்கொன்று அவர்செய்த யாகத்தைக் குறைவின்றிப் பூர்த்திசெய்வித்தார். இரண்டாவது தனது பிதாவாக்குப் பொய்யாகக் கூடாதென்று காட்டில் சென்றதும், புத்திரவாஞ்சையால் தசரதர் பிராணனை யிழந்ததும் மிகவும் சிலாகிக்கத்தக்கது. வாலி, இராவணன்முதலியவர்களைக் கொன்றதால் துஷ்டநிக்கிரகமும், தன்னைப்பணிந்த சுக்கிரீவன், விபீஷணன் இவர்களைக் காப்பாற்றினதால் சிஷ்டபரிபாலனமும், சகலமானசைன்னியங்களையு மிழந்து நிராயுதபாணியாய்த் திகைத்துநின்ற இராவணனை இராமசந்திரமூர்த்தி "அடே இராவணா! இப்போது உன்னைக்கொல்ல ஒருபாணம்போதும்; ஆனால் நிராயுதபாணியாயிருப்பவனைக் கொல்வது நியாயமல்

லு; ஆகையால் நீ இன்று உன்னரண்மனைசென்று மீதியானசைனியங்களோடு நாளையதினம் என்முன் வந்து யுத்தஞ்செய் ; இன்று உன்னைமன்னித்தோம்'' என்று, இராமன்சொல்ல இராவணன் வெட்கமடைந்து, "இன்றுதப்பிரேனென்று" எண்ணித் தனது மாளிகைபோய்ச் சேரும்படியாய் அனுமதிதந்ததானது பெருந்தன்மையைக் காட்டிற்று. ஒரு வெண்ணுண சொல்லுக்காகத் தமதுபத்தினியை யிழந்தும், சடாயு என்னும் பட்சி விசேஷத்துக்கு உத்தரகிரியைகளைச் செய்ததும், மேலான உத்தமகுணங்களை விளக்குகிறது. இதுமாதிரியாகவே ஒவ்வொரு கிரந்தங்களிலும் பலவிதமான நற்செய்கைகளைக் கூறப்பிக்கிருக்கின்றன. அந்தக்கிரந்தங்களில் சொல்லியிருக்கிறபடி நடந்தவா சிலரே. அவர்களும் சிலசமயங்களில் "தாங்கள்மகா பக்திவானென்று" எண்ணிக்கெட்டுப்போகிறார்கள். இராமசந்திரனுக்கு சதாகாலமூழியஞ் செய்துகொண்டு அவனைத்தியானஞ் செய்துகொண்டிருந்த அனுமார்கூட அகம்பாவத்தை யடைந்தபோது பங்கப்பட்டதாகக் கதையிருக்கிறது. அதாவது:—

அயோத்தியில் ஸ்ரீ இராமசந்திரமூர்த்தி யரசாட்சிசெய்து வந்தபோது, அனுமான "தன்னைப்போல பகவானுக்கு அந்தரங்கமான பக்தர்களொருவருமில்லை" யென்று நினைத்துக் காவங்கொண்டிருக்கிறதை யறிந்த இராகவன், அனுமானுடைய காவத்தை யடக்க விரும்பி யொருநாள் பக்கத்திலிருந்தவனுமானைப் பார்த்து, "ஆஞ்சனேயா ! இந்த மோதிரத்தை சீதையினிடங் கொடுத்துவிட்டுச் சீக்கிறமிங்கு வந்துவிடு" என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்தனுப்பினார். அனுமார் அந்த மோதிரத்தை வாங்கிக்கொண்டு விரைவாக ஓடும்போது வழியிலொரு கல்லில் காலிடற, அதினால் கால் விரல்களிலொன்றில காயம்பட்டு இரத்த வடிந்தது. அதைக்கண்ட வனுமார் "என்னுடைய காலைக் காயப்படுத்தின விந்தக்கல் லெத்தனை ஜனங்களையோ வருத்தத்திற காரணமாக்கியிருக்கும் ; ஆகையாலிதைப் பேயர்த்தெரிந்து போட்டுவிட்டுப் போகிறேனென்று" எண்ணி அந்தக்கல்லை நாலுபுறமு மசக்கிப் பார்த்து மசையாததால், தமதுகூரிய கைநகங்களால் அந்தக்கல்லைச் சுற்றிலும் பறிக்க வாரம்பித்தார். சுமார் மூன்று நான்குகஜ வாழம்பறித்தபின் கல்லசைந்தது. அந்தக் கல்லைப் பெயர்த்து வெளியிலெடுத்துப் போடப் புரட்டினபோது, அதற்

கடியில் ஒரு பிலத்துவாரமொன்றிருந்தது. அதைக்கண்டதும் அனுமார் அதிலிருப்பதைப் பரிசோதிக்கவேண்டுமென்கிற ஆவலுடனே அந்த பிலத்துக்குள் நுழைந்து வெகுதூரம் போனார். போகப்போக வொன்றுந்தோன்றவில்லை. பிலங் கருவிருளாயிருந்தது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு மறுபடியுஞ் சென்றார். அவ்விதம் வெகுதூரம்போனபின் அங்கொரு வெளிச்சந்தோன்றிற்று. அவ்வெளிச்சத்தை நோக்கிப் போனபோது, அங்கே வொரு பெரிய கோட்டையையும், அதற்குள்ளழகான வீதிகளையும், ஏழு எட்டுமெத்தைகளுள்ள ஆகாசத்தை யளாவிய வீடுகளையும், கோபுரங்களையும், தேவாலயங்களையும், பெரிய தடாகங்களையுங் கண்டார். அனுமார ஒருவீதி வழியாகச்சென்று பார்த்துக்கொண்டுபோகும்போதுஅங்கே வொருஅரண்மனையைக்டார். பட்டணங்களிலாவது அரண்மனை வாசலிலாவது ஒரு மனிதனையாவது, வேறு ஜந்துக்களையாவது காணவில்லை. "இவ்வளவு அழகானபட்டணத்தில் நிர்மானுஷ்யமாயிருப்பதற்குக் காரணமென்னவென்று" யோசித்துக்கொண்டே அந்த அரண்மனைக்குட் சென்றார். அங்குபெரிய வொருமண்டபத்தில்கட்டப்பட்டிருக்கிறவெகு உயர்ந்தசிம்மாசனமொன்றைக் கண்டார். அச்சிம்மாசனத்துக்கு முனவரிசை வரிசையாகவாசனங்கள்அமைக்கப்பட்டிருந்தன. அந்தமண்டபத்தில்எங்குபார்த்தாலும்இரத்தினங்களாற்செய்தவிளக்குகள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. அமராவதியைக் காட்டிலும் கோடிமடங்கு செல்வம்பொருந்திய அப்பட்டணத்திலும், இந்திர சபையைப்பழிக்கத் தக்க வழகுள்ள வந்த சபையிலாகிலும் யாதொரு ஜனங்களாவது அனுமார் கண்ணுக்குப் புலப்படவில்லை. இந்த வாச்சரியங்களைப்பார்த்துக்கொண் டப்புறம்போகும்போது அந்த மண்டபத்துக்குச் சமீபமாகவிருக்கிற வொரு அறையினின்றும் வீணைவாசிக்கிற சத்தங்கேட்க, உடனே அனுமார் அந்த வறையைப் போய்ப் பார்த்தார். அங்குவொரு பெண் சர்வாலங்கிருதத்தோடு மின்னற்கொடிபோல் ஓராசனத்திலுட்கார்ந்து திவ்வியமான கீர்த்தனங்களைச் சொல்லி வீணைவாசித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணைக்கண்டவனுமார், "அம்மா! இந்தப் பட்டணம் யாருடையது? இங்கு நிர்மானுஷியமா யிருப்பதற்கென்னகாரணம்? நீமட்டுமிங்கு தனியாயிருப்பானேன்?" என வினவ, அதற்கவள் "இது தேவர்களுடைய சிங்காரப்பட்டணம்;

சில சமயங்களி லிங்கு வேடிக்கையாக வந்துபோவார்கள் இதற்குக் காவலாக நானிருக்கிறேன்; இங்கு மானிடரொருவரும் வரக்கூடாது ; நீ ஸ்ரீ இராமனுடைய தூதனென்று உன்னை மன்னித்தேனென்று" சொன்னாள்.

இதைக்கேட்ட அனுமார், "ஆ! ஆ! என்னகாரியஞ் செய்தேன் ; இராமனனுப்பின வேலையைச் செய்யாமல்இவ்வளவுநாழிகைகால தாமதஞ்செய்துவிட்டேன் ; அவர் கொடுத்தனுப்பின மோதிரத்தையுமிழந்துவிட்டேனேயென்று" துக்கித்துக்கொண்டு, "அம்மணி! நான் இராமகாரியத்துக்காகச் செல்லும்போது வழியில் ஒருகல் என்காலிலிடறிக் காயப்படுத்தினதை யெடுத்தெறிய முயன்று கடைசியாக இங்குவந்தேன் ; என்னையேவிய காரியத்தையும் மறந்து, என் கையிற்கொடுத்த மோதிரத்தை யிழந்தவிடமுந் தெரியவில்லை ; தாங்கள் இராமதூதனென்று சொன்ன பிறகுதான் எனக்கு நினைவு வந்தது ; ஆகையால் நான் சீக்கிரந் திரும்பிப்போகவேண்டும்; காணாமற்போன மோதிரத்தைக் கண்டெடுக்கும் வழியைக் கற்பிக்கவேண்டுமென்று" கேட்க, அதற்கந்தப் பெண் "அதோ! தெரிகிற அறையில இராமனுடைய அளவற்ற மோதிரங்களிருக்கின்றன ; அவைகளிலொன்றை யெடுத்துக்கொண்டு இந்துவந்தால் பிறகு உன்னையிலகுவாக பிலத்துவாரத்துக்குவெளியிற்சேர்க்கிறேனென்று" வாக்குக்கொடுத்தாள். அவள்சொற்படியேமோதிரங்கள்நிறைந்தவறையைப் போய்பார்க்க,அங்கு அனுமானை முழுகச்செய்யக்கூடிய பெரியமோதிரங்கள் முதல் அவா கையிலணிந்துகொள்ளக்கூடிய சிறிய மோதிரங்களவரையிலிருந்தது. அந்த மோதிரங்களைப் பார்த்து அனுமார் ஆச்சரியப்பட்டு, தன் கைவிரலுக்குத் தகுந்த வொருமோதிரத்தைமாத்திரமெடுத்துக்கொண்டுதிரும்பியந்தப பெண்ணினிடம்வந்து, "அம்மணி! அந்தவறையிலிருக்கிற மோதிரங்கள் யாருடையது ; அவ்வளவு பெரிய மோதிரத்தைத் தரித்துக்கொள்ளக்கூடிய வருமுலகிலுண்டோ" என, அதற்கு வந்தமாது "ஆஞ்சனேயா! பகவான் சக்கரம்போலுருண்டுவருகிற இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொரு சதுர்யுகத்திலுந் தசஅவதாரமெடுத்து ஜனங்களைக் காப்பாற்றி வருகிறார்.ஒவ்வொருஇராமாவதாரத்தின் கடைசியில் அவர் மோதிரத்தை யிங்கு வைக்கிறவழக்கம் உன்னைப்போல அப்போதிருந்த அனுமாரந்தமோதிரத்தையிலங்கைக்குக் கொண்டுபோய் சீதையி

டங் காட்டியிருக்கிறார்; அந்தவளையில் குவித்திருக்கிற எண்ணிக்கையற்ற மோதிரங்க ளவருடையதுதானென்று" சொல்லக் கேட்ட வனுமான் வெட்கி, "நாமொருவன்தான் இராமனுக்கந்தரங்க பக்தனென்றெண்ணியிருந்தேன்; என்னைக் காட்டிலும் பெருத்த உடலோடும், அதிக பலத்தோடுங்கூடிய வெத்தனையோ அநுமாரிருந்திருக்கிறார்களென்று சந்தேக மறத்தெரிகிறது; நான் அடைந்திருந்த கர்வமின்றோடே நீங்கிற்றென்று" எண்ணிக்கொண்டு, அந்த தேவகன்னிகையைப் பார்த்து, "பெண் நாயகமே! நான் வந்து நேரமாகிறது; என்னை பிலத்துவாரத்துக்கு வெளியில் கொண்டுபோய்விடவேண்டுமென்று" கேட்க, அவ்விதமே அவனை பிலத்துக்கு வெளியில் கொண்டுபோய்விட்டாள். பிறகு அநுமார் இராமசந்திரனுடைய சமுகஞ்சென்று ஒன்றும பேசாமல் நின்றார். அநுமாரைககண்ட விராமன் "ஆஞ்சனேயா! சீதையிடம் மோதிரத்தைக் கொடுத்தாயா;" என்று கேட்க, அநுமார், "சுவாமி! என்னுடைய அகம்பாவத்தால் நான்தான் தங்களுககு அந்தரஙக பக்தனென்று காவங்கொண்டிருந்தமையால் அந்த கர்வம் நீங்கும்படி தாங்கள் மோதிரத்தைக் கொடுத்தனுப்பினீர்களென்று எனக்கு நன்றாக விளங்குகிறது; எனது அபசாரத்தைய பொருக்கவேண்டும்; சர்வஜ்ஞராகிய உங்களுக்கு என் முகவாட்டத்தின் காரணந்தெரியாதிருக்குமா" வென்று அவர் பாததத்தில் நமஸ்கரித்து நிறகிற ஆஞ்சனேயனை இராமசநதிரமூர்த்தி தேற்றியனுப்பினா.

ஆகையால் யாதொரு கர்வமில்லாமலும், தான் செய்யவேண்டிய பக்தி பூர்வமான காரியங்களைப் பிரதிப் பிரயோசனத்தை நினைக்காமலும், சகலத்தையும் ஈசுவரார்ப்பணஞ்செய்து வாழ்ந்திருககவேண்டும.

இரண்டு பக்தர்களின் சரித்திரம்.

வெகுகாலத்திற்குமுன் ஒருநாள் பிரதோஷ தினத்தன்று சாயந்திர மிருபிராமணச்சிறுவர்கள் சிவதரிசனஞ் செய்வதற்காகச் சமீபத்திலிருந்த வாலயத்துக்குப் போகும்போது நடுவழியில் அகஸ்மாத்தாய் மழைபெய்ய வாரம்பித்தது. அச்சிறுவர்களிலொரு

ருவன் மற்றவனைப் பார்த்து "சினேகிதா! நாம் சற்று மழைக்கு அதோ தெரிகிற வீட்டில் தங்கியிருந்து மழை சற்றுநின்ற பிறகு வாலயத்துக்குப் போவோமென்று" சொல்ல, அதற்கு மற்றொரு வன் பிரதோஷகாலந் தவறிப்போவதால் "நாமிங்கு நிற்கக்கூடாது; அதன்றியும் "நீ குறித்துக்காட்டிய வீடு தாசியினுடைய வீடான தால், அங்கு நம்மைப்போன்றவர்கள் தங்குவது தகாதென்று" சொல்லிவிட்டு, மழையை லட்சியஞ்செய்யாமல் ஓட்டமாக வோடி வாலயம்போய்ச் சேர்ந்தான். அவனுடைய சினேகிதன் மழைக்கஞ்சி யந்த தாசி வீட்டுவாசற்றிண்ணையி லுட்கார்ந்தான்.

கோயிலுக்குச் சென்றவன், சுவாமியினிடத்தில் பக்தியைச் செலுத்தியவனாயிராமல், தன்னுடைய சினேகிதனைப்பற்றி நினைத்துக்கொண்டேயிருந்தான். அப்பொழுது மனதினில், "நம்முடைய சினேகிதன் அந்த தாசி வீட்டுத்திண்ணையிலேயிருந்தால் அதுகண்ட தாசி அவனை மகாபக்தனென்று தெரிந்துகொண்டு அவனை வீட்டுக்குள் அழைத்துப்போய் மஞ்சத்தின்மேலேயிருத்தி, அநேக ஸ்த்ரீயோபசாரங்கள் செய்து, வீணைமுதலிய வாத்தியங்களை வாசித்து அவனுடைய மனதைச் சந்தோஷிப்பிக்கச் செய்து, அவனுக்குப் பலவித விநயங்களைச் செய்வாள், அப்பேர்ப்பட்ட பாக்கியத்தை யானடைவதற்கில்லாமல் இங்குவந்து விட்டேனென்று" எண்ணிக்கொண்டே வாலயத்தைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

இதுநிற்க, தாசிவீட்டுத் திண்ணையில் தங்கினவன் சற்றுநேரந் தாமதித்தும் மழையோயாததால், "நான் என்னுடைய சினேகிதன் பேச்சைக்கேட்டு அவனுடன் ஆலயத்துக்குச் சென்றிருந்தால், அவனைப்போலவே பகவானுக்குச் செய்கிற ஆராதனை முதலான ஷோடசோபசாரங்களையும் பார்த்து ஆநந்தப் பட்டிருப்பேன். அதோ! கண்டாமணி சத்தங்கேட்கிறது, இப்போது பகவானுக்கு அலங்கார தீபாராதனையாகும், அதைச் சகல பக்தகோடிகளெல்லா மாநந்தக்கண்ணீர்பெருக பகவானைத் தோத்திரஞ்செய்து பரமாநந்தத்தையடைந்தவர்களாயிருப்பார்கள், இப்போதீசுவரிக்கு தீபாராதனையாகும். என்னுடைய சினேகிதன் மகாபாக்கியவான்; அந்த தீபாராதனைகளைப் பார்க்கும்படியான பாக்கியத்தைப் பெற்றான்; இப்போது பகவான் பார்வதிசமேதராய் இடபவாகன

த்திலேயே வெளியில் வந்து பக்தகோடிக ளுப்பு[illegible] கொடுப்பார். சுவாமியைச் சுற்றிலும் பக்தர்கள் வாத்திய[illegible]லும், கானங்களாலும், வேதங்களாலும் பகவானுடைய [illegible] கோடி கல்யாணகுணங்களை வாயாரப்பாடி ஸ்தோத்திரஞ்செய்[illegible] பகவான் சகலமானவர்களுக்குந் தரிசனங்கொடுத்துக் காப்பாற்றுவார்" என்றுசொல்லி தனனுடைய புத்தியை யாலயத்தில் வைத்துக்கொண்டிருந்தான். மழைசற்றுநின்றது; உடனே புறப்பட்டு அவனுமாலயம்போய்ச்சேர்ந்து, அங்குதன்சினேகிதனைக்கண்டு, இருவருமாக சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு கோயிலை வலம்வருகையில, ஒரு பெரிய சர்ப்பமிருவரையுங் கடித்தது; அச்சர்ப்பத்தின் கொடியவிஷமிருவருடைய தலையிலேறி யிருவரையுங் கொன்றது. உடனே ஆகாசத்திலிருந்து ஒரு திவ்யமான விமானமொன்றுகீழேயிறங்கிவந்தது. அதைச்சுற்றிலும் பூதகணங்கள் சூழ்ந்து காத்துக்கொண்டிருந்தார்கள். அதேசமயத்தில் எமகிங்கரர்கள் சூலம் உலக்கைமுதலிய வாயுதங்களோடும் பாசக்கயற்றோடுங் குவந்திறங்கினார்கள். அந்த எமகிங்கரர்கள் அவ்விருபிராமணர்களில் தாசிவீட்டுத்திண்ணையில் தங்கியிருந்தவருடைய சூக்ஷ்மசரீரத்தை பாசக்கயிற்றால் கட்டி அவர்கள் கைகளிலிருந்த வாயுதங்களால் தொந்திரவுசெய்து எமலோகத்திற்கிழுக்கும்போது, சிவகணங்கள் எமபடர்களை நன்றாய்ப்புடைத்து, அந்தசூக்ஷ்மசரீரத்தை அவர்களிடமிருந்து மீட்டுத்தாங்கள்கொண்டுவந்த விமானத்தில் வைத்துச் சகலமானவாத்தியகோஷங்களோடு ஆகாசமார்க்கமாய்க் கைலாசம்போய்ச்சேர்ந்தார்கள். அங்கு சிவசன்னிதியில்போய்ச்சேர்ந்ததும் பரமசிவன் அவனை தமது பக்தர்களுடன் அவிடமே நித்யானந்தமாய்வாழ்ந்திருக்கும்படி அனுக்கிரகித்தார்.

இதுநிற்க, சிவகணங்களால் நன்றாயடியுண்ட எமதூதர்கள் தங்கள் வசமிருந்த சரீரத்தைசிவகணங்களிடம் ஒப்பித்து அவர்[illegible]விட்டுப்போன மற்றொருபிராமணனுடைய சூக்ஷ்மசரீரத்தைப் பிடித்துக்கொண்டு எமலோகம்போய் தர்மராஜனுடைய [illegible]யில் கொண்டுபோய்விட்டு, தாங்கள் சிவகணங்களால் [illegible] தையுஞ்சொன்னார்கள். அதைக்கேட்ட தர்மராஜன் [illegible] [illegible] கணக்கை வரவழைத்துசிவகணங்களால் [illegible]க்கொண்டுபோகப்பட்டவன், பாபஞ்செய்தவனா? [illegible]யஞ்செய்தவனா? "பார்த்துத் தெரிவிப்பாய் [illegible]

குப்தன் தனதுகணக்கைப்பார்த்து "சுவாமி! அவன் மகா சிவ பக்தன்; சலியாத புத்தியோடு ஈசுவரனையாராதிப்பவன்" என்று சொல்லிப் பிறகு எமதர்மராஜனுடைய உத்திரவுப்படியே யெமபடர்களால் கொண்டுவரப்பட்டவன மகாபாபியென்றுஞ் சஞ்சல புத்தியுள்ளவனென்றும். சிற்றின்பப்பிரியனென்றும சொல்லக் கேட்ட தர்மராஜன் அடேபடர்களே! நீங்கள் சிவகிங்கரர்களால் அடியுண்டது நியாயமே; இனிமேல் பக்தர்களிடம்போகாமலிருக்கவேண்டுமென்று கண்டித்துப்பிறகு வந்தப பிராமணனுக்குத் தகுந்த சிட்சை விதித்தார்.

ஆலயத்திலவ்விரு பிராமணசசிறுவர்களிறந்ததையும், அவர்களுடைய சரீரத்திலிருந்து வெளிக்கிளம்பின ஜோதிஸ்மயமானவிரண்டு சரீரங்களைக்கொண்டுபோகும் விஷயமாய் சிவகணங்களும் எமகிங்கரர்களும் ஒருவரோடொருவர் சண்டைசெய்து கடைசியாக சிவகணங்கள் எமதூதர்களை ஜெயித்து அவர்கள் வசத்திலிருந்த சூட்சமசரீரத்தை பலாத்காரமாய் மீட்டுத்தாங்கள்கொண்டுவந்த விமானத்திலேற்றிக் கொண்டுப்போனதையும் பார்த்திருந்தவர்களெல்லாரும் மகாவாச்சரியப்பட்டுப் பரமனைத்துதித்து அவரவர் கிரகத்தை யடைந்தார்கள்.

ஆகையால், ஜனங்கள் ஆலயங்களுக்குப்போவதினாலும், தபசுசெய்வதினாலும், பூஜைசெய்வதினாலும, தானஞ்செய்வதினாலும், மகாபக்திவான்களென்று அவர்களைச் சொல்லக்கூடாது. ஒரே சிந்தையாய் தங்களுடைய மனதைப்பகவானுடைய பாதாரவிந்தங்களில லயிக்கச்செய்து பூஜைமுதலிய சத்காரியங்களைச் செய்கிறவர்களைத்தான்பக்தர்களென்று சொல்லப்படுகிறது; கிளிப்பிள்ளைபோல் வேதாத்தியயனஞ்செய்து சுவரந்தப்பாமல் சொல்லத்தெரிந்துகொண்ட யாதொருகனபாடிக்கு அந்தவேதத்தின சூட்சமார்த்தங்களைத்தெரிந்துகொள்ளச்சக்தியிலலாதிருந்தால் அப்படிக்கற்றுக்கொண்ட வேதத்தினால் அடையவேண்டிய பலனையந்த கனபாடி யெப்படியடையமாட்டாரோ, ஒருவன் தன்னுடைய முன்னோர்களுக்கு இராஜாங்கங்களில் வித்வத்விஷயமாய்க் கொடுத்த சால்வைகள், பிருதுகள்முதலான இராஜாங்கக வெகுமானங்களை அவன் தரித்துக்கொண்டால், அவனுக்கு அவமதிப்பைத்தவிர மரியாதை யுண்டாகாதோ, தனது பெரியோர்கள் சம்பாதித்து [illegible]சொத்தை வைத்துக்கொண்டுப் பெருமை பாராட்டினும்

அவனுக்குப் பெருமையெப்படியுண்டாகாதோ, அதேமாதிரியா பக்தியில்லாமல் பூஜை ஜபம்முதலானது செய்தால் [illegible] யொழிய எவ்வித பலனையுங் கொடுக்காது. ஆதலால் நாம் பக்தி யோடு பகவானை யாராதித்தால, நமக்கு ஜகதீசன கிருபைபுரிந்து மோட்சத்தை யளிப்பார்.

சுபமஸ்து.

சிபிச்சக்கரவர்த்தி சரித்திரம்.

கடவுளானவர் தமது கிருபையினாலே, மூலப்பிரகிருதியில் அழுந்திக் கட்டுப்பட்ட ஆத்மாவுக்கு, கரசரணாதி அவயவங்களைக் கொடுத்துப்பூமியில் ஜெனிப்பித்து, போஷித்து, பரிபாலித்து பரமாத்மாவாகிய தமக்கும ஜீவாத்மாவுக்குமுள்ள தாரதம்மிய மிவ்வகைப்பட்டதென்று வேதாகமங்களின மூலமாகவிளக்கி, தம்மை யாராதித்து வழிபாடுசெய்ய அறியாத சக்தியற்ற ஆத்மாவானது அறிந்து ஆராதித்து வழிபடச்செய்தும், குளவி புழுவைத் தன்னுருவாக்குவதுபோல, தமது திவ்விய சொரூபத்தை அது மருவப்பண்ணியும, உலகத்தாரிடமிருந்து யாதொரு நன்மையும் பெறுதமேகமானது அவர்களுக்கு க்ஷேமமுண்டாகவருஷிப்பதுபோல,சர்வாந்தர்யாமியான கடவுளானவர் ஆத்மாவினிடத்திற்கைம்மாறுவேண்டாது, அடைதற்கரிய அசாத்தியமாய் ஒப்பற்றபெரியவீட்டின்பத்தை அடையும்படிசெய்யும் மஹோபகாரத்தை, "வான் செய்தநன்றிக்கு வையகமெனசெய்யுமதை மறந்திடாதே" என்றபடி யெப்பொழுதும் மறவாது தியானிக்கவேண்டும்.

தெய்வபக்தி தீவினைகளையகற்றும் ; தெய்வதரிசனம் பிறவிக் கடலைத்தாண்டுவதற்குரிய தெப்பம்; தெய்வத்தியானம் மோட்ச வீட்டிற்கேறும் படிகள்; பகவானுடைய கிருபை அஞ்ஞானவிருளையொழிக்கும் சூரியன்; தெய்வவணக்கம் நரகவாசலை மூடுகிற கதவு; தெய்வயுக்தியில்லாமல் உலகபாசமொழியாது; பகவத்தியானமில்லாமல் பாவந்தொலையாது; பகவானிடத்தில் பக்திசெய்யாமல், தத்துவவிசாரணைசெய்து, தாடிசடைவளர்த்து, தலையைமொட்டித்து ; தண்டகமண்டலமேந்தி, தவவேடம்பூண்டு திரிகிறவ

மோட்சமுண்டாகமாட்டாது. மோட்சமடையவேண்டுமானால், நிற்கநேரமில்லாமல் திரியும் நாய்போல, மனதை லோகாலோகமெங்கும் திரியவிடாமல் அடக்கி, தீவினைகளைச்செய்ய இடங்கொடாமலும் நிராசைகளைநீக்கி, பகவத்ஸ்வரூபத்தையுணரும் ஞானவானாகவேண்டும்.

"ஐயறிவுமிந்தவை யடங்கின வேனு
மெய்யறி விலாதவர்கள் வீடது பெறாரே"

என்றுஞ் சொல்லியிருக்கின்றது. "யேகமேவாத்வைதம்" என்றவாக்கியபடி, இப்பிரபஞ்சத்திலுள்ள சராசரங்களெல்லாம் ஒரே சுவரூபமாக ஞானிகளுக்குத்தோன்றினபோதிலும், யானைகண்டகுருடர்போல,

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண்டாரு மஃதே
வாள்கொண்ட கண்ணாயாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவு கண்டாரை யொத்தார்."

என்றபடி, அஞ்ஞானிகளுக்குப் பற்பலவிதமாகத் தோன்றி, அவரவர் தாம் தாம் கண்டதையே பொருளென்று மதித்து, அதற்குத்தக்க யுக்திசாதனங்களைக்கொண்டு வீணவாதாடுவார்கள். அதை சொல்லப்புகின் இங்கு இடம் போதாதாதலின்,

"எத்தேயத்தெத்திறத்தோ ரெவ்வருணத்தெவ்வுருவி னெண்ணியாய்ந்தார், அத்தேயத்தத்திறத்தோ ரவ்வருணத்தவ்வுருவி னவர்நேராவன், முத்தேவர்முதற்றொழி லுமுக்குணமுங்கடந்து மறைமுடிவின்முத்தி, வித்தாகித்தனிநின்ற பரப்பிரமப்பழம்பொருள்யான் மெய்க்கொள்வாயே."

என்ற பாட்டினாலும், கடவுள் ஒன்றென்றே ஏற்படுகிறபடியால், காரணார்த்தமாக பலவிதமாகத் தோன்றுகிற கடவுள் ஒன்றென்றே தெளியவேண்டுமல்லது, பலவென்று பிரமிக்கலாகாது. ஆகையால் பக்திவானானவன் எப்பொருளையும் தெய்வ ஸ்வரூபமென்றே மதிப்பான். அவ்விதம் பகவத் பக்திசெய்து மோட்ச சாம்பிராச்சிய பதவியையடைந்த சிபிச்சக்கரவர்த்தியின் சரித்திரத்தை இங்கு உதகரிப்போம்.

முன் திரேதாயுகத்தில், அயோத்தியில் சூரிய வம்சத்தில் ஜனித்த சிபிச்சக்கரவர்த்தியென்பவன், பொன், மணி, நெல் முத

விய மிதமற்ற திரவியபலத்திலும், மலையரண், மதிலரண், நீரரண் இவ நாலவகையரண்சூழ்ந்த ஸ்தானபலமும், அகண்ட ராச்சியபலமும், சமுத்திரம்போல அளவிறந்த ரதகஜ துரகபதாதிகளென்ற சதுரங்க பலமும், முப்பத்திரண்டு ஆயுதங்களையும் பிரயோகிக்கக் கூடிய மகா சாமர்த்தியமும், எதிரி முன்னின்று முன்வைத்த காலை பின்வாங்காமல் யுத்தஞ்செய்து சத்துருக்களைக் கண்ட துண்டமாக்கி வெல்லுகின்ற புஜபலமும், மனோபலம், காலபலம், ஆலோசனைபலம், நியாயபலம், காவற்பலம், சுற்றத்தாரின்பலம், வாக்குபலம் முதலான சகாயங்களோடும் மனுநீதி தவறாமல் இப்புவன முழுவதையும் செங்கோல் செலுத்திவந்ததால், மாதமும்மாரி பொழிந்து உலகத்திலுள்ள, மா, பலா, தெங்கு, கமுகு முதலான விருட்சங்களும், தேக்கு, சந்தனம், முதலான காட்டு விருட்சங்களும், தானியப்பயிர்களும், கொடி செடிகளும், பச்சைப் பசேலென்று வளர்ந்து, சுகந்தமான புஷ்பங்களால் உலகத்தாருக்கு ஆநந்தத்தைக்கொடுத்து, பலங்களையு மீன்றதால், உலகத்திலுள்ள சகலமான ஜீவராசிகளும் யாதொருகுறைவின்றி வாழ்ந்து வரும்படியாகச் செய்தும், தேவாலயம், முதலான இடங்களில் நித்யோத்ஸவம் நடக்கும்படியாய் ஏராளமான பொருளையீந்தும், உலகத்திலுள்ள நான்கு ஜாதிஜனங்களும் அவரவர் செய்யவேண்டிய கருமங்களைச் செய்துவரும்படியாய் அவர்களைப் பரிபாலித்து வந்தும், யாகம், தபசு முதலான காரியங்களைச்செய்து இந்திரன் முதலான தேவர்களைச் சந்தோஷிக்கச்செய்தும், மூன்றுலோகங்களையும் தனக்குப் பிள்ளைபோலப் பரிபாலித்து வந்தான், பிரஜைகளும் அரசனைத் தந்தைபோல வணங்கி நேசித்துவந்தார்கள்.

இதுநிற்க, ஒருநாள் தேவேந்திரனும் அக்கினிபகவானும், அந்த சிபிச்சக்கிரவர்த்தியின் மகா உத்தம குணங்களைச்சோதிக்கக்கருதி, இந்திரன் பருந்தாகவும், அக்கினிபகவான் புறாவாகவும், உருவெடுத்து, அந்தப்புறாவை பருந்து துரத்திக்கொண்டு வருகிற பாவனையாக முன்னும் பின்னுமாக சக்கிரவர்த்தியின் சபையை நோக்கி ஆகாசமார்க்கத்தில் பறந்துவந்தார்கள்.

சக்கிரவர்த்தி சபையோவெனில் கோடிசூரியப் பிரகாசம் போல தகதகவென்று கண்ணைக்கூசும்படி பிரகாசிக்கிற நவரத்தினங்களினால் இழைக்கப்பட்ட சுவர்களாலும், வரிசை வரிசையாகத் தொங்கவிட்டிருக்கிற நிலைக்கண்ணாடிகளாலும், விதம் விதமான

சித்திரப் படங்களாலும், சொல்லுதற்கரிய விசித்திரமான தோர ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அச்சபை நடுவில் அமைந்திருக்கும் உன்னதமான ஓர் சிம்மாசனத்தில் சக்கிர வர்த்தி வீற்றிருந்து தர்பார் நடத்திக்கொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் மந்திரி, பிரதானி, முதலான உத்தியோகஸ்தர்களும் இராஜாங்கவிஷயமாக நியாய நியாயங்களைக்குறித்துச் சொல்லிக் கொள்ளுகிறதற்காக அங்குவந்திருந்த பிரஜைகளாலும் சூழப்பட்டு, நீதிசெலுத்திக்கொண்டிருக்கும்போது, அந்தப்புறாவானது சக்கிரவர்த்தியை நோக்கிப் பறந்துவந்து அவரடியில் விழுந்து அவரைச் சரணமடைந்தது. அதற்கு, சக்கிரவர்த்தி "பயப்படாதே" என்று அபயப்பிரதானம் பண்ணினார். உடனே அதைத்துரத்திக் கொண்டுவந்த பருந்து சபையில் வந்து, "ஐயா! உம்மிடத்தில் அடைந்து பதுங்கிய புறாவைத்துரத்திவிடும்"; "நானதை வெகு நாளாகக் காத்திருந்து இன்று துரத்திவந்தேன்; பகவானால் எங்கள் ஜாதிக்குப்புறா ஆகாரமாகப் படைக்கப்பட்டிருக்கிறது; எனது ஆகாரத்தை நீர் எனக்குக்கொடாமல்மறைப்பதுபாவமாகும்" என்றது. அதற்கவர், "இது என்னைச் சரணமடைந்தது பற்றி இதை நானுன்கையிற் காட்டிக்கொடுக்கக்கூடாது" என்றுசொல்ல, அந்தப்பருந்து, "தேவரீர் உலகாளபவராகையால் எல்லாரையும் பொதுவாகவல்லவோ காப்பாற்றவேண்டும்? அவ்விதமில்லாமல் ஒருவரைமட்டும் காப்பாற்றி மற்றவரைக்கெடுப்பது அநியாயமாகுமே; நீரிப்போது புறாவைமட்டும் காப்பாற்றி என்னைப் பசியால் வருந்தும்படி செய்வது நியாயமாகுமா?" என்றது. சக்கிரவர்த்தி, "பட்சி சிரேஷ்டமே! நானுன்னை அநாதரணை செய்ததாக எண்ணவேண்டாம்; பசிக்குச் சாகமூலபலாதிகளிலெதையாவது புசித்தாலும் அது தணிந்துபோகிறது; புறாவின் மாமிசந்தான் வேண்டுமென்பதில்லையே"? என அதற்கு பருந்து "நாங்கள்சாகமூலபலாதிகளைத்தின்றால் எங்கள் சரீரத்திற்குப் பலமுண்டாகிறதில்லை; மாமிசமே எங்களுக்கு முக்கியமான ஆகாரமாயிருக்கிறதாகையால் எங்கள் ஜாதி சுபாவப்படி நானுணவுக்காகத் துரத்திவந்த புறாவை என்கையிற் கொடுத்துவிடவேண்டும்" என்று சொல்ல, பக்தன் "அப்படியானால் என்னால் அபயப்பிரதானம் பண்ணப்பட்டு என்னடைக்கலத்திலிருக்கின்ற இந்தப்புறாவை நீ விட்டு வேறெந்தப் புறாவையாகிலும் பிடித்துக்கொண்டு போகலாம்"

என, பருந்து, சுவாமி! என்னைக்கண்டமாத்திரத்தில் பட்சிகளெல் லாம பதுங்கிக்கொள்ளுகின்றன ;' நான்மூன்றுநாளாகப் பட்டினி யிருந்து இன்றுதான இந்தப்புறாவைக் கண்டுச் சந்தோஷமாய்ப் பசியாறலாமென்று துரததிவந்தேன்; நான் வருகிற மோப்பத் தைககண்டமிந்த பட்சிகளெல்லாம் மறைந்துவிடுவதால் தினம் ஆகாரங் கிடைககிறதிலலை" யென்று சொல்லிற்று. அவ்வசனத் தைக்கேட்ட சக்கிரவாத்தி, "பட்சி சிரேஷ்டமே! அப்படியானால் இந்தப்புறாவுக் கீடாக எநத மாமிசம வேண்டுமென்றாலும் கொடு க்கிறேன் ; அலலது திரவியம் வேண்டுமென்றாலும் தருகிறேன்" என்று சொலல, அந்தப்பருநது, "மண்டலாதிபதியாயிருக்கிற இ வா தமது ராஜாதிகாரத்தைககொண்டு நமமை யசசுறுத்தி ஓடி விடாமல் இவ்வளவுசாந்ததோடே பிரியவசனஞ்சொலலுகிறீரு ரே இவா சொற்படியேநாமகேட்போமென்று அவருககு இணங்கி உததரஞசொலலாமல், காட்டிலுள்ள மரஙகளின கிளைகளில் வசிக் கிற பரவைசசாதிககுப் பணமென்னத்திறகு ? நான் துரததிவந்த புறாவை விட்டுவிடுவதற்கு வழககெனன ? இதுதானா உமது ராஜ தாமம்" என்று சொலலிற்று. அரசன் "அடைக்கலமாகவந்து எனனை யடைநதவாகளை ஆதரியாமல பகைவர் கையில் பிடித்து க்கொடுப்பது மகா பாதகமாகையால் இது ஒனறு தவிர வேறெ தைக்கேடடாலும தடையிலலாமல கொடுககிறேன்" என்றுசொ ல்ல, படசி சிரேஷ்டம, "சுவாமி! எஙகளுககுப புறாவின மாமிசந் தான் அதிகப பிரியமானது; அதுவொழிநதால அதறகிரண்டா வது நரமாமிசத்தை யிசசிபபோமெனறு" சொல்லிற்று. இவ்வச னததைக்கேட்ட வரசன, "அவ்விதமே கொடுக்கிறேன" என்று ஒரு துலாவை நாட்டி ஒரு தட்டிற புறாவை வைத்து, மறுதட்டில் தனனுடைய தொடையின மாமிசத்தைக் கததியால அறுத்துவை த்தார். சபையிலுள்ளவாகளெல்லாம பரமாசசரியப்பட்டவர்களா ய் சககரவாததியைத தடுககபயப்பட்டுக்கொண்டு மௌனமாயிரு ந்துவிட்டார்கள். அரசன் சற்றேனும யோசனைசெய்யாமல் தமது கையில் கத்தியை எடுத்து தமது வலது தொடையின் தசையை யறுத்தெடுத்து துலாத்தட்டில் வைத்துத் தூக்கிப்பார்த்தபோது குறைந்ததனால், இடது தொடையிலுள்ள தசையையும் அரிந்து வைத்தான். அப்போதும் புறா வைத்திருக்கிற தட்டு கீழே இறங்கி தது. பிறகு சக்கரவர்த்தி தமது இருதோள்களின் தசையையும்

திறுவைத்தார்; அப்படியு மொவ்வாததால், பின்பு மார்பிலுள்ள தசையை யறுத்துவைக்க அதுவும் சரிப்படாமையால், அப்புறம் கண்டமுதல் பாதம் வரையிலுள்ள ஒவ்வொரு அங்கத்திலுள்ள மாமிசங்களையும் கூசாமலறுத்தறுத்து வைத்தும் புறாவின் தட்டு மேலெழும்பாததால், சக்கரவாத்தி தாமே தட்டிலேறி யுட்காரந் தார். அவரேறவே வேந்தனேறிய தட்டு வீழ்ந்தது, புறாவின் தட்டு பர்ந்தது. அதைக்கண்ட பருந்து, "கோமகனே! நான் வீணாசைப் படுகிறவனல்லன்; அதிகமானதை யான் எடுத்துக்கொள்ளச் சம் மதியேன்; புறாவின் எடைக்குச் சமமான மாமிசத்தைக்கொடுத் தால் போதுமென்று" சொல்ல, அரசன் தட்டைவிட்டிறங்கி மறு படி மாமிசத்தைமாத்திரம் நிறுத்துப்பார்க்க, அதுவுமதிகமாயிருந் தது. பிறகு கொஞ்சம் தசையை யெடுத்துப்பார்க்க அதுவு மதி கப்பட்டதால், வைத்த தசைகளையெல்லாஞ் சிறுகச்சிறுக வெடுத் துச் சும்மாவைத்துவிட்டுக் கடைசியில் கொஞ்சம் மாமிசத்தோடு நிறுத்துப்பார்த்தபோது எடை சரியாயிருந்தது அதைக்கண்ட வரசன், "ஓ பட்சிசிரேஷ்டமே! இனி நீர் திருப்தியாக வெடுத் துக்கொள்ளலாமென்று" சொன்ன சக்கரவாத்தியைப் பார்த்து அந்தப் பருந்து, "லோகபாலகா! நீர் ஏதோ துக்கப்படுவதாக உம்முடைய முகந் தோற்றுகிறது; அவ்வித துக்கத்துடன் கொ டுக்கும் மாமிசத்தை நானேற்றுக்கொள்வது உசிதமல்ல" என் றது. அரசன், "நாம் விசனமுற்றது வாஸ்தவந்தான்; எதற்காக வென்றால் இவ்வளவு தசையையும் நாம் தெய்வார்ப்பணமாகக் கொடுத்தும், அவ்வளவும் பிரயோசனப்படாமல், கொஞ்சம் மாமி சம் மட்டும் சத்விநியோகமாகி மற்றதெல்லாம் யாருக்கும் பிர யோசனமில்லாமல் போகிறதேயென்கிற வருத்தமே யொழிய வேறில்லை" யென்றார்.

அத்தருணத்தில் பருந்துருவாகவும். புறாவுருவாகவுமிருந்த இந்திரனும், அக்கினிபகவானும் தங்கள் நிஜரூபத்தை யெடுத்து அ ரசனுக்குப் பிரசன்னமாகி "ஜீவகாருண்யமும், ஈகையும், தர்மசிந் தனையுமுள்ள பூலோகேந்திரா! உனது பிரதாபத்தையும், தெய்வ பக்தியையும், நீதியையும் வெளியிடுதற்பொருட்டு திக்குபாலகர்க ளாகிய நாங்களிருவரும் புறாவாகவும், பருந்தாகவு முருமாறிவந் து உன்னைச்சோதித்தோம்; உன்னைப்போல் நீதிசெலுத்தி எவ்வி தக்குறைவுவாராமலுமாள்பவர் மூன்றுலோகத்திலும் கிடையாது;

மானிடர்களுக்கிருக்கவேண்டிய சகலவிதமான உத்தமகுணங்களு முன்னிடத்தில் நிறைந்திருக்கின்றன; உன்னுடைய மனோதைரியத்துக்கும், ஈகைக்கும் நாங்கள் அதிக சந்தோஷப்பட்டோம்; நீ செய்த காரியம் மகா வியக்கத்தக்கதாயிருக்கிறது; உனக்கு மேன்மேலும் சகலவிதமான பாக்கியங்களும் விருத்தியடையவேண்டும்" என்று அநேக வரங்களை யளித்து, சக்கரவர்த்தியின் சரீரத்தை சிரமுதல் பாதம்வரையில் தடவிக்கொடுத்தார்கள். உடனே வேந்தன் தேகம் முன்போலவாயிற்று. பிறகு அரசனும், சபையோர்களும், இந்திரனையும் அக்கினிபகவானையும் ஸ்தோத்திரஞ் செய்து கொண்டாடினார்கள். அவர்கள் அந்தர்த்தியானமாகப் போனபின்பு சக்கரவர்த்தி மகா சந்தோஷத்தை யடைந்து முன்போலவே அரசுபுரிந்து வந்தான்.

பூலோகபிரம்மாவின் கதை.

மானிடர்களிடத்தில் முக்கியமாயிருக்கவேண்டிய உத்தமகுணங்களில் மனோதைரியமும், சமயோசித புத்தியும் மேலானவைகள்; திடசித்தர்கள் அசாத்தியமான காரியங்களையும் வெகு இலேசாகச் செய்து முடிப்பார்கள், "தைரியவான் பலவான்" என்றபடி அந்த வொருகுணமில்லாவிட்டால் மற்றநற்குணங்களிருந்தும் பிரகாசியாது; நன்றாய் கற்றறிந்த வித்வான் சபையிற் சென்று பிரசங்கஞ்செய்யக்கூடாத சபைக்கோழையாயிருந்தால் அவனுடைய வித்தை குடத்தில் வைத்த தீபம்போல அவனுக்குள்ளேயிருந்து அன்னியருக்குத் தோன்றாமல் போய்விடும்; ஆகையால் மனோதைரியத்தினால் பெரியகாரியங்களைச் சாதிக்கலாம் அற்ப சாதகத்தைக்கொண்டு அடைதற்கரிய பதத்தையடைந்த ஒரு பிராமணனுடைய கதையை அடியிற்கண்ட ஒரு சுலோகத்தினால் விளக்கியிருக்கிறது.

[illegible] ।
[illegible] ॥

அதாவது:—ஹம்சத்தினுடைய உதவியால் பெண்ணையும், புலியினுதவியால் புரத்தையும், ஆமையின் சகாயத்தால் அங்குளீயகத்தையும், பிரமாவின் பதவியை தனது பிரதாபத்தினாலுமடைந்தான்.

சகலமான சாஸ்திரங்களையும் சாங்கோபாங்கமாய் கற்றறிந்து, குருகடாட்சம் பெற்று குருதட்சணை கொடுத்த பின்பு அவரனுமதிபெற்று தனது பிதாவின் கிராமத்தை நோக்கிவந்த விப்பிரனொருவர் வழியில் ஒரு கானகத்தைக் காலால் நடந்து கடக்க நேர்ந்தது அவர் குருகுலவாசியாயிருந்ததால் உலகவியாபாரமின்னதென்று தெரியாத பரமசாது; கானகத்தில் வெகுதூரம் போனபோது, அங்கொரு நீர்வற்றிய தடாகத்தைக் கண்டார்: அத்தடாகத்தின் நடுவிலுள்ள சேற்றிலிருந்து "காப்பாற்றும், காப்பாற்றும்" என்ற சத்தங்கேட்டது, அச்சத்தத்தின் காரணமின்னதென்று அறியக்கருதிய அந்தணர் அதனருகில் அணுகியபோது அங்கொரு அன்று கடந்த ஆமையைக்கண்டார். அவர் "கூர்மமே! ஏன் என்னைக் கூவியழைத்தாய், உனக்கென்னவாபத்து நேர்ந்தது? பயப்படாதே காப்பாற்றுகிறேன்" என, அதற்கக்கூர்மம், "ஐயா! நான் வெகுநாளாக இந்தத்தடாகத்தில் வாசஞ்செய்துகொண்டு யாதொரு துர்ப்பிக்ஷமுமின்றி காலங்கழித்து வந்தேன், இவ்வருஷம் மழையில்லாமல் வற்றிப்போன இந்தத்தடாகத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்த ஜலஜந்துக்களையெல்லாம் செம்படவர்கள் பிடித்துக்கொன்றுவிட்டார்கள்; யானொருவனே அவர்கள் கையிலகப்படாமல் தப்பினேன்; நாளையதினம் அவர்கள் மறுபடியும் வருவார்கள்; "ஓ புண்ணியபுருஷா! என்னை இச்சேற்றிலிருந்தெடுத்து வேறொரு ஜலாசயத்தில் கொண்டுபோய் விடுவாயாகில், நான் மகாராஜனுடைய புத்திரனானதால், தங்களுக்கு ஜலஜந்துக்களாலே தமது வேலை செய்யவேண்டியிருந்தால், அப்போது என்னை நினையும்; நானுடனே வந்து என்னாலானவுபகாரத்தைச் செய்யக்காத்திருப்பேன்" என்றது. கூர்மத்தின் வசனத்தைக்கேட்ட பிராமணன், பிரதிப்பிரயோசனத்தைப் புத்தேசித்துச் செய்யுங்காரியம் வீணென்று ஆலோசித்து, "கூர்மசிரேஷ்டா! உன்னுடைய உபகாரத்தை யான் வேண்டேன்; அப்படி உன்னை வேண்டும்படியான சமயம் நேர்ந்தால் அப்போது உன்னிஷ்டப்பிரகாரஞ்செய்யலாம்; எப்படியிருந்தபோதிலும் ஜீவரட்சணம் பிரதானமான தர்மமானதால், உன்னைக்காப்பாற்றுவது என்னுடைய கடமை என்று சொல்லி," அந்தச்சேற்றிலிறங்கி அங்கு புதைந்து போயிருந்த ஆமையை மெல்லவெடுத்து வெகுதூரங்கொண்டுபோய் சமுத்திரத்தில் விட்டுவிட்டார். கூர்மமும் விப்பிரனை வாழ்த்திச்சென்றது.

பிறகு அந்தப்பிராமணர் பின்னொருகாடு வழியே போகும்போது வேடர்கள் வீசிய வலையில் விதிவசத்தால் வீழ்ந்த ஹம்சம் விடுவிப்பவர் யாருமில்லையென்று ஏங்கித் தன்சுற்றத்தாரோடு கதறிக்கொண்டிருக்கிற சத்தத்தைக் கேட்டார். அச்சத்தம் வரும்வழியே அவர் போய் அந்த ஹம்சங்களைக் கண்டார். பரிவாரங்களோடு வலையில் அகப்பட்ட ஹம்சம் பிரமாவினுடைய வாகனமானதால், மனிதனைப்போல அந்த அந்தணரை அழைத்து, "சுவாமி! வேடிக்கையாக யான் சத்தியலோகத்திலிருந்து பூலோகத்திலுள்ள வேடிக்கைகளைப் பார்க்க இங்கு வந்தபோது, கோடாகோடி ஜந்துக்களை மாய்த்துக் குடிசையை நிரப்பிய கொடியோனாகிய வேடனொருவனால் விரித்த வலையில் அகப்பட்டுக்கொண்டு தப்பும்வழி தெரியாமல் திகைக்கிற சமயத்தில் தெய்வச்செயலால் தேவரீர் வந்துற்றீர்; எங்களைச் சிக்கிற இவ்வலையினின்று காப்பாற்றாவிடில் கிரகம்போன்ற கிராதகன் கூசாமல் எங்களைக் கொன்றுவிடுவான்" என்றது. ஹம்சத்தின் வசனத்தைக் கேட்ட விப்பிரன், உடனே வலைகளையறுத்து அவைகளை விடுவித்தார். ஹம்சராஜன், "அந்தண சிரேஷ்டரே! யான் பிரமனுடைய வாகனம்; இவர்கள் என்னுடைய சுற்றத்தார்கள்! மகானுபாவராகிய தாங்கள் எங்களுயிரைத் தப்பவைத்தீர்கள்; என்னை யெப்போது நினைக்கிறீர்களோ அச்சமயத்தில் என்னாலாகிய வுதவியைச்செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லிப் பின்னர் அந்தப்பிராமணருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு சத்தியலோகஞ்சென்றது.

அதன் பின்னர் அந்தத் த்விஜோத்தயர் அக்காடுவழியே வெகுதூரஞ்சென்ற பின் அங்கோரிடத்தில் ஒருபெரிய குழியில் விழுந்து எழச்சக்தியற்று ஏக்கம்பிடித்துப் பசியால் வருந்திக்கொண்டிருந்த வியாக்கிரத்தைக் கண்டார். அவர் அதைக்கண்டதும் மகா பயமுற்றவராய் ஓடத்தலைப்பட்டார். அவர் பயந்து ஓடுகிறதையறிந்த புலி, "ஓ சுவாமி! நான் துஷ்டமிருகமென்று பயப்பட வேண்டாம்; யானுமமைக்கொல்லேன்: யான் சாதாரணமான மிருகமல்ல; என்னுடைய துஷ்டநடத்தையால் சாபத்தையடைந்து புலிவுருவேற்றேன்; எனது பழைய நினைவுபோகவில்லை; என்னைக்காப்பாற்றும் காப்பாற்றுமென்று கதறின" சத்தத்தைக்கேட்ட வந்தணர், மனமிரங்கித் திரும்பிவந்து, "சார்த்தூலமே! நீ யென்னசொன்னபோதிலும் உனனை நம்பமாட்டேன்; நாய் வேஷம் போட்டா

ல் குறைக்காமலிருப்பது முடியுமா? அதுபோல இப்போது நீயே
ற்றிருக்கிற ஜாதிசுவாபம் விடுமோ? உன்னுடைய பூர்வோத்திரமெ
ன்ன? விரிவாயுரைப்பாய்" என, அந்தப்புலி, "சுவாமி யானொருக
ந்தர்வன்; பிரதிதினம் தேவலோகத்திலிருந்து இக்கானகத்துக்கு
வந்து மான் முதலிய மிருகங்களை வேட்டையாடி துமசனுஞ்செய்தே
ன்; அக்காலத்திலிங்கு தபஞ்செய்து கொண்டிருந்த மகாருஷியொ
ருவர் என்னுடைய கொடுங்கொழிலுக்குக் கோபமுற்று, "அடே
கந்தர்வா! நீ குற்றமற்ற மிருகங்களைக் கொலைசெய்து திரிவதால்,
"நீ சார்த்தூலமாகப் போகக்கடவது" என்று என்னைச் சபித்த
தட்சணமே இவ்வுருவெடுத்தேன்" என்றது. இவ்வசனத்தைக்
கேட்ட விப்பிர சிரேஷ்டர், மனமிரங்கித் தமது கைகளாலும், செடி
களாலும், மற்றவைகளாலும் அப்பர்குழியை நிறைக்க, அவைக
ளின் மேலேறிச் சார்த்தூலம் மேட்டிற்று, ஏறிவந்தப்புலி அந்தப்
பிராமணனைச் சுற்றிவலம் வந்து, "சுவாமி! என்னுடைய பலத்தினா
ல் இக்காட்டிலுள்ள சிம்ம முதலான சகல மிருகங்களையும் அ
டக்கியாண்டுவருகிறேன் அடியேனை எப்போதாவது தங்களுக்கு
வேண்டியதைச் செய்யக் காத்திருக்கிறேன், என் முது
கில் ஏறிக்கொள்ளும், நொடிக்குள் இக்காட்டைக் கடந்து நாட்டிலு
ங்களைச் சேர்க்கிறேன்" என்றது. பயந்துகொண்டிருந்த பிராமண
ன், தைரியமடைந்து அதன் முதுகிலேற, அதுவாயுவேகமாய்ப் பற
ந்து காட்டிற்கு வெளியில் விட்டு "சுவாமி! அதோ! தெரிகிறதே
கோட்டை, கோபுரம் மண்டபங்கள், அந்தப்பட்டணம் போய்ச்
சேர்ந்து, அதன் பிறகு தங்களிஷ்டப்படி செய்யும்" என்று
சொல்லிப்பிறகு அந்தப்புலி வந்த வழியே சென்றது.

வியாக்கிரம் போனபின்பு அதன் சொற்படியே அந்தப்பிரா
மணர் அப்பட்டணம் போய்ச்சேர்ந்து இராத்திரி யோரிடத்தில்
போஜனஞ்செய்து இராப்பொழுதைக் கழிக்கா மறுநாள் காலை
யில், தம்முடைய வித்வத்தை இராஜசபையில் காட்டித்தகுந்த ச
ம்மானம் பெறவுத்தேசித்து, தாமிறங்கியிருந்த வீட்டின் அந்தண
ரைப்பார்த்து, "சுவாமி, அரசனைக்காணவேண்டிய நற்சமயம் யா
து?" என்வினவ, அதற்கந்தவந்தணர், "ஓ வித்வசிரேஷ்டரே! அ
ரசன் கொஞ்சகாலமாக விசனமாயிருப்பதால், அவர் கொலுவுக்கு
வந்து அரசு செலுத்துகிறதில்லை; அத்துக்கம் தீர்ந்தாற்றான் வெ
ளியில்வருவார்" என, "அவ்விசாரம் யாது?" என வித்வான் கேட

க, அதற்கு அவர், அவனுக்கு வெகுநாள் புத்திரபாக்கியமில்லாமல் தவஞ்செய்து மகாகஷ்டமுள்ள ஒரு பெண்ணைப்பெற்று, அவளுக்குத் தக்க வயது வந்தும், சத்தியலோக வாசியாகிய பிரமனைத் தவிர மற்றொருவனையும் மணம்புரிகிறதில்லையென்று பிடிவாதஞ் செய்வதால், இவ்வெண்ணம் ஈடேறுமென்று அரசன் நினைத்து மயங்கிக்கொண்டிருக்கிறான். இப்பட்டணத்திற்கு அவளைத்தவிர வேறு வாரிசில்லை; அரசனோ மகாவிருத்தாப்பியதிசையிலிருக்கிறான்; அவளுக்கு விவாகம் முடிந்தால் பட்டம் அரசன் சந்தோஷத்தையடைந்து முன்போல் வித்வான்களுக்குச் சம்மானஞ்செய்வான்" என்றார். இவ்வார்த்தைகளைக்கேட்ட பிராமணன், தாமே அந்தப்பெண்ணை யெப்படியாவது கலியாணஞ்செய்து கொள்ளவேணுமென்று மனதில் நினைத்து, அன்று இராத்திரி பதினைந்து நாழிகைக்குமேல் அப்பட்டணத்திற்கு வெளியில் வந்து, ஹம்சத்தை நினைத்தார். உடனேஹம்சம் அவ்விடத்தில் வரவே அதன்மேலேறிக்கொண்டு, இராஜகுமாரியிருக்கும் அரண்மனையின் ஏழாவது மாடியில் போயிறங்கி, அந்த ஹம்சதூளிகாமஞ்சத்தில் படுத்துறங்கும் இராஜகுமாரியைக் கண்டார். அவள் நித்திரையைக் கெடுக்காமல் அவள்போட்டிருந்த சில நகைகளைக் கழற்றி எடுத்துக்கொண்டு, அங்குவைத்திருந்த சில ஆடையாபரணங்களையும் எடுத்துக்கொண்டு வெளியில்வந்து ஹம்சத்தின்மேலேறிக்கொண்டு தமதிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்.

மறுநாள் காலையில் இராஜன்பெண் எழுந்திருந்து பார்க்கையில் தன்னுடைய கழுத்திலணிந்திருந்த நகைகளும், வேறே சில வஸ்திராபரணங்களும் காணாமல் போயிருப்பதைக் குறித்துத் தன்னுடைய தாதிகளை விசாரித்ததில், அவர்கள் "அம்மணி! நாங்கள் வெகுஜாக்கிரதையாகத்தான் இரவுமுழுதுங் காத்துக்கொண்டிருக்கிறோம்; திருட்டுப்போனதைப் பார்த்தால், வெகுசாமர்த்தியமான திருடனால் இப்படிப்பட்டவேலை நடந்திருக்கவேண்டுமென்று" சொன்னார்கள். பிறகு அரசன்குமாரி "இன்றும் ஒருவேளை அவன் வந்தாலும் வருவான்; அவனைக் கைப்பிடியாகப் பிடிக்கவேண்டுமென்று" தாதிகளுக்குத் திட்டஞ்செய்திருந்தாள்.

மறுநாளிரவிலும் அந்தப்பிராமணன் இராத்திரி ஹம்சத்தை நினைக்க அதுவந்ததும், அதன்மீதேறி இராஜகன்னிகையின் அரண்மனைபோய்ச்சேர்ந்தார். சென்றதினம்போலவே அவள் படுத்தி

ருக்கும் அறைக்குட்சென்று மெல்ல அவள்படுத்திருக்கும் மஞ்சத்
தின்மீது உட்கார்ந்தார். இராஜகுமாரி உறங்காமலிருந்ததால்
கெட்டியாக அவரிருகரங்களையும் பிடித்துக்கொண்டு, "நீர்யார்?
இங்கு திருட்டுத்தனமாக வந்த காரணமியாது?" என், அதற்கு
அந்த வேதாந்தியாயி, "ஓ பெண்ணே! நீ இவ்வளவுநாளாக என்
மைக்குறித்து தபசுசெய்ததையால், உன் தபசுக்குச் சந்தோஷி
த்து உன்முன் தோன்றினேன். நேற்று இராத்திரியிலிருந்து நான்
வந்தும், நீ அயர்ந்து தூங்கினபடியால், நித்திராபங்கஞ் செய்யா
மல்போய்விட்டேன்," என அதற்கு அப்பெண் சந்தேகித்து, "நீர்
பிரமனானால், சதுர்முகமெங்கே? ஹம்சவாகனமெங்கே? சரஸ்வதி
தேவியெங்கே?" என்று வினவினள். "அடி பெண்ணே! தேவர்கள்
பூலோகத்திற்கு வரும்போது நிஜரூபத்தோடு வரலாமா? அதுவு
மன்றியில் ஒருமுகத்தோடு கூடிய மனிதர்கள் சதுர்முகத்தோடு
என்னைக்கண்டால் ஏளனஞ்செய்வார்கள்; என்னுடைய வாகனம்
அதோ வெளியில்விட்டிருக்கிறேன் பார்" என்று சொல்ல அவள்
உடனே பேசத்தெரிந்திருக்குமென்று நினைத்து அதற்குச் சமீபத்
தில் போய், "நீயார்? இங்கு யாருடன்வந்தாய்?" என்று அவள்
அதைக்கேட்டாள். அதற்கு ஹம்சம் "நான் பிரமாவினுடைய
வாகனம்; நான் இங்கு எனதுவயிற்றைக்காப்பாற்றிய என் எஜமான
னைத் தாங்கிவந்தேன்" என்றது. உடனே அவள் சந்தேகந்தீர்ந்து,
அறைக்குத் திரும்பிவந்து, "சுவாமி! இவ்வளவு நாளவரையில்
என்னையுபேட்சைசெய்து விட்டீரே" யென்று அவரை ஸ்தோத்
திரஞ்செய்து, இருவரும் காந்தர்வவிவாகஞ்செய்துகொண்டு சரசு
மாக இராப்பொழுதை நீக்கினார்கள். விடியற்காலத்தில் அந்த
விப்பிரனெழுந்து "பெண்ணே! யாம் அக்கத்தொழில்செய்யப்
போகவேண்டும்; தினம் இராத்திரி யிங்குவந்து உன்னைக்கூடிச்
செல்கிறோம்" என, அதற்கந்தப்பூங்குழலாள், "சுவாமி! தாங்கள்
எனக்குப்பிரசன்னமானதை யென் தந்தைக்குத் தெரிவிப்பே
னாகில் அவர் களிகூர்ந்து கலியாணத்திற்கு முகூர்த்தம்வைப்பார்.
அப்போது தாங்கள் என்னை யாருமறிய பாணிக்கிரகணஞ் செய்ய
வேண்டுமென்று", கேட்க, அதற்கவர் "அப்படியே செய்கிறோம்"
என வாக்களித்துச்சென்று, பிறகு ஒருநாள்வந்து சகலதேச
அரசர் முன்னிலையில், அப்பைங்கொடியாளை பாணிக்கிரகணஞ்
செய்து வாழ்ந்துகொண்டிருந்தார். இவ்விதம் வாழ்ந்துகொண்
டிருக்கையில், ஒருநாள் அவ்வூர் வேந்தனாகிய அந்தப்பெண்ணின்
தகப்பன் தன் மோதிரத்தை கழற்றி மேஜையில் வைத்த
வுடன், ஒரு காகம் அதை மூக்கிலெடுத்துக்கொண்டுபோய் சமுத்
திரத்தில் போட்டுவிட்டது. மோதிரம் போனதைப்பற்றி துக்கித்
துக்கொண்டிருந்த மாமனைக்கண்ட வந்தணர் "மாமா! இவ்வற்ப
சங்கதிக்காக ஏன் துக்கிக்கவேண்டும்? அந்தமோதிரம் பாதாள

இங்கிப்படியிருக்க, பிரமமா பூலோகத்திலுள்ள ஒருவரசன் பெண்ணை மணம்புரிந்து, அவ்வரசனுக்கு அற்புதமான காரியங் களைச் சாதித்துக்கொடுக்கிறாரென்கிற சங்கதி மூன்றுலோகங்களி லும் பரவிற்று. இதையறிந்த நாரதர், ஒருநாள் பிரமமலோகஞ் சென்று அவரைச்சேவித்து நிற்க, பிரமமா "நாரதரே! நீர் சஞ்சரிக்கும் லோகங்களில் ஏதாவது விசேஷமுண்டா" வென்று வினவ, அதற் கவர் "சுவாமி! தாங்கள் பூலோகத்தில் ஒரு இராஜகன்னிகையை மணம்புரிந்து [illegible] ஹம்சவாகனத்திலேறி அங்கு செல்வதைத் தவிர வேறு விசேஷமொன்றுங் காணேனென்று சொன்னார். அவ்வசனத்தைக் கேட்டு நான்முகன் ஆச்சரியத்தை யடைந்து, "நாரதரே! [illegible] பூலோகராஜகன்னிகையை நான் மணம்புரிந்ததாக யாரோ சொல்லக் [illegible], நாரதர், '[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கார் அந்தப்பிராமணனைக் கண்டு [illegible] 'சுவாமி! தாங்கள் பிரமமாவென்று நினைத்து இங்கு [illegible]; [illegible] அவர் முன்னிலையிற்சென்று சேவித்து நிற்க, [illegible] த்தாங்களைப் பார்த்தாலே சந்தேகமாயிருக்கிறது; ஒளியாமல் நிஜத்தைச் சொல்லவேண்டுமென்று' கேட்டார்.

அதற்கு அந்தப்பிராமண சிரேஷ்டர், வந்தவர்கள், பிரமமா நாரதரென்றறிந்து, தாம் [illegible] அதன் சகாயத்தால் இராஜகுமாரத்தியைக் கலியாணஞ்செய்து கொண்டது முதல் சகலவற்றையும் ஒளியாமல் சொல்லவே, பிரமமா முதலான சகலமானவர்களும் ஆச்சரியத்தை யடைந்தார் கள். இவ்விதிசயங்களை சமயோசிதமாகவும், தைரியத்துடனும் செய்ததுமல்லாமல், பொய்பேசாமல் நிஜத்தைச்சொன்னதற்காக, உம்மை பூலோகபிரமமாவென்று அழைக்கவேண்டியது என்று சொல்லி அவரை ஆசீர்வதித்து பிரமமா சத்தியலோகஞ் சென் றார். நாரதர் லோகசஞ்சாரார்த்தம் தமது வீணைத்தொனியுடன் கானஞ்செய்துகொண்டு புறப்பட்டுப்போய்விட்டார். ஆகையால் மனோதைரியமுஞ் சமயோசித புத்தியுமுள்ளவர்கள் புகழை[illegible] வார்கள்.

சுபமஸ்து